எல்_யா

ம. சோ. விக்டர்

எல்–யா

(சொல்லாய்வு நூல்)

ம. சோ. விக்டர்

போதி பதிப்பு வெளி

70, A/3 பிளாக், பாரதிதாசன் நகர்,

லாயிட்ஸ் ரோடு, சென்னை – 600 005.

போன்: 044–42040294 அலைபேசி: 08939200377, 09884950008

எல்—யா
(சொல்லாய்வு நூல்)

Dr. Ma.So. Victor, M.A., Ph.D.,
Cell : 9843273914

© ஆசிரியர்

முதல் பதிப்பு : ஜுலை 2007
இரண்டாம் பதிப்பு : சனவரி 2014
பக்கம் : 152
படிகள் : 1200

பதிப்பு :
போதி பதிப்பு வெளி
70, A/3 பிளாக், பாரதிதாசன் நகர்
லாயிட்ஸ் ரோடு, சென்னை - 600 005.
போன்: 044-42040294
அலைபேசி: 08939200377, 09884950008

வடிவமைப்பு :
எஸ். தனசேகர்

விலை : **125. 00**

அச்சிட்டோர்:
ஸ்ரீராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ்
15, தானப்ப தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 044-42664695, 90031 81586

Website : http://www.cict.in
Email : ramsay2@rediffmail.com
ramasamy.k@cict.in

Phones (O): 044-28448841
044-28442716
Fax : 044-28448888

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
இந்திய அரசு, மனித வள மேம்பாட்டு அமைச்சகம், உயர் கல்வித்துறை, மொழிகள் பிரிவு)
எண். 6, பாலாறு இல்லம், காமராசர் சாலை, சேப்பாக்கம், சென்னை - 600 005, இந்தியா

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(Government of India, Ministry of Human Resource Development, Department of Higher Education, Languages Division)
No. 6, Kamarajar Salai, Chepauk, Chennai - 600 0050, India

F.No. 11-264/CICT/2011-12/

Prof. K. RAMASAMY
Officer in Charge

This is to certify that Dr. Ma.So. Victor, M.A., Ph.D., known to me for the last twenty years, is a reputed scholar and researcher, who has been working on the ancientness and classicality of the Tamil language for the last twenty-five years. He has written about forty well-researched books running to more than 10,000 pages on the impact of Tamil Culture and Civilization on the Western nations during the pre-historic days as well as on the achievement of the ancient Tamils in various branches of knowledge including science, mathematics, astronomy, theology and sociology.

Dr. Ma.So. Victor is a very distinguished etymologist, who has been steadily making substantial contributions to ancient Tamil studies. He has explained with suitable illustrative examples how the roots of several hundreds of words in world's languages are to be found in Tamil. He has presented learned papers in numerous seminars and conferences and published scholarly articles in a number of

standard journals and magazines. He has now been invited to give lectures by the Tamil Organisations in Italy, France, Germany, Norway and other European nations.

Central Institute of Classical Tamil, Chennai, has granted a sum of Rs.2,50,000/- for his research project on "Tamil and Western Semitic Famlily of Languages".

We hope and trust that Dr. Ma.So. Victor will receive the international encouragement he deserves.

K. Ramasamy

(K. RAMASAMY)

பொருளடக்கம்

எல்-தெய்வம்	13
ஞாயிறு	13
எல்தெய்வம்	30
இசுரா-எல்	59
இலவனின் எல் தெய்வம்	62
எல் கடவுளின் வேறு தோற்றங்கள்	66
எல்சடை	68
கிரேக்க நாடு	70
யா - தெய்வம்	76
யா - நீர்	80
அடிக்குறிப்புகள்	109
திருச்சி தூயவளனார்க் கல்லூரியில் நூலாசிரியர் ஆற்றிய உரை	120
இடன் தோட்டம்	135
நோவா	137
ஆபிறகாம்	139
சொற்பட்டியல்	141
நூற்பட்டியல்	147

○○○

ஆசிரியர் உரை

கி.மு. 12000 ஆண்டுகளிலேயே தமிழ் மொழி வரிவடிவங் களைப் பெற்றிருந்ததும், தமிழில் சொற்கள் பலவும் அவ் வரி வடிவங்களால் எழுதப் பெற்றிருந்ததும், அண்மையில் கிடைத்த அகழ்வாய்வுகள் வழியே வெளிப்பட்டுள்ளன. இக்கால அளவு களில் உலகின் எந்த மொழியும் வரிவடிவங்களைக் கொண் டிருந்ததாக அறிய இயலவில்லை. கி.மு. 12000 ஆண்டுகளில் குமரிக்கண்டத்தின் பெரும் பகுதிகள் நீரில் மூழ்கிப் போயின என்ற செய்திக்கு அண்மையில் கிடைத்த சான்றுகள் வலு வூட்டுவதாக உள்ளன. இன்றும் கூட, திருகோண மலைக்குக் கிழக்கேயுள்ள கடற்பகுதியில், பல பெரும் நகரங்கள் நீரில் அமிழ்ந்து போனதற்கான தடையங்கள் காணப்படுவதாகச் செய்திகள் கூறுகின்றன. முறையான கடல் அகழ்வாய்வு இந்து மாக்கடலில் மேற்கொள்ளப்பட்டால், அழிந்துபட்ட குமரிக் கண்டம் பற்றிய பல்வேறு செய்திகளை அறிய இயலும்.

குமரிக்கண்ட அழிவுக்கும், தமிழரின் மேலை நாட்டுப் பரவலுக்கும் தொடர்புண்டு. குமரிக்கண்ட அழிவின் போது தப்பிப்பிழைத்த மக்கள், நிலங்கண்டவிடங்களில் குடியேறினர். அக்குடியேற்ற நாடுகளாக சிந்துவெளி, பார்த்தீயம், பாபிலோன், எகிப்து, எத்தியோப்பியா, தான்சானியா போன்ற நாடுகள் அறியப்படுகின்றன. இன்று நாம் வாழும் தமிழகம் கூட, அக்குடியேற்ற நாடுகளில் ஒன்றாகவே அமைந்திருக்க வேண்டும். சிந்துவெளி நாகரிகம் கி.மு. 3000 ஆண்டுகளில் நிலைபெற்றிருந் ததாக 50 ஆண்டுகளுக்கு முன்பு உணரப்பட்டது. தற்போது அதன் அகவை கி.மு. 7500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. அது மேலும் உயரக் கூடும் என்பதற் கான சான்றுகளும் கிடைத்து வருகின்றன. சிந்துவெளி நாகரிகம் கி.மு. 12000 ஆண்டுகளில் தோன்றியதே என்பதை உறுதிபடக் கூறலாம்.

பாபிலோனில் சின்னாற்றங்கரையில் குடியேறிய தமிழர்கள், அங்கு தமது மொழியையும், பண்பாட்டையும், நாகரிகத்தை யும் வளர்த்தனர். குமரிக்கண்டத்துத் தமிழ்ச் சமயம் பாபி லோனிலும் கடைப்பிடிக்கப்பட்டது. குமரிக்கண்ட அழிவின் போது, நகரிய நாகரிகத்தில் சிறப்புற்றிருந்த தமிழர்கள், தாங்கள் குடியேறிய நாடுகளிலும் பெரு நகரங்களை அமைத்துக் கொண்டனர். வானுயர்ந்த கட்டிடங்களையும் உருவாக்கிக் கொண்டனர். கி.மு. 10000 ஆண்டுகளில், மேற்சொல்லப்பட்ட நாடுகளில் தமிழரே வாழ்ந்திருந்தனர்.

மேலை நாடுகளில் தமிழர் குடியேற்றங்கள் தோன்றி யதைப் போன்றே, கீழை நாடுகளிலும் தமிழர் குடியேற்றங்கள் நிகழ்வுற்றன. இன்றுள்ள தெற்காசியப் பகுதிகளிலும், ஆத்திரேலியாவிலும் கூடத் தமிழர்கள் குடியேறினர். ஆத்தி ரேலியப் பழங்குடியினராக இன்று அறியப்படும் மக்களின் மொழி, ஒலிப்பிலும் பொருளிலும் தமிழோடு தொடர்புடை யதாக, ஆய்வாளர்கள் கருதுகின்றனர். செம்மைத் தரை நாடு (செம்மண் நிலம்) என அறியப்பட்ட அக்குடியேற்ற நாடு, பிற்காலத்தில் செமித்திரா - சுமத்திரா எனத் திரிந்தது எனலாம். மலைகள் சூழ்ந்த நாடு மலாயா என்றும், பொருனை நாடு போர்னியா என்றும் திரிபு பட்டன. கி.மு. 10000 ஆண்டுகளில், நடுத்தரைக் கடல் நாடுகள் தொடங்கி இன்றுள்ள இந்தோ னேசியா வரையிலான பகுதிகளில் தமிழரே வாழ்ந்திருந்தனர். இக்கருத்தை வலியுறுத்தும் வகையில், டாக்டர் உலகவாரி (Dr. Lehovary) என்ற மேலை நாட்டு மொழியில் அறிஞர், இசுபானியம் (Spain) தொடங்கி இந்தோனேசியா வரையில், ஒரு காலத்தில் திராவிடர்களே வாழ்ந்திருந்தனர் என்று கூறுகிறார். இன்றும் இந்நாடுகளுக்கிடையிலான மொழிகள் யாவும் தமிழின் வேரையும் மூலத்தையுமே கொண்டுள்ளன எனத் தெளிவுபடுத்துகிறார்.

கி.மு. 20000 ஆண்டுகளிலேயே, தமிழ் முதிர்ச்சி பெற்ற மொழியாக விளங்கியது என்பது தேவநேயப் பாவாணர் போன் றோரின் கருதுகோளாகும். அக்காலத்தில் வழக்கிலிருந்த பல சொற்கள் காலப் போக்கில் மறைந்து போயின. மாறிவரும் புதிய சூழல்கள், கண்டு பிடிப்புகளுக்கேற்ப, புதிய புதிய சொற்களும் தமிழில் தோன்றின. தொல்காப்பியர் காலத்தில் வழக்கிலிருந்த சொற்கள், கடைக்கழகக் காலங்களில் சில வழக்கிழந்து போயின. கடைக் கழகக் காலச் சொற்கள் பல இன்று வழக்கிழந்துள்ளன. அண்மையில் அறியப்பட்ட சிந்துவெளித் தமிழ்ச் சொற்கள், தமிழ் இலக்கியங்களில் காணப்படாதவைகளாகவே உள்ளன.

மேலை நாட்டு மொழிகளை ஆய்வு செய்யுங்கால், தொல்காப்பியர் காலத்திலும் வழக்கிலில்லாத பல தமிழ்ச் சொற்கள், மேலை மொழிகளில் காணப்படுகின்றன. அவை தொன்மைக் காலத்தில் குடியேற்றத் தமிழர்கள் பேசிய சொற்களே என அறியலாம். ஒரு சொல், தமிழ்ச் சொல்லா என்பதை, அதன் வேர்ச் சொல்லைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். பல மேலை நாட்டுச் சொற்களுக்கான வேர் (root), தமிழ்மொழியில் உள்ளதை இன்று பலரும் மெய்ப்பித்து வருகின்றனர்.

ஒரு மாந்தனுக்குப் பல தோற்றங்கள் (Skills) உண்டு எனக் கூறுவர். அது போன்றே, ஒரு சொல்லுக்கும் பல முகங்கள் உள்ளன. குறிப்பாகத் தமிழில் பல ஆயிரம் சொற்கள், இவ்வாறு பன்முகத் தோற்றங்கள் கொண்டவைகளே. அறம் என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பல்வேறு பொருளைத் தமிழில் காணவியலும். அவ்வாறு அறியப்பட்ட ஒரு சொல்லே, எல் என்பதாகும். எல் எனும் சொல், மேலை நாடுகளில் எவ்வாறெல்லாம் பரவிக் கிடந்து தமிழ்ப் பொருளையே தந்தது என்பதை இந்நூல் விளக்குகிறது.

யா என்ற ஓரெழுத்துத் தமிழ்ச் சொல், தொன்மைக் காலத்தில் அறியப்பட்டு தமிழில் இன்று மறைந்து போயுள்ளது. யா என்ற சொல்லின் ஒரு பக்கத் தோற்றம் இருள் என்றே அறியப்பட்டுள்ளது. அச்சொல்லுக்கு உள்ள மற்ற தோற்றங்களையும் இந்நூல் அறிய முற்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழில் வழக்கிழந்து போன பல சொற்களை, தமிழரின் குடியேற்ற நாடுகளில் பேசப்பட்டு, இன்று பன்மொழிகளாகக் கிளைத்துள்ள மொழிகளிலிருந்து தோண்டி எடுக்க இயலும். எடுத்துக்காட்டாக, சூத்திர - சூத்திரன் என்ற சொல் வடசொல்லே என்றும், அது ஆரியர்கள் தமிழரை அழைத்தச் சொல் என்றும் தவறாகக் கருதினர். தமிழனுக்குச் சூத்திரன் என்ற சொல்லோடு தொடர்பிருந்தது பற்றியும், மன்னன் ஒருவனின் பெயராகச் சூத்திரன் (Sudra) என்ற சொல் விளங்கியது பற்றியும் சில செய்திகளை, சுமேரியத் தகவல்கள் அளிக்கின்றன. ஆரியர்கள் இந்தியாவுக்கு வருகை தரு முன்பே, கி.மு. 4000 ஆண்டுகளில், சுமேரிய (அதுவும் தமிழ் மொழியே) மொழியில் சூத்திர என்ற சொல் காணப்படுகின்றது.

சூத்திர என்ற சொல்லை தமிழ்க் கண்ணோட்டத்தில் நோக்கும் போது, அது சூல் + திறன்; சூழ் + திறன்; சூள் + திறன் போன்ற பல்வேறு தமிழ்ச் சொற்களின் கூட்டுச் சொல்லாகவே

அமைகின்றது எனலாம். தொலைந்து போய்விட்ட தமிழின் வரலாற்றையும், தமிழனின் வரலாற்றையும் மீண்டும் வெளிக் கொணர, சொல்லாய்வுகள் முதற் பணியாற்றுகின்றன என்பது தெளிவு. இம்முயற்சியின் ஒரு படியாகவே, எல்-யா எனும் சொற்களான விளக்கி சொற்களை விளக்கி இந்நூல் வெளி யிடப்படுகின்றது.

குறிப்பாக தமிழுக்கும் எபிரேய மொழிக்கும் உள்ள தொடர்பு, பல்வேறு சான்றுகளால் நிலை நிறுத்தப்படும். எபிரேய மொழி, சுமேரியத் தமிழின் கிளைமொழியே என்பதை யும் மெய்ப்பிக்கலாம். எல்-யா எனும் இரு தமிழ்ச் சொற்களும், எபிரேய மொழியில், தமிழ்ப் பொருளோடு அறியப்பட்டதை இந்நூல் விளக்க முற்பட்டுள்ளது.

இந்நூலை வடிவமைத்து அச்சிட்டு உதவிய ஸ்ரீராக வேந்திரா லேசர் பிரிண்டர்ஸ் நிறுவனத்துக்கும் அவர்களுக்கும் எனது நன்றி.

அரியலூர் — ம. சோ. விக்டர்

எல் – தெய்வம்

ஞாயிறு

குறிஞ்சி நிலத் தலைவனான சிவன் தமிழர்களின் முழுமுதற் கடவுளாவான். அவன் மலைமீதமர்ந்திருந்ததினால், தொலைவு கருதி சேயோன் என்றும் சொல்லப்பட்டான்.[1] சேய்மை தொலை வென்றும், அண்மை அருகிலென்றும் அறியப்படும். சேய் என்ற சொல் மகனைக் குறித்தும் சொல்லப்பட்டது பிற்கால வழக்காகும். அவ்வகையில் சேயோன் முருகனென்றும் கூறினர். சே என்ற சிந்துவெளிச் சொல்லுக்கு முறையே மீன், மகன்,[2] எண் ஆறு (Six) என்றவாறெல்லாம் பொருள் கூறப்பட்டுள் ளது.[3] சிவந்த கதிர்களையும் ஒளியையும் கொண்ட ஞாயிறு, உலகின் அனைத்துத் தேவைகளுக்கும் மூலமாவதைக் கருதி, சிவந்த ஞாயிறு, சிவன் எனப்பட்டான். கதிரவனே சிவன் என்று கருதப்பட்டதால், கதிரவன் தமிழர்கள் வழிபட்ட முதற் கடவுளாவான்.[4]

கதிரவனுக்கும் முன்னதாகத் தீயைத் தமிழர்கள் வழி பட்டனர் எனலாம். தொடக்க காலத் தமிழருக்குத் தீயின் உதவி பெரிதும் தேவைப்பட்டது. பச்சை இறைச்சியினும், சுடப்பட்ட இறைச்சி சுவையானதாயிருந்தது. இரவுக் காலங்களில் விலங்கு களை விரட்டத் தீ மூட்டிக் கொண்ட மாந்தன், கடும் குளிரி லிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும் தீயின் உதவியை நாடி னான். இரவு நேரங்களில் வழிகாட்டுதலுக்கும் தீவட்டிகள் பயன்பட்டன. எனவே தீயென்பது, மாந்தனின் முதல் தேவை யாக மாறிவிட்ட நிலையில், தீயினால் கிடைத்த ஒளியையும் மாந்தன் விரும்பினான். ஒளியோடு தொடர்புடைய தீயின் மறு உருவங்களான ஞாயிறு, திங்கள் போன்றவையும் மாந்தனின் வணக்கத்துக்குரியனவாயின. தீ என்ற தமிழ்ச் சொல்லினின்றே உலக மொழிகளில் இறைவன் பற்றிய சொற்கள் தோன்றின வென்று தேவநேயப் பாவாணர் சுட்டுகிறார்.[5]

தீ என்ற சொல் கதிரவனையும், விண் மீன்களையும் குறித்தது. கதிரவனான தீ பகற்பொழுதை ஆண்டான். மாந்தனின் வாழ்வுக்குத் தேவையான ஒளியைத் தந்த தீ, கடவுளாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தீ என்ற சொல்லே நீண்டு, தேவன் என்று நிலைத்ததாகப் பாவாணர் கருதுகிறார். தீயாகிய நிலவு, மறை யுங்காலத்து, தேய் எனப்பட்டது. தேய்தல், மறைதல் அல்லது குறைதல் எனப்பட்டது. தேவன் என்ற தமிழ்ச் சொல்லை மூலமாகக் கொண்டே இன்று உலகின் பன்மொழிகளும் உள்ள சொற்கள் கடவுளைச் சுட்டுகின்றன. தியோ (Deo) என்ற இலத்தீன் சொல்லும், தேவ் என்ற சமற்கிருதச் சொல்லும், தேவனின் திரிபுகளே. Divinus என்ற இலத்தீன் சொல்லினின்றே Divine என்ற இறைவனைக் குறித்த ஆங்கிலச் சொல் நீண்டது.

தீ என்ற சொல், விண் மீன்களையும் குறித்தது. மழைக் காலத்தில் ஒளிரும் கார்த்தீ, கார்த்திகா என்று வடமொழியில் திரிந்தது. தீதீ என்று சொல்லப்பட்டதே, திதி என்றும் அதற்கு எதிர்மறையாக அதிதி என்றும் வடமொழியில் திரிந்தன. தீ என்பது தே என்ற ஓரெழுத்துச் சொல்லாகி, இறைவனையே குறித்தது. இறைவனே உயிரையும் உடலையும் மாந்தனுக்களித் தான் என்பது நம்பிக்கையாகும். உடற்கூடு, அகம் என்றும் சொல்லப்படும். தே அளித்த அகம், தேகம் எனப்பட்டது. இது தேகா (Deha) என்று வடமொழியில் திரிந்துள்ளதை நோக்குக.

சூரியன்,	பதங்கன்,	சுடரோன்,	சோதி,	ஆதித்தன்,
எல்லை,	அரியமா,	விகந்தன்,	அருக்கன்,	திவாகரன்,
அலரி,	பனிப்பகை,	பருக்கன்,	தினமணி,	பங்கயன்,
பகலோன்,	ஞாயிறு,	சூரன்,	நபோமணி,	விண்மணி,
ஆயிரஞ்சோதி,	பகல்,	அகிலசாட்சி,	கனலி,	இனன்,
உதயன்,	கதிரவன்,	பானு,	அனலி,	தினகரன்,
அழலவன்,	வெஞ்சுடர்,	ஏழ்பரியோன்,	ஒளியோன்,	மித்திரன்,
சவிதா,	விரோசனன்,	விரிச்சி,	கன்ஒளி,	சண்டன்,
செங்கதிரோன்,	தரணி,	சான்றோன்,	அண்டயோனி,	அரிகிரணன்,
மாலி,	இரவி,	வெய்யோன்,	இருள்வலி,	தபனன்,
அருணன்,	பரிதி,	மார்த்தாண்டன்,	ஆதவன்,	செங்கதிர்,
எல்,	வெயில்,	சித்திர பானு,	என விரியும்[6]	

மேற்கூறப்பட்டுள்ள சொற்களில் பல வடமொழிச் சொற்கள் போல் தோன்றினாலும் உண்மையில் அவை வடமொழிச் சொற்கள் அன்று. தமிழில் கூறப்பட்ட ஞாயிறு பற்றிய தமிழ்ச் சொற்களே, வடமொழியில் திரிந்தன. வடமொழிச் சொற்களே அவற்றிற்கான மூலச் சொற்கள் எனத் தவறாகக் கருதியோர், அச் சொற்களை மீண்டும் தமிழ்ப்படுத்திக் கூறினர்.

எடுத்துக்காட்டாக, உதை என்ற தமிழ்ச் சொல்லுக்கு, தள்ளுதல் விடுத்தல், புறத்தே வைத்தல் என்பன பொருளாகும். உதை என்ற தமிழ் மூலச் சொல், உதய் என்றவாறு வடமொழியில் திரிந்தது. உதி என்றும் உதித்தல் என்றும் சொல்லப்படுவதும், உதை என்ற மூலச் சொல்லின் நீட்சிகளே. உதைக்கப் படும் பொருள் உயரே எழுவதைக் காணலாம். அவ்வழியில் உதயம் என்பது ஞாயிற்றின் தோற்றத்தைக் குறித்ததே. ஞாயிற்றைக் குறித்த உதயன் என்ற சொல், தமிழ் மூலத்தைக் கொண்டதே.

சோதி என்ற வடசொல், சுவர்த்தீ என்ற தமிழ் மூலத்தைக் கொண்டதே. சுவர் எனப்படுவது உயர்வைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும்.

சுள் என்ற தமிழ் வேர்ச் சொல், சுர்-சேர்-சூரி-சூரிய என நீண்டது.[7]

சூர்யா என வடசொல், சுர் என்ற தமிழ் வேரின் திரிபுச் சொல்லே. உதய சூரியன் என்ற எழு ஞாயிறு, தமிழ் மூலத்தைக் கொண்ட வடசொல் திரிபே எனலாம்.

ஞா என்ற ஓரெழுத்துத் தமிழ்ச் சொல், உயரத்தைக் குறித்ததே. இறு என்பது, முடித்தல், துண்டித்தல் எனப் பொருள் படும். நாள் + இறு = முடிக்கப்பட்ட நாள். ஒரு நாள் முடிவு பெறுவதென்பது, ஞாயிற்றின் தோற்றம் மறைவைக் கொண்டே சொல்லப்படுவதாகும். நாள் + இறு = நாயிறு அல்லது ஞாயிறு எனவும் சொல்லப்பட்டது. ஞா - நா எனவும் மாற்றி மாற்றிச் சொல்லப்படுவதை நோக்குக.

நாண் - ஞாண், ஞாலம் - நாலம், ஞாஞ்சில் - நாஞ்சில் (கலப்பை).

ஞாயிறு - நாயிறு எனப்பட்டது.

ஞாயிறு பட்ட வகல்வாய் வானம் – குறுந்தொகை[8],

ஞாயிறு அனையன் தோழி – குறுந்தொகை,[9]

காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப – மணிமேலை[10]

புத்த ஞாயிறு தோன்றுங் காலை – மணிமேகலை[11]

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் – சிலப்பதிகாரம்,[12]

விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி – சிலப்பதிகாரம்,[13]

ஞாயிறும் திங்களும் அறனும் அமைவரும் – பரிபாடல்,[14]

மாசிலா இரங்கதிர் ஞாயிறுந் தொகூ உம் – பரிபாடல்,[15]

ஞாயிறு புகன்ற தீதுதீர் சிறப்பின் – பதிற்றுப்பத்து,[16]

ஞாயிறு குணமுதற் தோன்றி யாஅங் – பதிற்றுப்பத்து,[17]

தீ தொடர்ந்து எரிந்து கொண்டிருப்பதால், தீ + இரி = தீயிரி - திரி எனப்பட்டது. கை எனும் வேர்ச் சொல், நீண்ட என்ற பொருளைத் தருவது. கை + திரி = கைதிரி கதிர் எனப் பட்டது. திரிதல் என்பதே இரிதல் என்பதின் நீட்சியாகும். கதிர் - கதிரோன் என்று நீண்டது.

யா + உடு என்பது, தென்திசையிலிருந்து மேழ ஓரையைக் குறிக்கும் சொல்லாகும். கரிய விசும்பை உடுத்தியிருப்பதால் அது உடு எனப்பட்டது. மின்னுவதால் மீன் என்றும் கூறப்பட்டது. தண்ணீரில் மின்னுவதும், விண் வெளியில் மின்னுவதும் மீன் எனப்பட்டன. மேழ ஓரையைக் குறித்த யாஉடு, ஆட்டைக் குறிக்க யாடு என்றும் சொல்லப்பட்டது. யாட்டை மேய்த்த ஆயன், யாடவன் எனப்பட்டான்.

யாடவன் வணங்கிய கார் முகிலுக்கு மூலமான கதிரவன், யாதவன் அல்லது ஆதவன் எனப்பட்டான். யாதவன் என்ற சொல், தென்திசையினின்றும் வடதிசைக்குத் திரும்பும் கதிரவ னைச் சுட்டுவதாகவும் கொள்ளலாம்.

இருட்டையும் ஒளியையும் பகுத்தவன், பகவன் என்றும். பகலவன் என்றும், பகல் என்றும் அழைக்கப்பட்டான். திருவள்ளுவர் குறிப்பிடும் பகவன் என்ற சொல், பகு என்ற மூலச் சொல்லின் நீட்சியே. பகவன் பகவான் என்றும் பக்வான் என்றும் வடமொழியில் திரிந்தது.

சுள் என்ற வேர்ச் சொல்லினின்று, சுடு என்ற சொல் பிறந்தது. சுடும் தன்மை கொண்டவன், சுடரோன் எனப்பட்டான்.

பகல் மறைவதால் இரவு தோன்றுகிறது. இரவு தோன்றக் கரணியமாயிருந்தவன் இரவி என்றும் சொல்லப்பட்டான். இச் சொல் ரவி என்று வட மொழியில் திரிந்தது. வான்மதி என்ற தமிழ்ச் சொல்லே, பானுமதி என்று திரிந்ததை நோக்குக.

ஈ என்ற ஓரெழுத்து வேர்ச் சொல் கொடுப்பது, அளிப்பது, தருவது என்ற பொருளைத் தரும். தாய், ஈன்று புறந்தருபவள். விலங்குகளின் பிறப்பை ஈன்று - ஈற்று என்ற சொற்களால் அறியலாம்.

ஈ = ஈதல் அல்லது ஈயல் அல்லது கொடுத்தல்.

ஈ = ஈகை. மற்றவர்க்கு எதையாவது அளிக்க வேண்டும் என்ற எண்ணம்.

ஈ என்ற வேர்ச் சொல் கொடுக்கும் குணமுள்ள இறைவனுக்கும் பொருத்தமானதால்,

ஈபவன் - ஈசன் எனப்பட்டான். ஈசன் என்பது சரியான தமிழ்ச் சொல்லே.

ஈசன் - ஈஸ்வ, ஈஸ்வர் என்று வடமொழியில் திரிந்தது.

ஈசன் என்ற தமிழ்ச் சொல்லே, ஈசுவ (Yesua) என்று எபிரேய மொழியில் திரிந்தது, அது இயேசுவைக் குறித்தது. இயேசு என்பது, ஈசுவ என்ற தமிழ்ச் சொல்லின் எபிரேய மொழித் திரிபே ஆகும். அச்சொல் அரபு மொழியில் ஈசா எனப்பட்டது. கிரேக்கத்தில் ஜுசஸ் என்றும் சொல்லப்பட்டது.[18]

ஈ என்ற வேர்ச்சொல், ஈன் - ஈல். எல் என்றும் நீண்டது. எல் என்ற தமிழ்ச் சொல், கொடை என்ற பொருளைத் தரும் கதிரவனைக் குறித்தது. எல் = கதிரவன், ஒளி, பகல், வெயில் என்றவாறு பொருள் விரியும். எல் என்பது ஒளியைக் குறித்ததால், அல் என்பது இருட்டைக் குறித்தது,

எனவே, எல் அல்லாத ஒன்று அல் எனப்படும். அல் என்பதற்கு அல்லாதது - இல்லாதது என்பதே பொதுப் பொருளாகும்.

அல், அல்ல என்று நீண்டது. (No or Not).

அல் என்ற சொல்லை அதன் பொருள் தெரிந்தோ தெரியாமலோ சமற்கிருதத்தில் ஓரெழுத்தாகச் சேர்த்துக் கொண்டனர்.[19] (A Sanskrit consonant)

அல் - இரவு. அல்லும் பகலும் = இரவும் பகலும்.

அல் - அல்குதல் = குறைதல்.

அல் - அல்குல் = குழிந்து காணப்படும் பெண்ணின் மறைவான உறுப்பு.

அல் - அல்லம்[20] = மண்ணுக்குள் புதைந்திருக்கும் ஈரமான இஞ்சி. இச்சொல் இன்று தமிழில் வழக்கொழிந்து, தெலுங்கில் சொல்லப்படுகின்றது.

அல் - அல்லல் = மறைவான இடுக்கண்.

அல் - அல்லி = இரவில் மலரும் ஆம்பல்.

அல் - அல்லாஹ் (அரபுச் சொல்) = கண்களுக்குத் தெரியாமல் மறைந்திருக்கும் இறைவன். அல்லா, தமிழ்த் திரிபுச் சொல்லே.

அல்லிடை யாக்கொண் டப்பதி யகன்றோன் – மணிமேகலை[21],

மார்பு மல்குளு மனத்தொரு பரியை – பரிபாடல்[22],

அல் எனும் தமிழ்ச் சொல், இரவில் தோன்றும் விண்மின்களுக்கு முன்னொட்டுச் சொல்லாகக் கிரேக்க மொழியில் சொல்லப்பட்டுள்ளது.

Al Chiba[23] : கருங்காக்கைக் கூட்டத்து விண்மீன் (Corvus the Crow).

Al Nair[24] : மீன ஓரையில், மீனின் வால்பகுதியாகச் சொல்லப்படும் விண்மீன்.

Al Nasl[25] : சிலை (தனுசு) ஓரையிலுள்ள விண்மீன்.

Al Rescha[26] : மீன் ஓரையிலுள்ள விண்மீன்.

Al Cyone[27] : விடை (காளை - Taurus) ஓரையின் மீன்.

மேலும், Aldebran[28], Alderramin,[29] Algedi,[31] Algeiba,[32] Algenib,[33] Algol[34] என விரியும்.

எல்லோன் என்பது கதிரவனையும், அல்லோன் என்பது திங்களையும் குறித்த தமிழ்ச் சொற்களாகும்.

கதிரவனைக் குறித்த எல் எனும் சொல், அளித்தல் கொடுத்தல் என்ற பொருள் பற்றி இறைவனுக்குரிய பண்புகளாகச் சொல்லப்பட்டன.

எல் என்ற சொல்லின் பிற பொருள்களாவன : ஒளி, கதிரவன், பகல், நாள், வெயில், கடவுள் என விரியும்.

எல் - எல்லவன் - எல்லோன் : கதிரவன்.

எல் + பாடு : ஏற்பாடு. பாடு = மறைதல். எல்பாடு - ஏற்பாடு = கதிரவன் மறைதல்.

எல் + தோற்றம் : எற்றோற்றம். கதிரவன் தோன்றுதல்.

எருது என்ற சொல், காளையைக் குறித்தது. காளை, சிவனின் ஊர்தியாகச் சொல்லப்பட்டதால், சிவனை இணைத்தே, எல் + து என்றானது. எல் + து = எருது.

எல் + கு = எருகு அல்லது எருக்கு. சிவனுக்குரிய மாலை.

எல் - எரி : ஒளியடன் கூடிய தீ. எரிதலுக்கும் மூலச் சொல் எல் என்பதே. எல், எரியெனவும் நீண்டது. எரி : சிவப்பையும் குறித்தது.

எரிதிரை = சிவப்புக்கடல் அல்லது செங்கடல். எரிதிரை என்ற தமிழ்ச் சொல்

எரித்ரிய = Erithrea என்று கிரேக்கத்தில் திரிந்துள்ளதை நோக்குக. Erethreyan Sea = செங்கடல். திரை = கடல்.

எரி = எரு : நிலத்தின் வெப்ப அழுத்தத்தால் உருவான வளமையான மண்.

எரி - எருவை : சிவந்த நிறமுள்ள குருதி, அரத்தம்.

எரி - எருவை : சிவந்த நிறமுள்ள கழுகு.

எரி - எருவை : செம்பு.

எல் - எரி ஆகிய இரு சொற்களும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையே.

எல் : முழுமையான பண்புகளைக் கொண்ட இறைவன். முழுமை என்றும் பொருள்படும்.

எல் - எல்லா - எல்லாம் எனவும் நீண்டு முழுமை என்ற பொருளைத் தந்தது.

எல் - எல்லி : கதிரவனைக் குறித்த மற்றொரு சொல்லாகும்.

எல்லியின் ஆளுமையின் விளிம்புக் கோடு எல்லை எனப் பட்டது. பிற்காலத்தில் அடைப்பு, கோடு, அளவு என்ற பொரு ளிலும் உணரப்பட்டது.

இறைவன் எல்லாமும் உடையவளாயிருக்கின்றான். எல்லா உயிர்களும் எல்லின் படைப்பே. கேட்பதை எல்லாம் எல் தரக் கூடியவன். எல்லையில்லாத எல்லின் அருட் கொடை, எல்லின் படைப்புகளுக்கு நாளும் அளிக்கப்படுகின்றன. எல்லிடம் வேண்டுவோர், எல்லையில்லாப் பயன்களைப் பெறுவர். எல்லின் கருணைக்கு எல்லைக்கல் ஏதுமில்லை. எல்லவர்க்கு (all persons) எல்லாம் அவனே. எல்லரிய இறைவன் எல்லி யாகவும் (கதிரவன்) அருளுகிறான்.

எல் - ஏல் எனவும் நீண்டது.

எல் - ஏல் - ஏலி : பற்றாளனின் வேண்டுதலை ஏற்கும் இறைவன்.

எல் - ஏல் - ஏலா : எதிர்மறைப் பொருள். ஏற்றுக் கொள்ளாத.

ஏலா என்பது பிற்காலத்தில் "இயலா" என்ற சொல் லாலும் உணரப்பட்டது.

எல் - ஏலு - ஏலுதல் : தகுதியான, பொருத்தமான, ஏற்றுக் கொள்ளத் தக்க.

எ.கா. ஏலாதனவெல்லாம் சொல்கிறீர்.
இது உன்னால் ஏலுமா?
ஏலுஞ் செயலிருந்தால் சொல், உடன் நான் முடிக்கின்றேன்.

ஏல் - ஏலா : இயலாத, ஏற்றுக் கொள்ள முடியாத.

எ.கா. எந்தவொரு நல்ல கருத்தையும் ஏலாதார் இருக்கவே செய்கின்றனர்.

ஏல் - ஏற்பு என்றவாரும் நீண்டது.

ஏற்பு : ஏலுதல், ஒப்புக் கொள்ளுதல்.

எ.கா. ஏற்பது இகழ்ச்சி.
ஏற்போர் ஆமென்க, எதிர்ப்போர் இல்லை என்க.
இந்தியாவுக்கேற்ற பொருளியல் கொள்கையை விளக்குக.
செயற்குழு முன்மொழிய பொதுக்குழு ஏற்கை செய்தது.

ஏல் - ஏலி : ஏற்றுக் கொள்ளும் இறைவன்.

ஏலி என்ற தமிழ்ச் சொல், திரிபுபடாமல் எபிரேய மொழியில் சொல்லப்பட்டு, அது இறைவனையே சுட்டுகிறது. Eli என்ற சொல்லுக்கு முன்பு ஓ என்ற விளிப்பு காணப்படுகிறது. ஓ ஏலி! (Yo Eli) என்ற எபிரேயச் சொல், இறைவன் வாழ்த்தப் பெறுகிறார் அல்லது உயர்த்தப் பெறுகிறார் என்பது பொருளாகும்.

Yo Eli (Hb.) = God is exalted.[35]

ஏல் - ஏலி = ஏல் - இலி - ஏலி. ஏற்றுக் கொள்ளாதவன் என்றும் பொருள் கொள்ளலாம். ஒரே சொல் எதிர்மறையான இரு பொருளையும் உணர்த்துவது தமிழ் மொழியின் சிறப்பாகும்.

இறைவன், தனது பற்றாளன் (பக்தன்) கேட்கும் அனைத்தையும் ஏற்றுக் கொள்கிறான். எனக் கூற இயலாது அல்லவா!

Yo Eli என்று பழைய ஏற்பாட்டு விவிலிய நூலில்[36] சொல்லப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டியல் El oi என்று அறியப்படுகின்றது.

Yo Eli - Eli oi ஆகிய இவ்விரண்டும் இறைவன் பற்றியதே.[37]

இயேசு இறுதியாகக் குறுக்கத்தில் (சிலுவையில்) உயிர் விடும் வேளையில்,

"எல் ஓய்! எல் ஓய்! லாமா சபக்தானி"[38]

(Eloi, Eloi, lama sabachthani?)

என்று இறைவனை நோக்கிக் கூப்பிட்டதாக, மார்க் (Mark) நற்செய்தியின் படி அறியக் கிடக்கின்றது.

இதன் தமிழாக்கமாவது, "இறைவர்! இறைவா! ஏன் என்னைக் கைவிட்டீர்"? என்பதாகும்.

எல் எனும் சொல், எபிரேய மொழியில் பரவலாக அறியப்பட்டுள்ளது.

தமிழில் என்ன பொருளோ, அதில் சிறிய மாற்றம் கூட சொல்லிலும் பொருளிலும் அங்கு காணப்படவில்லை.

எல் எனும் சொல் பற்றித் தமிழ் இலக்கியங்கள் கூறும் செய்திகளாவன:

எல்லவிழ் தாரோ னிடுவான் வேண்டி – மணிமேகலை[39]

எல்லு நனியிருந்து எல்லிப் பெற்று – பதிற்றுப்பத்து[40],

எல்லி வருநர் களவிற்கு – குறுந்தொகை[41],

பொழுதும் எல்இன்று பெயறு மோவாது – குறுந்தொகை[42],

எல்லு மெல்லின்று ஏமலியு மிளைத்தன – குறுந்தொகை[43],

எல்லினிர் புகினே – மலைபடுகடாம்[44],

எல்லறு பொழுதின் முல்லை மலரும் – குறுந்தொகை[45],
– ஐங்குறுநூறு[46]

எல்லே இலக்கம் – தொல். சொல்[47],

எல்லவிழ் மாலையோ – சிலப்பதிகாரம்[48],

எல் : விளக்கம், ஒளி, பகல், கதிரவன் என்ற பொருளில், மேற்கண்ட பாடல்கள் செய்திகளைத் தருகின்றன. எல் என்பது பகல் என்றும், எல் இலி, எல்லி இரவென்றும் குறுந்தொகை கூறுகிறது. களவொழுக்கம் பேண வரும் தலைவன் எல்லியில் (இரவில்) வந்தான் என்ற செய்தியை நோக்குக.

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்திருந்த உலகின் முதல் பிரிவு மக்களுக்கு, தீயும் ஒளியும் தேவைப்பட்டன. அதன்வழியே தீயையும் கதிரவனையும் கடவுளர்களாக ஏற்றுக் கொண்டனர். சிவந்த ஒளியைத் தந்த செங்கதிரோன் சிவன் என அறியப் பட்டது பிற்காலத்தில்தான் எனக் கருத இடமுண்டு. தொடக்க காலத்தமிழர் கள், எல் தெய்வத்தையே வழிபட்டனர் எனக் கருதலாம். சிவ வழிபாட்டுக்கு முந்திய நிலை எல் வழிபாடே எனலாம். சிவன் என்ற சொல் தொல்காப்பியத்தில் காணப்பட வில்லை. சிலப்பதிகாரத்தில் "சிவகதி நாயகன்" என்ற சொற்கள் காணப்படுகின்றன. இறைவனின் பண்புகளை விளக்கும் பல பெயர்கள், நாடுகாண் காதையில் சொல்லப்பட்டுள்ளன.

சினவரன் றேவன் சிவகதி நாயகன் – சிலம்பு,[49]

சிவனது செஞ்சடை பற்றிய தொன்மக் கதையின் குறிப்பு களை மேற்கோள் காட்டி,

செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும் – சிலம்பு,[50]

எனும் வரிகள் குறிப்பிடுகின்றன.

குழவித் திங்க ளிமைய ரேத்த – சிலம்பு[51],

பிறை சூடியச் சிவனை இமையவர் ஏற்றிப் போற்றுகின்றனர் என்ற செய்தியும், சிவனோடு தொடர்புடையதே என்றும் கூறப்படுகிறது.

மற்றபடி, சிலப்பதிகாரம் நேரிடையாகச் சிவன், சிவ பெருமான் என்றவாறு பெயர்களைச் சுட்டவில்லை. அதுபோல் மணிமேகலையும் சிவன் பெயரைச் சுட்டவில்லை.

மணிமேகலை தரும் செய்திகளின் படி:

நுதல்விழி நாட்டத் திறையோன் முதலா[52].

சிவனின் மூன்றாவது கண்பற்றிய செய்தியை இவ்வரி தெரிவிக்கின்றது என்பது, தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களின் கருத்தாகும்.

இறைவி கண்புதைத்த போது நெற்றியிற் புறப்பட விட்ட கண்ணையுடைய தலைவன்; என்றது சிவ பெருமானையே என்பது விளக்கமாகும். விழி நாட்டம் என்பதை வினைத் தொகையாகக் கொள்ள வேண்டும் என்கிறார் உ.வே.சா.

நுதல்விழி நாட்டத் திறையோன் கோயில்[53], சிவன் கோவிலே என்பதும், இச் சொற்களே மணிமேகலையிலும் காணப்படுவதாகவும் கருத்து.

கடைக்கழக இலக்கியங்களில் காணப்படும் சிவன் பற்றிய செய்திகள் ஆலமர்ச் செல்வன்,[54] அல்கெழு கடவுள்,[55] முக்கண் முதல்வன்[56] போன்ற சொற்களால் அறியப்படும். சிவனைப் பற்றிய தொன்மச் செய்திகள் யாவும், தமிழரால் கற்பிக்கப் பட்டவைகளே. இக்கதைகளுக்கான சூழலும், கருவும் தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே. இக்கதைகள் பெரும்பாலும் அறிவு, அறிவியல், வானியல், குமுகாயவியல் போன்றவைகளை மையமாகக் கொண்டு பின்னப்பட்டவைகளே. சிவன் என்பது அறிவியலையும், முக்கண் என்பது அறிவையும், ஆதிரையான் என்பது வானியலையும், சடையன் என்பது விண்வெளியையும், பிறைசூடியோன் என்பது கலையையும், நாகம் என்பது நாகரிகத்தையும் உள்ளடக்கிய உருவங்களே என அறியலாம். இக்கதைகள் யாவும் ஆரியப் பெருக்கத்திற்குப் பிறகு பல்வேறு கிளைக் கதைகளாக உருப்பெற்றன. கடைக்கழக இலக்கியங்கள் இவ்வாறான கதைகளை எடுத்தியம்புகின்றன.

சிவன் என்ற கடவுள் பற்றிய நேரிடையான செய்திகளை முதன்முதலில் திருமூலரே கொடுக்கின்றார்.[57] திருமூலர் காலத்தில் சிவன் என்ற கடவுள் பற்றிய செய்திகளும், சிவன் என்ற பெயரும் பெருமளவில் உணரப்பட்டுள்ளதைக் காணலாம்.

கி.பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டின் சமய இலக்கியமான திருமந்திரத்திற்குப் பிறகே சிவன் என்ற சொல் பெரும்பாலும் பரவலாகச் சொல்லப்பட்டுள்ளது. சிவாலயங்களில் காணப்படும் சிவசிவ என்ற சொற்கள், கடைக்கழகக் காலங்களில் காணப்படவில்லை. ஆனாலும் சிவன் என்ற சொல்லை, தொல்காப்பியர் காலத்திலும் அவருக்கு முன்பும் தமிழர் பயன்படுத்த வில்லை எனக் கூறவும் இயலாது. கி.மு. 3000 ஆண்டுகளிலேயே சிவன் என்ற சொல், பாபிலோனிய குறிப்புகளில் காணப்படுவதாலும்,[58] பாபிலோனியர் தமிழர் வழிவந்தவரே அறியப்படுவதாலும் தொல் தமிழர் (கி.மு. 5000 ஆண்டுகட்கு முன்னரே) சிவன் என்ற சொல்லைப் பயன்படுத்தினர் என அறியலாம். எகிப்துக்கு மேற்கே அறியப்பட்டதொரு பாலை நிலத்துக்குச் சிவன் (Siwan) என்றே, கி.மு. 4000 ஆண்டுகளில் பெயரிடப்பட்டிருந்ததை வரலாறு கூறுகிறது.[59] கடும் பாலை நிலமாகிய அப்பகுதியில் மக்கள் ஆங்காங்கே சோலைகளில் வாழ்ந்திருந்த செய்திகளும் அறியப்படுவதால், இப்பாலை நிலத்தைச் சிவனுக்கே உரிமையாக்கி, அவன் ஆளுகையில் அந்நிலத்து மக்கள் வாழ எண்ணித் தம் இறைவனாகிய சிவனின் பெயரை அப்பாலை நிலத்துக்கு அவர்கள் சூட்டியிருக்க வேண்டும் என்ற கருத்தும் ஏற்கக் கூடியதே. பாபிலோனியரின் நாட்காட்டியில், மூன்றாம் திங்களாகச் சிவன் (Sivan) என்ற சொல் அறியப்படுகின்றது. இச் சொல் தமிழர்தம் கடவுளாகிய சிவனைக் குறித்ததே. மேலும் தமிழையும் அவர்கள் தெய்வமாகவே போற்றி வந்ததும், அத்தெய்வத்தின் பெயரால் தமிழ் என்றொரு திங்களைச் சேர்ந்திருந்தும் அறியக்கிடக்கின்றது. தமிழ், தமுழ் என்றவாறு திரிபு பட்டுள்ளது எனலாம்.

எனவே, கி.மு. 5000 ஆண்டுகளில், தமிழகத்தில் சிவன் என்ற சொல்லும் சிவனைக் குறித்த மற்றொரு சொல்லான 'எல்'லும் அறியப்பட்டிருந்தன எனலாம். தமிழர் தம் நாடாகிய அழிந்து பட்டக் குமரிக் கண்டத்தில், எல் என்ற தெய்வமே வணங்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் இது தொடர்பான செய்திகள் யாவும் அழிந்து பட்ட நிலையில், குமரிக் கண்டத்தினின்று வெளியேறிய தமிழர்கள் எல் என்ற கடவுளை வழிபட்டு வந்தனர்

என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால், குமரிக் கண்டத்திலும் எல் வழிபாடு இருந்தது என அறியலாம். மாறிவரும் சூழ் நிலைகளுக்கேற்ப, ஒரு காலத்தில் சொல்லப்பட்ட கடவுளின் பெயர், பிற்காலத்தில் வேறு பெயரில் அறியப்பட்டாலும், நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும் மாற்றமின்றியே காணப்படுகின்றன. எல், சிவனாக மாறியதும், சிவன் பிற்காலத் தில் பலபெயர்களால் அழைக்கப்பட்டதும் தமிழகத்தின் வரலாறு என்பதைப் போல், மேலை நாடுகளிலும் சிவன், எல் என்ற பெயர்கள் அறியப்பட்டுப் பின்னர் எகோவா என அழைக்கப்பட்டதையும் அறியலாம்.

சிந்துவெளியில் அறியப்பட்ட சிவன், பசுபதி என்று ஆரிய ரால் சொல்லப்பட்டாலும், அவன் எல் என்ற சொல்லைக் கொண்டிருக்கும் எருதுடன் தொடர்புடையவனே என்பது, அவன் தலைமேலுள்ள இரு கொம்புகளால் அறியலாம்.[60] சிந்துவெளி எழுத்துகள் யாவும் இன்னும் முழுமையாகப் படித்துணரப் படாத நிலையிலும், அங்கு எழுதப்பட்டு வந்த பல சொற்கள் இதுவரையில் அறியப்படாத நிலையிலும், எல் என்ற சொல் சிந்து வெளியில் வழக்கில் இருந்ததில்லை என்று கூற இயலாது. சிவனைப் பற்றிய விளக்கம் பல சிந்துவெளியில் காணக்கிடக்கின்றன. எல் என்ற சொல்லைக் குறிக்கும் பகலவன் போன்ற சொற்கள் சிந்து வெளியில் காணப்படுவதால், எல் வணக்க முறை சிந்து வெளியிலும் நடைமுறையிலிருந்ததை அறியலாம். பகல், பகலோன், பகலவன் என்ற சொற்களின் மூலச் சொல்லான பகு, பக, பகா போன்றவை சிந்துவெளியில் காணப்படுவதைக் கண்டறிந்துள்ளனர்.[61]

எல் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபுச் சொல்லாக, எலி (Heli) என்ற ஞாயிற்றுக் கடவுள் பற்றி, பிராமண சமயம் கூறுகிறது. எலி என்பது கதிரவனே என்றும், அவன் எங்கும் விரிந்து பரந்துள் ளான் என்றும் மேலும் கூறுகிறது. சூர்யா (Surya) என்ற கடவுள் பற்றிய செய்தியில் மேற்கண்ட விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது.

Heli[62] : (Indian God. Heli aka Surya). Called he who is the Pervader. One of the numerous names, variants or epithets applied to or used to describe the deity Surya. The epithet refers to the deitys's role as the sun.

சூர்யா என்ற வடசொல், எவ்வாறு தமிழ் வேரினின்றும் திரிந்தது என்பது ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

சிந்து வெளிக்கும் பாபிலோனுக்குமிடையே தரைவழியே வணிகம் செய்துவந்த தமிழர் குழுக்கள், இவ்விரு நாடுகளுக்கும் இடையே குடியமர்ந்தனர். கி.மு. 5000 ஆண்டுகளில் இக் குடியேற்றம் நிகழ்வுற்றிருக்கலாம். தீயை வணங்கிய தொல் தமிழரின் மரபுகளை மேற்கொண்ட இக்குடியேற்ற நாடு, தீயின் பெயரால் பார் + தீ = பார்த்தீ - பார்த்தீயா என்றே அழைக்கப் பட்டது.[63] பார் என்பது, தமிழ்ப் பொருளில் நாடு என்ற உணரப் படும். பாரை ஆள்பவன் பாராள்வோன் என்றபடி, எகிப்தி மன்னர்கள் பார் - பாரோ (Pharoah) என்றே அழைக்கப் பட்டனர். பார்த்திய நாடு பிற்காலத்தில் பார்சீயா - பெர்சியா என்று அழைக்கப்பட்டது. கி.மு. 500 ஆண்டுகளில், கிரேக்கம் முதல் இந்து குஷ் மலை வரையிலானதும், கருங்கடல் தொடங்கி எகிப்து வரையிலான மிகப்பரந்து விரிந்த பகுதியை பார்த்தியர்கள் ஆண்டனர். சிந்து அவெஸ்தா (Sind Avesta) என்ற பார்த்தீயர்களின் சமயமும் அவர்தம் வழிபாட்டு முறை களும், தமிழ் மரபுகளை யொட்டியவையே. மித்திரன் என்ற காளையோடு தொடர்புடைய தெய்வம், ஒளிக் கடவுளே. தென்புலத்திலிருந்து வடபுலம் மீளும் கதிரவனின் உருவகமே மித்திரா என்ற தெய்வமாகும். கதிரவனின் தென் பகுதித் திருப்பம் டிசம்பர் 22ஆம் நாளில் தொடங்குவதையொட்டி, மித்திரன் பிறந்தது அந்நாளிலேயே என்ற நம்பிக்கையின் படி, அந்நாள் பெருவிழா நாளாகக் கொண்டாடப்பட்டது. மித்திரன் காளை யுடன் பொருதிய போது வெளிப்பட்ட குருதியே, மாந்தவினத் துக்கு வாழ்வளித்து மீட்பு கொடுத்ததாகச் சொல்லப்படு கின்றது.[64] பார்த்தீயரின் சமயத் தாக்கங்கள் பிற்காலக் கிறித்துவ சமயத்திலும் காணப்படுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.[65] சிந்து வெளிக்கு மேற்கும், பாபிலோனுக்கும் கிழக்குமாக அமைந் திருந்த பார்த்தியா, இன்று ஈரான் என்று அழைக்கப்படுகிறது. இசுலாமியத் தாக்கத்துக்குப் பணிந்து போன பார்த்தியச் சமயம், இன்று இந்தியாவில் மட்டுமே காணப்படுகிறது. தொன்மைக் காலத்து வணிகப் பெருங்குடியனரான பார்த்தியரின் மரபுப் படி, இன்றைய பார்சீயர் (Parsees) வணிகர்களாகவே வாழ் கின்றனர். 1981ஆம் ஆண்டுக் கணக்குப்படி, 1,30,000 பார்சீயர்கள் குசராத்திலும் மும்பைப் பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.[66] இந்தியாவின் தொழில் மன்னர் டாடா, இந்தியாவின் மேனாள் தலைமையமைச்சர் இராஜுவ் காந்தி போன்றோர், பார்சீய மரபில் தோன்றியவர்களே. தொன்மைக் கால பார்த்தீய நாடு

தமிழ் நாட்டுக்கும் மேலை நாட்டுத் தமிழ்க் குடியேற்ற நாடு களுக்கும் இடையிலொரு பாலமாய் அமைந்திருந்தது என்பது மிகையன்று.

பார்த்தீயத்தில் முதன் முதலில் குடியேறியவர்கள் தமிழரே என்ற செய்தி உறுதியானது. அத்தமிழர், சிந்துவெளித் தமிழரா, பாபிலோனியத் தமிழரா என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. வரலாற்றை ஆய்வு செய்யுங்கால், இவ்விரு தமிழர் குழுக்களும் முறையே பார்த்தீயத்தின் கிழக்கு மேற்குப் பகுதி களில் குடியமர்ந்தனர் என்பதே சரியான நோக்காகும். கி.பி. 12000 ஆண்டுகளில் குமரிக் கண்டத்தினின்றும் குடிபெயர்ந்த தமிழர்கள், பாபிலோனியப் பகுதிகளில் பல்கிப் பெருகினர். மக்கள் பெருக்கத்தின் கரணியமாகப் பல்வேறு திசைகளிலும் சிதறிப் போயினர். பல தனித்தனி நாடுகளும் தோன்றின. அந்நாடு களுக்குக் கூடத் தமிழர், தமிழ்ப் பெயர்களையே சூட்டினர். இவ்வாறு, பாபிலோனுக்குக் கிழக்கே அறியப் பட்ட நாடு தான் ஈழம் என்பதாகும். ஈழம் என்ற தனித்தமிழ்ச் சொல் பற்றி அறியாத பிற்கால வரலாற்றாசிரியர்கள், அச்சொல்லைத் திரிந்து Elam (எலம் அல்லது எலாம்) என்றவாறு ஒலித்தனர்.

ஈழம் என்ற பகுதி, குமரிக் கண்டத்தின் வட மாநிலமாக விருந்தது. ஏழ் தெங்க நாடு என அறியப்பட்ட அவ்வட மாநிலத் தில் தென்னை மரங்கள் மிகுந்திருந்தன. தென்னை என்ற சொல்லே, தெற்கு என்ற திசையைக் குறித்த சொல்லாகும். ஈழம் என்ற சொல்லுக்கும், கொங்கு என்ற சொல்லுக்கும் தொடர் புண்டு. இவ்விரு சொற்களும் கள் என்னும் தேறலைக் குறித்த சொற்களே. (கொங்கு = கள். சதுரகராதி[67]). ஈழம் = கள் (வின்ஸ்லோ)[68].

இவை தென்னை மரத்தினின்றும் இறக்கப்பட்டவை. கொங்கு என்பதே தெங்கு எனவும் தேங்கு - தேங்காய் எனவும் நீண்டது. தேங்காயின் மேலுள்ள ஓடு மிகவும் கடினமானது. ஓட்டுக்குள் இருக்கும் வெண்பருப்பு சுவையானது மட்டுமின்றி, ஊட்டப் பொருள் கொண்டதுமாகும். கொங்கு என்ற தமிழ்ச் சொல்லே, கொக்கு - கொ கொ (co - co) என்றவாறு திரிபு பட்டது. ஓடு என்ற தமிழ்ச் சொல், ஓட்டு - ஓட்டர் (otter) என்றவாறு இசுபானிய மொழியில் காணப்படுகின்றது.[69] otter என்ற அச் சொல்லினின்றே Nut என்ற சொல் பிறந்ததாக ஆக்சுபோர்டு அகர முதலி கூறுகிறது[70]. Nut என்பது ஊட்டப்

பொருளை மூடிவைத்துள்ள ஓடு என்ற பொருளில், Nutrition என்ற ஆங்கிலச் சொல்லும் தோன்றியது. ஓட்டுடன் கூடிய கொங்கு என்ற தமிழ்ச் சொல்லே, Coconut என ஆங்கிலத்தில் திரிந்துள்ளதை நோக்குக.[71]

ஈழம் என்ற தமிழ்ச் சொல், எழு - ஏழ் என்ற தமிழ் மூலச் சொல்லினின்றும் தோன்றியதாகப் பாவாணர் கருதுகிறார்.[72] யாழ் என்ற சொல்லும் எழு - ஏழ் என்ற சொல்லினின்று தோன்றியதே என்கிறார். ஏழ் தெங்க நாடு, ஏழ் எனச் சுருக்கப்பட்டு, ஈழ் - ஈழம் என்று பெயர் கொண்டிருக்க வேண்டும். ஈழம் என்ற சொல், கள் என்றும் சொல்லப்படுவதால், தென்னைகள் நிறைந்த நாடு, கள் இறக்கும் நாடு என்ற பொருளில் ஈழ நாடு எனப்பட்டது. பொன் என்ற மாழம் (Metal), ஈழம் என்றும் சொல்லப்படும். ஈழ நாட்டு மக்கள், ஈழகுலச் சான்றோர் எனப் பட்டனர். சான்றோர் என்பதே சாணார் எனத் திரிந்தது என்க.

ஈழம் தமிழ்ச் சொல்லே என்பதாலும், தம் முன்னோர் வாழ்ந் திருந்த நாடு என்பதாலும், அழிந்து போன தமது மாநிலப் பகுதியை நினைவு கூர்ந்த குடியேற்றத் தமிழர்கள், தாம் குடியேறிய பகுதிக்கும் ஈழம் என்றே பெயரிட்டுக் கொண்டனர். பிற்காலத் தில் ஆங்கிலேயர்கள், அமெரிக்க நாட்டில் குடியேறிய போது, தங்கள் நாட்டுப் பகுதிகளையே பெயர்களாக வைத்துக் கொண்டதை ஒப்பு நோக்குக. ஈழப் பகுதியில் வாழ்ந்திருந்த குடியேற்றத் தமிழர்கள், மக்கள் பெருக்கம், இட நெருக்கடி, படையெடுப்பு, இயற்கைச் சீற்றம் போன்ற ஏதோவொரு கரணியம் பற்றி, தங்கள் பகுதிக்குத் கிழக்கே குடியேறினர்.[73] சிந்துவெளித் தமிழர்களும் இதே கரணியம் பற்றி மேற்குப் பகுதியில் குடியேறினர். தொடக்கத்தில் சிந்துவெளித் தமிழர் களும், மேற்கத்திய ஈழ நாட்டுத் தமிழர்களும் வாழ்ந்திருந்த பார்த்திய நாட்டில், கி.மு. 2000 ஆண்டுகளில் மைய ஆசியா வினின்றும் வந்துற்ற ஆரியர்கள் இனமும் இணைந்தது இங்கு வந்துற்ற ஆரியர்களில் ஒருசில குழுவினர் இந்தியாவுக்கு வந்த தாகவும் கூறப்படுகின்றது. இன்று பார்த்தீயத்தில் (ஈரானில்) வாழும் மக்கள், ஈழத்தமிழரும், சிந்து வெளித் தமிழரும், ஆரியரும் கலப்புற்ற இனமே என அறியலாம்.

ஆரியர்கள் தீயை (அக்னியை) வழிபடத் தொடங்கியது, அவர்கள் பார்த்திய நாட்டுக்கு வந்துற்ற பிறகே என அறியலாம். பார்த்தியர்கள், தீயின்வழியில் சிவனையும், மித்திரன் வழியில்

காளையையும் இணைத்த, தமிழர் வழிபாட்டு, முறைகளையே கொண்டிருந்தனர். எல் எனும் சிவன் பற்றிய சொல், பார்த்திய மொழியில் நேரிடையாக அறியப்படவில்லை யென்றாலும், சிவ வழிபாட்டையே அவர்கள் மேற்கொண்டிருந்தனர் என்பதும் தெளிவாகும்.

ஈழம் என்ற சொல்லில் உள்ள (El - am) எல் என்ற சொல்லுக்கும், எல் தெய்வத்துக்கும் எந்தத் தொடர்பையும் வரலாற்றாசிரியர்கள் காட்ட வில்லை என்பதால், எலாம் என ஒலித்த மேற்கத்தியர்களின் முறை தவறானது என அறியலாம். ஈழ என்ற சொல்லே Ela எனத் தொடங்கி ஒலிக்கப்பட்டுள்ளது. பாபிலோனுக்குக் கிழக்கேயிருந்த பகுதியில் குடியேறியவர்கள் அப்பகுதிக்கு ஈழம் எனப் பெயரிட்டனர். இங்கு வந்து குடியேறியவர்கள் அறம் (Aram) என்ற பாபிலோனின் வட பகுதியில் வாழ்ந்திருந்தவராவர்.[74] அறம் என்ற தமிழ்ச் சொல் அப்பகுதிக்குச் சூட்டப் பெற்றது, நோவாவின் பெயரனான அறம் என்பானின் வழித்தோன்றல்கள் குடியிருந்ததினாலே யாம்.[75] அறம் என்பானின் வழிவந்த மக்கள் அறமியர்கள் எனப் பட்டனர். இவர்கள் Armanoites என்ற ஐரோப்பிய மொழியில் சொல்லப்பட்டனர். இந்த அறமியர்கள் பேசிய மொழியே "அறம்வாய்" என்ற தமிழ்ச் சொல்லின் திரிபான அறமாய் - அறமாயிக் எனப்பட்டது.[76] இவர்கள் வண் (van) என்ற ஏரிப் பகுதியில் வாழ்ந்திருந்ததாக வரலாறு கூறுகிறது.[77] வண் ஏரி, யூப்ரடீசு ஆறு தோன்றும் ஊராற்றுப் (uratur) பகுதிக்குக் கிழக்கேயுள்ள வளமையான சமவெளியாகும்.

வண் என்னும் ஏரி, தமிழ்ப் பொருளைத் தாங்கியதே. வண் என்பதற்கு வளைவு என்பதே பொருளாகும். வண் - வண - வணக்கம் = உடலை வளைத்து வரவேற்கும் முறை. வளைந்த கரைகளையுடைய ஏரியை, வண்ணயம் எனலாம். ஏரிக்கடியில் மறைந்து காணப்படும் வளமான மண், வண்டல் எனப்படும். அல் = மறைவாயுள்ள எனப் பொருள் கொள்க.

அறம் பகுதியில் வாழ்ந்திருந்த குடியேற்றத் தமிழர் மரபினரே, ஈழம் என்ற பகுதியில் குடியேறியதாக வரலாறு கூறுகிறது. சுமேரியர்கள் பாபிலோனை வென்று ஆண்ட போது, இந்த ஈழ மக்களுடன் நல்லுறவு கொண்டிருந்ததாகச் செய்திகள் கூறுகின்றன.[78]

 OOO

எல் – தெய்வம்

எல் - எபிரேயம்

எல் - ஃபோனீசியம்[80]

எல் ஓகிம் (Elohim) - எபிரேயம்[81]

எல் - சடை (Elshaddai) - எபிரேயம்.[83]

இலு (Ilu) - பாபிலோனியம் (அக்காடியம்)[84]

இலா (Ilah) - அரபு.[85]

எல் - உகாரியம் (ugrait)[86]

தமிழர் குடியேற்ற நாடுகளான பாபிலோன், ஃபோனீசியா, பாலத்தீனம், அரேபியா போன்ற அக்காலத்து நாடுகளில், எல் என்ற கடவுள் பொதுவாக அறியப்பட்டிருந்தான். தமிழர் குடியேற்றம் கி.மு. 12000 ஆண்டுகளில் அப்பகுதியில் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதற்கானச் சான்றுகள் இன்று வெளி வரத் தொடங்கியுள்ளன. அக்காலமுதலே எல் தெய்வத்தை அவர்கள் வழிபட்டனர் என்பதை அறிய முடிகின்றது. மேற் கண்ட பெயர்கள் யாவும் விவிலியம் மற்றும் சில மேலை நாட்டப் பதிவுகளினின்றும் எடுக்கப்பட்டவைகளாகும்.

குடியேற்ற நாடுகளில் தமிழர்கள் எல்தெய்வத்தை வழி பட்டனர் எனும் போது, அவர்களின் தாய் நாடான குமரிக் கண்டத்திலும் எல் தெய்வம் வழிபடப்பட்டிருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது. குமரிக்கண்டம் பேரழறிவுற்ற போது (கி.மு. 12000 என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்), வெள்ளப் பாழினின்றும் தப்பிச் சென்ற தமிழ் மக்கள் சிந்துவெளி, மெசபத்தோமியா, பாலத்தீனம், எகிப்து போன்ற நாடுகளில் குடியேறினர் என்பது பல்வேறு கூறுகளால் இன்று மெய்ப் பிக்கப்பட்டுள்ளது. நோவா என்ற மாந்தன் வெள்ளப் பாழினின் றும் தப்பிப் பிழைத்த கதை விவிலியத்தில் சொல்லப்பட் டுள்ளது. விவிலியத்தில் எழுதப்படு முன்பே, சுமேரிய அசீரிய,

பாபிலோனிய ஆவணங்களில் இக்கதை பதிவு செய்யப்பட்டுள்ளது. விவிலியத்தில் இக்கதை கி.மு. 2000 ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெளிவாகின்றது. ஆரிய வேதம் கூறும் வெள்ளக்கதை, மிகவும் பிற்காலத்தில் (கி.மு. 500) பதிவு செய்யப்பட்டதே.

உலகின் பெரும் பகுதிகளை, கி.மு. 18000 - 12000 ஆண்டுகளில் நிகழ்வுற்ற பல்வேறு கடல் கோள்கள் அழித்துப் போட்டன என்று புவியியலார் திட்ட வட்டமாகத் தெரிவிக்கின்றனர். தமிழகத்தின் பெரு நகரான பூம்புகார், கி.மு. 12000 ஆண்டுகளில், கடலில் மூழ்கிப் போனதை இன்றைய கடல் அகழ்வாய்வுகள் மெய்ப்பித்துவிட்டன. விவிலியத்தில் நோவா என்ற ஒரு மாந்தனே தனது இல்லத்தாருடன் தப்பிப் பிழைத்ததாகக் கூறப்பட்டாலும், குமரிக் கண்டத்தினின்றும் பல்வேறு குழுக்கள் வெளியேறின என அறியலாம். நோவாவின் கதை சமய நோக்கில் கூறப்பட்டது என்பதை நோக்குதல் வேண்டும்.

விவிலியச் செய்திகள், குமரிக்கண்டம் பற்றிய பல்வேறு செய்திகளைக் கொடுக்கின்றன. பாவாணர் அவர்கள் நிறுவ முற்பட்ட குமரிக்கண்டக் கொள்கை, 1940களில் எள்ளி நகையாடப்பட்டது. மாந்தனின் தோற்ற நாடு குமரிக்கண்டமே யென்றும், முதல் மாந்தன் தமிழனே என்றும், தமிழே உலகின் முதன் மொழியென்றும், குமரிக்கண்டம் தற்போதுள்ள இந்தியப் பேராழியில் மூழ்கிப் போய்விட்டதென்றும், பல்வேறு செய்திகளைச் சான்று காட்டிப் பாவாணர் விளக்கினார். பாவாணருடைய இந்த ஆய்வுகள், சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப்பட்டது. முனைவர் தகுதிக்கான தனது ஆய்வை ஏற்றுக் கொள்ளும்படி சென்னைப் பல்கலைக் கழகத்திடம் பாவாணர் வேண்டிய போது, அடிப்படையில் ஆய்வுக்குரியதாக ஏற்றுக் கொள்ளப்படாமல், திருப்பி அனுப்பப்பட்டது. ஆய்வுக்குரிய தகுதியை பாவாணருடைய சான்றுகள் நிறைவு செய்யவில்லை என்றும் கூறி மறுக்கப்பட்டது.

கடந்த நூற்றாண்டின் இறுதியிலேயே, குமரிக்கண்டம் பற்றிய ஆய்வுகள் மேலும் பலரால் தொடரப்பட்டு, இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, குமரிக்கண்டக் கொள்கை நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தமிழரல்லாதார் இக் கொள்கையை ஏற்றுக் கொண்டால், தமிழின் பெருமை உயர்ந்து விடும் என்று கருதுவதால், இதனை எதிர்க்கின்றனர். தமிழரிலும் சிலர் இக்

கொள்கையை எதிர்ப்பது, முழுமையான வரலாற்று அறிவையும், தமிழறிவையும் அவர்கள் கொண்டிருக்க வில்லையென்பதையே காட்டுகின்றன. 1924ஆம் ஆண்டில் அறியப்பட்ட மொகஞ்சதாரோ அகழ்வாய்வுகள், மிகச் சிறந்த நகரிய நாகரிக மக்களை உலகிற்கு வெளிப்படுத்தியது. முறையான ஆய்வுகள் தொடரு முன்பே, சிந்துவெளி நாகரிகம் ஆரியர் நாகரிகமே என, ஆரியச் சார்புடைய வரலாற்றறிஞர்களும், ஆரியத்தைத் தாங்கிப் பிடித்தப் பல தமிழறிஞர்களும் அறிவித்தனர். முதன் முதலாக 1930 ஆண்டுகளில், அருள் தந்தை ஈராஸ் அடிகளார், சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமே என அறிவித்தபோது, அடிகளாரை பைத்தியக்காரன் என்றும், அரை குறை ஆய்வாளன் என்றும் கேலியும் கிண்டலும் செய்தனர்.இன்று சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமே என மெய்ப்பிக்கப் பட்டுவிட்டது.

அதே போல்தான் குமரிக்கண்ட கொள்கையை எள்ளி நகையாடிய தமிழகத்தின் அறிஞர் சிலரின் எதிர்ப்புகளுக் கிடையே, இன்று அக்கொள்கை நிறுவப்படுகின்ற சூழல்கள் தோன்றியுள்ளன. மிகவும் சரியான நோக்கில்தான் பாவாணர் குமரிக்கண்டக் கொள்கையை ஆய்வு செய்தார் என்பது இப்போது வெளிப்பட்டுள்ளது. குமரிக் கண்டக் கொள்கையை நிறுவ பலரும் பலவழிகளில் முயன்று வருங்காலையில், விவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூல் வழியாகவும் இக் கொள்கையை நிறுவ இயலும் என இப்பகுதிகள் விளக்குகின்றன. விவிலியத்தின் தொடக்கப் பகுதியான ஆதியாகமம் (Genesis) என்ற தொகுப்பில், முதல் பதினோரு ஆதிகாரங்கள் பற்றி ஆய்வு செய்த விவிலிய அறிஞர்கள், அந்நிகழ்வுகள் எந்த நாட்டில் அரங்கேறின என்பதைத் தெளிவுபடுத்த இயலவில்லை என அறிவித்து விட்டனர். உலகம் தோன்றிய அல்லது படைக்கப் பட்ட நாளிலிருந்து, கி.மு. 2000 ஆண்டுகளில் வரையிலான செய்திகளை, முதல் பதினோறு அதிகாரங்கள் விளக்குகின்றன. ஆதியாகமத்தின் பன்னிரெண்டாம் அதிகாரம் தொடங்கி முடிவு வரையிலுள்ள செய்திகள் யாவும் கி.மு. 2000 ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்வுற்றவை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளன. அபிறகாம் என்ற யூத இனத்தின் முதுபெரும் தந்தையின் வரலாறு இதற்குப் பிறகே தொடங்குகிறது. இந்தப் பதினோறு அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் நிகழ்வுற்ற இடம் குமரிக் கண்டமே

என்பது புதிய ஆய்வுப் பொருளாகும். இதனை மெய்ப்பிக்கும் வகையில் அவ்வதிகாரங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளை, பல்வேறு நோக்கில் ஆய்வு செய்யும் போது, அவை தெளிவான உண்மைகளைத் தெரிவிக்கின்றன.[87]

அந்த அடிப்படையில், அபிறகாம் காலத்துக்கு முன்பு நிகழ்வுற்றதாகச் சொல்லப்படும் செய்திகளில் எல் தெய்வம் பற்றிய குறிப்புகள் உள்ளனவா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அபிறகாமின் காலமான கி.மு. 2000 ஆண்டுகளுக்குப் பிறகு சொல்லப்பட்ட விவிலியச் செய்திகளிலும், பாபிலோனிய ஃபோனீசியக் குறிப்புகளிலும் எல் தெய்வம் அறியப்பட்டுள் ளதைக் காணலாம். எல் தெய்வம் குமரிக்கண்டத்தில் அறியப் பட்டிருந்ததா என்பதை மெய்ப்பிக்க, தமிழ் இலக்கியங்களில் எந்தச் சான்றுகளும் இல்லை. இதற்கும் நாம் விவிலியத்தையே நாட வேண்டியுள்ளது. அபிறகாம் காலத்துக்குப் பிறகு எல் என்ற ஈற்றுச் சொல் கொண்ட பல பெயர்கள் அறியப்படு கின்றன. அபிறகாம் காலத்துக்கு முற்பட்ட செய்திகள் குமரிக் கண்டத்தில் நிகழ்வுற்றன எனக் கருதினால், அந்நிகழ்வுகளில் எல் எனும் சொல் இடம் பெற்றிருக்க வேண்டும்.

ஆதாம் முதல் நோவா வரையில் கூறப்பட்ட செய்திகளில் எல் என்ற சொல் சில விடங்களில் காணப்படுகின்றது. முதல் பெற்றோராகச் சொல்லப்படும் ஆதாம் - ஏவாள் இணையின் இரண்டாவது மகனாக ஆப்-எல் என்பவன் அறியப்படுகின் றான்.[88] முதல் மகன் காயன் (Cain) எனப்பட்டான். எபிரேய மொழியில் காயன் என்ற சொல்லுக்கான பொருள் ஆதாம் ஏவாளின் மரம், “காய்த்துக் கனி கொடுக்கத் தொடங்கி விட்டது,” என்ற இலக்கியச் செய்தியையுணர்த்தும், ஏவை, தான் காய்க்கத் தொடங்கிவிட்டதாகவும், தனது கனியே காயன் என்றும் கூறுகிறாள்[89]. கனியின் முதல் நிலை காய் எனப்படும் காய் என்ற சொல், கனி என்ற பொருளிலும் உணரப்படும்.

காய்த்த மரமே கல்லடி படும்.

காயா மரம் என்பது, கனி கொடுக்காத மரம் என்றும் பொருள் தரும்.காய் கருமையாகவும் (பச்சை) கனி சிவந்தும் காணப்படுவதால், கருமையைக் குறிக்கக் காய் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டது. காயாம் பூ : கருநீல வண்ணமலர். அது வடமொழியில் காஷா என்றும், தமிழில் காகாம்பு என்றும் அழைக்கப்படுகின்றது.

"காயாம்பூ மேனியன்"

திருமாலின் மெய் வண்ணம் பற்றிச் சொல்லப்படுவதாகும். காய் என்ற தமிழ்ச் சொல், தமிழில் என்ன பொருளைத் தரு கின்றதோ, அதே பொருளில் எபிரேய மொழியில் காய் - காயன் என்றவாறு சொல்லப்படுவதை நோக்குக.

இளைய மகன் ஆப்-எல் எனப்பட்டான். ஆப்-எல் என்ற சொல்லுக்கான பொருறை விவிலிய ஆய்வாளர்கள் சரியாக விளக்க வில்லை. Heb-el என்ற எபிரேயச் சொல்லுக்கு ஒன்று மின்மை (nothingness) என்று பொருள் கூறி, அப்பொருளை ஆப் - எல் சொல்லுடன் இணைக்க முயன்றுள்ளனர். இதனைத் தவறு என்று சில ஆய்வாளர்கள் கருத்துரைத்து, அப்லு (Aplu) என்ற சுமேரியச் சொல்லை மூலம் காட்டுகின்றனர். அப்லு என்ற சுமேரியச் சொல்லுக்கு, மகன் என்பதே பொருளாகும்.[90] பிறிதொரு இடத்தில் அப்சு (Apsu) என்பது நீர்க்கடவுள் (Sea God) என்றும் சுட்டுகின்றனர். எனவே, ஆப் - எல் (Ab-el) என்ற எபிரேயச் சொல்லுக்குச் சரியான பொருளை, எபிரேய மொழி யாளர்களால் சொல்ல இயலவில்லை என்பதே உண்மையாகும். ஆப் - எல் போன்றே, பல எபிரேயச் சொற்களுக்கு மூலமும் வேரும், மொழியியலாளர்களால் காண இயலவில்லை.

ஆப்-எல் என்பான், ஆடுமாடுகளை மேய்த்து வந்ததாக விவிலியம் விளக்குகிறது. தமிழில் ஆ என்று ஓரெழுத்துச் சொல் பொதுவாகக் காளை - பசுவைக் குறித்தது, சிறப்பாகப் பசுவைக் குறித்தது. ஆ என்றும் உயிர் நெடில், யா என்ற எழுத்தோடும் தொடர்புடையது. யா எனத் தொடங்கும் பல சொற்கள் ஆ எனவும் தொடங்கும்.

யானை - ஆனை; யாடு - ஆடு; யாண்டு - ஆண்டு; யாதி - ஆதி; யார் - ஆர்; யாளி - ஆளி என நீளும்.

தொடக்கத்தில் யா எனும் எழுத்தில் தொடங்கிய பல சொற்கள், பிற்காலத்தில் ஆ என்ற எழுத்தாலும் தொடங்கப் பெற்றன.

இதன் வழியில் ஆன் என்று சொல்லப்படும் வழக்கு, பயன் என்ற சொல்லையே முதலில் பெற்றிருந்தது. ஆன் : பசுப்பொது (cow).

ஆன் : எருது. (bull)

ஆன் – ஆனிரை. கால் நடைகள்

பல்லா னிரையொடு படர்குவிர் நீரெனக்
காவல னானிரை நீர்த்துறை படியா – சிலம்பு,[91]

உட்குடைச் சீறூ ரொருமகனா னிரைகொள்ள வுற்ற காலை
– சிலம்பு,

ஆன் - யான் என்பது மாட்டையும், ஆடு - யாடு என்பது ஆட்டையும் குறித்த தொல் தமிழ்ச் சொற்களாகும். யான் - யாடு என்பவை அழகுணர்ச்சி மிகுந்தவைகளாகவும் அறியப்படுகின்றன.

ஆ என்ற சொல், பசுவைக் குறித்தது போன்றே, பெண்ணையும் பெண் குறியையும் குறித்தது. இலங்கும் குறி (லிங்கக் குறி) யான, பெண் குறியை ஆ எனவும், ஆ வைக் கொண்டுள்ள சிவன், ஆவுடையப்பன் எனவும் அறியப்படுவதை நோக்குக. ஆ என்ற ஓரெழுத்துச் சொல்லுக்குத் தொடக்கம் என்ற பொருளும் உண்டு. உயிரினங்களின் தொடக்கம் பெண்ணால் அறியப் படுவதாலும், ஈன்றெடுக்கும் பிறப்புறுப்பும் தொடக்கம் என்றும் வளர்ச்சி என்றும் அறியப்படும்.

இக்கருத்தை வலியுறுத்துவது இலங்கும் (லிங்க) வழி பாடாகும். ஆ என்ற சொல்லுக்குத் தொடக்கம் என்ற பொருளை, பரிபாடல் விளக்குகிறது.

ஆநா ணிறைமதி யலர்தரு பக்கம்போல் – பரிபாடல்,[93]

பொருள் : பிறை தோன்றிய நாள் தொடங்கி நாள்தோறும் ஒரு கலை வளர்கின்ற முற்பக்கம் போல ......, என்பதாம்.

ஆ என்ற சொல், மாட்டைக் குறித்ததே என்பது தெளிவு. இன்றும் நாட்டுப் புறங்களில், மாட்டை ஆவு என்று அழைக்கும் வழக்குள்ளதை நோக்கு.

ஆ - ஆவு என்ற தமிழ்ச் சொல்லே, வேற்று மொழிகளில் வகரம் பகரமாக மாறும் என்பதற்கிணங்க, ஆவு - ஆப் எனத் திரிந்துள்ளதை நோக்குக.

ஆப் - எல் என்ற எபிரேயச் சொல்லுக்கு மாட்டுக்கு அல்லது எருதுக்குத் தலைவனாகிய கடவுள் (எல்) என்பதே பொருளாகும். ஆ என்பதைப் பசுவாகக் கொண்டால், ஆ - எல் என்பது, பசுவும் காளையும் என்ற பொருளையே தருகின்றன. எல் என்ற சொல், எருது என்ற சொல்லின் முன்னொட்டச்

சொல்லாகும். எல் + து = எருது எனப் புணரும் என மாறல் கார்த்திகேயனார் கூறுகிறார்.

ஆப் - எல் என்ற விவிலியச் சொல்லுக்கு, எபிரேய மொழியியலார் தெளிவான பொருளை உரைக்கவில்லை. ஆனால் விவிலியம் தரும் செய்தியில், ஆப் - எல் என்பான், கால்நடைகளை மேய்த்து வந்த இடையன் (Shepherd) என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளதால், பசுவையும் காளையையும் குறித்த தமிழ்ச சொல்லாகவே ஆப்-எல் என்ற சொல் உள்ளது என்பது தெளிவு.

எல் என்ற தனது கடவுளின் பெயரை இணைத்து, ஆதாம் தன் மகனுக்குச் சூட்டியுள்ளதால், ஆதாமின் கடவுள் எல் என்றே அறியப்படும். ஆதாமின் கடவுள் எல்தான் என விவிலியம் நேரிடையாகச் சொல்லவில்லையாயினும் விவிலியம் தரும் தரவுகள் இச்செய்தியை உறுதிப் படுத்துகின்றன.

ஆதாம் முதல் நோவா வரையிலான மரபு வழிப் பட்டியலொன்றை விவிலியம் தருகின்றது. இதில் பத்து பேர் அறியப் படுகின்றனர்.[94] இவர்களுடைய அகவை, ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஒரு மாந்தன் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தான் என்ற செய்தியை விவிலிய ஆய்வாளர்களே ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, ஒரு மரபினரின் செய்தியே ஆயிரம் ஆண்டுகளாகச் சொல்லப்பட்டுள்ளது என்ற அடிப்படையில், பத்து மரபினரின் காலம் ஏறக்குறைய 10000 ஆண்டுகளாகக் கூறப்பட்டுள்ளது. நோவாவின் காலம், எதுவென்பது பற்றிய குறிப்புகள் விவிலியத்தில் இல்லை. இருப்பினும் நோவாவின் காலம், குமரிக் கண்டம் அழிந்துபட்ட காலத்தோடு தொடர்பு பெறுவதால், குமரிக்கண்ட இறுதி அழிவையும் பூம்புகாரின் அழிவையும் கி.மு. 12000 ஆண்டுகள் என, அண்மைக்காலச் செய்திகளால் அறியலாம். எனவே, ஆதாமின் காலம், கி.மு. 20000 எனக் கொள்ளலாம்.

ஆதாம், (எல்) கடவுளால் படைக்கப்பட்ட முதல் மாந்தன் என்று விவிலியம் கூறினாலும், ஆதாம் முதல் மாந்தன் அல்லன் என்பதற்கான செய்திகளையும் விவிலியமே அளிக்கின்றது.[95] இச் செய்திகள் பற்றி ஆய்வுகள் செய்த விவிலிய ஆய்வாளர்கள், ஆதாம் படைக்கப்பட்ட முதல் மாந்தன் என்று கருதுவதை விட, கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்ட முதல் மாந்தன் என்ற கருத்தையே முன் நிறுத்துகின்றனர். ஆதாமின் காலத்திலேயே

மக்கள் வாழ்ந்திருந்ததாக விவிலியம் கூறும் செய்திகளை அடிப் படையாகக் கொண்டே இம்முடிவை மேற்கொண்டனர்.

வேளாண்மைத் தொழில் என்பது, மாந்தன் பண்பட்ட நாகரிக வாழ்வைத் தொடங்கி, நிலையான குடியிருப்புகளில் தங்கியிருந்த காலத்தே வளர்ச்சி பெற்ற தொழிலாகும். நாடோடி வாழ்க்கை முறை மாறி நகரிய, ஊரக நாகரிகத்தில் மக்கள் வாழத் தலைப்பட்ட காலத்திலேயே ஆதாம் வாழ்ந்திருந்தான் என்பதை காயன் வேளாண்தொழில் செய்தான் என்ற விவிலியச் செய்தி உறுதிப்படுத்துகின்றது. முல்லை நிலத்துத் தொழிலான ஆடுமாடுகளை வளர்க்கும் ஆயனாக, ஆதாமின் இளையமகன் விளக்கப்படுகிறான்.

மேலும் காயனின் வழிவந்தோர், கால்நடைகளைப் பெருக்குவதிலும் கூடாரங்கள் செய்வதிலும் புதிய உத்தியைக் கொண்டிருந்த செய்தி[96], இசையின் நுணுக்கங்களை அறிந்து, இசைக் கருவிகளை மீட்டிய செய்தி[97], தொழில் வளர்ச்சிக்கு உதவும் மாழங்களை (Metal) உருக்கிப் புதுப்புது கருவிகளை உருவாக்கிய செய்தி[98] ஆகியவை, மிகச்சிறந்த பண்பாட்டு நாகரிகத்தில் அம்மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை உறுதிப் படுத்துகின்றன.

உடைமை (Property) என்ற பொருளியல் கூறுகள் அறியப் படாத காலத்தில், மக்களிடையே காழ்ப்புணர்ச்சிகள், போட்டி பொறாமைகள் தோன்றியிருக்க வில்லை. உலகின் போராட்ட உணர்வுகளை செல்வம் வழிவந்த பொருளியல் கரணியங்களே தூண்டி விட்டன எனலாம். அந்த அடிப்படையில், காயன் தனது உடன் பிறந்தானையே கொல்லுமளவுக்குத் துணிந்தது, நாகரிக வாழ்வின் எதிர்மறையான தாக்கமாகும். ஆதாம் ஏவாள் இணையின் மக்களும், பெயரக் குழந்தைகளும் பண்பட்ட நாகரிக வாழ்வில் சிறப்புற்றிருந்தனர் என்ற செய்தியை விவிலியம் விளக்குவதால், கி.மு. 20000 ஆண்டுகளில், குமரிக்கண்டத்துத் தமிழர், அனைத்துத் துறைகளிலும் சிறப்புற்றிருந்தனர் என அறியலாம்.

நோவாவுக்கு முன்பிருந்த பத்துத் தலைமுறை மரபுகளில், ஆறாம் மரபின் தலைவனாக மகலல் - எல்[99] (Mahalal - el) என்பான் சொல்லப்படுகின்றான். எல் என்ற ஈற்றுச் சொல்லுடன் முடியும் இப்பெயர், எல் கடவுளோடு தொடர்புடையது என்பது

தெளிவு. இருப்பினும், மகலல் என்ற சொல்லுக்கான பொருளை விவிலியம் விளக்க வில்லை; விவிலிய ஆய்வாளர்களும் கூறு முற்படவில்லை. இவனுடைய மரபு வழி (அகவை) 895 ஆண்டு களாகச் சொல்லப்பட்டுள்ளது.[100]

மேலும் இப்பேரண்டம் படைக்கப்பட்ட காலத்துக்கு முன்பாகவும், படைக்கப்பட்ட காலத்துக்குப் பிறகும் அறியப் படும் தேவ மாந்தர்கள், காவரி - எல் (Gabri-el), மிக்கா - எல் (Micha - el), இரவா - எல் (Rapha-el), ஊரி - எல் (Uri-el), பனு எல் (Phanu-el), அசாசு - எல் (Azaz-el) என்போராவர். இவர்களைப் பற்றிய ஆங்கிலச் சொல், ஏஞ்-எல் (ang-el) எனப்பட்டது. அசாசு என்பதே பிசாசு எனத் திரிபுற்றிருக்கலாம்.

மேற்கண்ட தேவமாந்தர்கள் (அசாசு - எல்லைத் தவிர) எல் என்ற கடவுளின் ஆணைகளை மேற்கொண்ட செயல் படும் தேவதூதர்களாகக் கருதப்படுகின்றனர். விண்ணுலகில் கடவுள் தனிமையில் இருப்பதில்லையென்றும், தமது ஆணை களை நிறைவேற்றவும், தமது பணிகளைச் செயல்படுத்தவும், பல பணியாளர்களை வைத்துக் கொண்டிருப்பதாகவும், பொது வாக எல்லாச் சமயங்களுமே நம்பிக்கைகளைக் கொண்டுள்ளன. எல் என்ற கடவுள் பற்றிய செய்தி, பழைய ஏற்பாட்டின் ஆதியாகமம், முதல் பதினோரு அதிகாரங்களில் நேரிடையாகச் சொல்லப்படவில்லை. இதே போன்று, இந்த தேவதூதர்கள் பற்றிய குறிப்புகளும் காணப்படவில்லை.

ஆதாம் ஏவாளை இடன் (Eden) தோட்டத்தினின்றும் வெளியேற்றிய கடவுள், மீண்டும் அவர்கள் அங்கே நுழைந்து விடாதபடி, அச்சமூட்டும் சுழலும் தீ வாள் (fiery revolving sword) ஒன்றைக் கையிலேந்திய தேவதூதனைக் காவலுக்கு வைத்தார்.[101] இவர்களை, கெரூப் (Kerub) என்று ஒருமையிலும், கெரூபிம் (Kerubim) என்று பன்மையிலும் எபிரேய மொழி சுட்டுகிறது.[102] இவர்கள் மன்னனிடம் பணியாற்றும் வேலைக்காரர்களைப் போல உருவகப் படுத்தப்பட்டுள்ளனர். பொதுவாக, கரிய உருவம் என்பது அச்சமூட்டக் கூடியதே. இந்தக் கடவுளின் காவலர்கள், கொடுங்கரிய உருவத்தைக் கொண்டிருந்தனர் என்பது பற்றியே கெரூப் என்ற சொல்லால் அழைக்கப் பட்டனர் எனலாம். கறுப்பு என்ற தமிழ்ச் சொல்லே, கெரூப் என்று எபிரேய மொழியில் திரிந்துள்ளது. இந்த உருவகமும் நம்பிக்கையும் தொல் தமிழரிடம் காணப்பட்டது பற்றியே,

தம்மைப் போலவே, அக்கடவுளின் காலவர்களும் கறுப்பா யிருந்தனர் என்றுரைத்தனர். இடன் தோட்டத்தில் காவல் செய்த கறுப்பைப் போலவே, பல கறுப்புகள் பற்றிய செய்திகள் விவிலியத்தில் காணப்படுகின்றன. இரண்டு கறுப்புகள் மோசே உருவாக்கிய கடவுளின் பெட்டகத்தைக் காத்தன[103]. சாலமன் கட்டிய தேவாலயத்திலும் இந்தக் கறுப்புகள் காணப்பட்டன[104]. *(I அர. 6:23).*

இதே நம்பிக்கைகள் உகாரிய (ugaritic) தொன்மக் கதை களிலும் காணப்பட்டன. ஆழியன் வால் (வால் என்ற கடல் தெய்வம்), Aleyan Baal என்று சொல்லப்பட்ட கடவுளுக்கு முன்பு காவலிருந்தன.[105] எசெக்கியல் கூறும் செய்திகளின் படி, இக்கறுப்புகள், மாந்த, அரிமா, காளை, பருந்து போன்ற முகங் களோடும் நான்கு இறக்கைளோடும் காணப்பட்டன. எகிப்திய, இத்திய (Hittite) கறுப்புகள் அரிமா முகத்துடனும், மாந்த உடலுடன் இருந்தன.[106] பாபிலோனிய கறுப்புகள் காளை முகத்துடன் இறக்கைகளைக் கொண்டு மாந்த உடலுடன் காட்சியளித்தன. இதே போன்று ஃபோனீசிய, அசீரிய நாட்டு கோயில்களின் வாயில்களை இவை காவல் காத்தன.[107] அரிமா உடல் கொண்ட ஸ்பிங்ஸ் (Sphinx) என்ற எகிப்தியச் சிலை, பாரோவின் உடல்களைக் காவல் செய்தது[108]. இடைக்காலத்து ஐரோப்பிய ஓவியக் கலைஞர்கள், இக்கறுப்புகளை இளைஞர் களாகக் காட்டி அவர்களுக்கு இறக்கைகளை வைத்துவிட் டனர்.[109] பிராமண சமயம் இக்கறுப்புகளைத் “துவார பாலகர்” களாகக் காட்டின. உலகெங்கும் பரவியிருந்த இந்தக் கறுப்புக் காவலர்கள், தொல்தமிழரின் நம்பிக்கைகளின் வெளிப்பாடு களே என்பதை கறுப்பு என்ற தமிழ்ச் சொல் விளக்குகிறது. கறுப்பு என்பதற்கான (கெரூப்) பன்மைச் சொல்லாக கெருபிம் சுட்டப்படுகின்றது. இதுவும் கூட கறுப்பும் என்ற சொல்லில் விடுபட்ட “ன” கரத்தைச் சேர்க்கும் போது, கறுப்பினம் என்ற பன்மைச் சொல்லையே தருவதை நோக்குக.

இந்தக் கறுப்புகளுக்கு பல மொழிகளில் பல பெயர்கள் காணப்பட்டாலும், எபிரேய மொழியில் ஏழு அல்லது எட்டு பெயர்கள் சுட்டப்படுகின்றன. இப்பெயர்கள் யாவும் கி.மு. 2000 ஆண்டுகட்குப் பிற்பட்ட விவிலியச் செய்திகளிலேயே காணப் படுவதோடு, ஒவ்வொரு பெயரின் பின்னொட்டுச் சொல்லாக, எல் இணைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

காப்ரி – எல் (Gabri-el)

காப்ரி என்ற சொல்லுக்கு எபிரேய மொழியில் வலிமை, வல்லாண்மை (strong) என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இச் சொல், அரபு மொழியில் ஜிப்ரீல் என்று திரிந்துள்ளது. காப்ரி - எல், தேவதூதர்களின் தலைவனாக விவிலியத்தில் சொல்லப் படவில்லை. ஏழு தூதர்களில் ஒருவனாக காப்ரி - எல் அறியப் படுகின்றான். இடன் (Eden) தோட்டத்தைக் காவல் செய்தது இவனே என்பதற்கான செய்திகள் விவிலியத்தில் இல்லை. தானி - எல் அல்லது தனி - எல் என்பான் சிறையிலிருந்த போது, சிக்கலான காட்சி ஒன்றுக்கு விளக்கம் அளித்தான் என்று அவ்வாகமம் கூறுகிறது.[107] திருமுழுக்கு அருளாளன் (John the Baptist) பிறக்கப் போவதை, அவன் தந்தை சக்கரியாவுக்கு அறிவித்தவன் காப்ரி - எல்லே என்று விவிலியம் கூறுகிறது.[108] இயேசு பிறக்கப் போவதை மறியன்னை (Mary) யிடம் எடுத்துரைத்தவனும் இவனே[109] ஈநோக்கின் (Apocyphal Books) நூல்களில் பல இடங்களில் காப்ரி - எல் சொல்லப்படுகிறான்.[110]

தொல் தமிழ்ச் சொற்கள் பலவும் ஓரெழுத்து முறை யிலேயே காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களுக்கு, க, உ, ங, ச, ரு, சு, எ, அ, கூ என்றவாறு வரிவடிங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு எழுத்தும் ஒரு சொல்லைத் தாங்கி நிற்பனவாகும். எண் ஒன்றை க என்ற எழுத்து விளக்குகிறது. க என்ற எழுத்து உள்ளடக்கியச் சொல் யாது? அது கடவுள் ஒருவரே என்ற கருத்தை உள்ளடக் கியதாகவே உள்ளது. க எனும் உயிர்மெய் எழுத்து, தொல் தமிழ்க் கடவுளான சிவனை அல்லது எல்லைக் குறித்தது. க என்னும் தமிழ்க்கடவுளை, ஏக (eka) என்று வடமொழியில் திரிந்துக் கொண்டனர். ஏக என்ற சொல்லுக்கு பிரசாபதி (Prajapati) எனவும் பொருள் கூறினர். தமிழில் எண் ஒன்றாகச் (One) சொல்லப்பட்ட க, வட மொழியில் ஏக - ஏக் என்ற ஒன்றைக் குறித்தது. ஒன்றுக்கு ஏக் எனவும், பன்மைக்கு அனேக் எனவும் வடமொழியாளர் திரித்துக் கொண்டனர். (மேலும் செய்திகளுக்கு, ஆசிரியரின் "எபிரேயத்தின் தாய்மொழி தமிழே" என்ற நூலைக் காண்க)

சிந்து வெளியில் காணப்படும் பல சொற்களில், க-கா-ககா, காகா, போன்ற சொற்கள் காணப்படுகின்றன. இவையாவும் கடவுளையும், காப்பவனையும், காவலனையும் குறித்த சொற்

களாகவே அறியப்படுகின்றன. காக்கும் தொழிலைச் செய்பவன் கடவுள் எனப்பட்டான். அவன் காவலன் என்றும் கூறப்பட்டான். இவை போன்றே ப, பா, பட, படா, போன்ற சொற்களும் சிந்துவெளியில் காணப்படுகின்றன.[111] இவைகளுக்கு பொருள் கண்ட ஆய்வாளர்கள், படை - படைத்தலைவன் - படைக் காவலன் என்று படை (Army) தொடர்பான பொருள் கொண்ட தோடு, படை - படையல் - படைப்பொருள் (offerings to god) படைப்போன் (Priest) என்றும் பொருள் கொண்டனர். படை என்ற ஒரு சொல், போர்ப் படையையும், கடவுளுக்குப் படைக்கப்படுவதையும் குறித்துள்ளது.

படை என்ற தமிழ்ச் சொல், படேசி (Patesi) என்று பாபிலோனிய மொழியில் காணப்பட்டு, அங்கு இவ்விரு தமிழ்ப் பொருளையே குறித்துள்ளது.[112] ஆட்சித்தலைவனும், சமயத் தலைவனும் ஒருவனாகவே அறியப்பட்டு, அவன் படேசி என்ற சொல்லால் அழைக்கப்பட்டுள்ளான். எகிப்திய மொழியில் படா (Patah) எனும் சொல்,[113] படேசி என்ற பாபிலோனியச் சொல்லின் பொருளையே தருகிறது. மெம்பிஸ் (Memphis) நகரத்துத் தலைவனை படா என்றே எகிப்தியக் குறிப்புகள் கூறுகின்றன.

படை (தமிழ்) ; போர்ப்படை, படையல்

படேசி (பாபிலோனியம்) : போர்ப்படைத்தலைவன், சமயத்தலைவன்,

படா (எகிப்தியம்) : மேற்கண்டதே.

இந்நோக்கில் காப்ரி என்ற எபிரேயச் சொல், கா + வரி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க. கா = காக்கும் தன்மை; வரி : நீண்ட, நெடிய, தொடர்ந்த, முடிவற்ற. எப்போதும் காக்குந் தொழிலைச் செய்யும் காவலனை, காவரி என்று எபிரேய மொழி கூறுகிறது. தமிழில் உள்ள வகரம், எபிரேயத் தில் பகரமாகச் திரிந்துள்ளது. எல் என்பது கடவுள் பெயராத லால், காப்ரி - எல் என்ற சொல்லுக்கு, காக்கும் திறன் கொண்ட வலிமையான எல் கடவுள் என்றவாறு பொருள் கொள்ளலாம். இச் சொல் தமிழ்ப் பொருளையே கொண்டுள்ளதால், காவரி - எல் என்ற தமிழ்ச் சொல்லே, காப்ரி - எல் என எபிரேய மொழியில் திரிந்தது என்க.

மிக்கா எல் (Micha - el)

காப்ரி - எல்லைப் போன்றே கருதப்படும் வானதூதன் மிக்கா - எல் ஆகும். இவன் காப்ரி - எல்லுக்குத்துணையாகவும், யூதர்களுக்குக் காவலாகவும் எகோவா கடவுளால் நிறுத்தப் பட்டவனாவான். தானி - எல் ஆகமம், இச் செய்தியை உறுதிப் படுத்துகின்றது.[114] தேவமாந்தர்களை இறைவன் படைத்த பிறகு, அவர்களில் சிலர் இறைவனுக்கு எதிராகத் திரும்பினர் என்றும், அவ்வாறு எதிர்த்தவர்களைத் தாக்கியவர்களில் முதன்மை யானவன் மிக்கா - எல் என்றும், யூதத் தொன்மக் கதைகள் கூறு கின்றன. கத்தோலிக்கத் திருச்சபையின் காவலனாக மிக்கா எல் கருதப்படுவதோடு, விண்ணகத்துக்குச் செல்லும் ஆன்மாக் களுக்கு வழிகாட்டியாகவும் விளங்குகிறான் என கிறித்துவர்கள் நம்புகின்றனர்.

காப்ரி - எல் என்ற சொல்லில் அறியப்பட்ட கா எனும் சொல், மிக்கா என்று இங்கு ஈற்றுச் சொல்லாகிறது. காப்ரி எல்லுக்குத் துணையாய் இருப்பவன் (Micha - el is the name of one of the cheif princes who assists Gabri - el)[115] என்று தானியல் ஆகமம்[116] கூறுகிறது. மெய் + கா எனும் தமிழ்ச் சொற்கள், மெய்க் காவலன் என்ற சொற்களின் சுருக்கமே எனலாம். மெய் (Mi) + கா (cha) என்றவாறு சொல்லப்பட்டு, எல் என்ற கடவுளின் பெயரோடு இணைந்தது.

மெய்க் கா - எல் என்ற தமிழ்ச் சொல்லே, மிக்கா- எல் எனத் திரிந்தது என்க.

இரபா – எல் (Repha - el)

ஏழு வான தூதர்களில் ஒருவன். வழிப் பயணத்துக்கும், பகைவர்களை ஒறுப்பதற்கும் இவன் பாதுகாவலனாகச் சொல்லப்படுகின்றான்[117]. வானதூதர்களின் போராட்டத்தில் அசாசு - எல் என்பவனை வீழ்த்தி, அவனைக் கொடிய இருட்டில் இரபா - எல் தள்ளினான்[118]. ஏழு தூதர்களில், சிறப்பானவர் களாகக் கருதப்படும் நான்கு தூதர்களில், (மேலே குறிப்பிடப் பட்டுள்ளவர்கள்) இவனும் ஒருவனாவான். கத்தோலிக்கத் திருச்சபை, தீய ஆவிகளை எதிர்த்துப் போரிடுதல், வழித்துணை யாகச் செல்லுதல், காயங்களைக் குணப்படுத்துதல் போன்ற பணிகளை இரபா - எல் செய்வதாகக் கூறுகிறது.

இறைவனை எதிர்த்துப் போரிட்ட சில வானதூதர்களை ஒறுத்து, அவர்களைக் கொடிய இருட்டில் தள்ளியவன் இரபா - எல் எனும் தேவதூதனே என்று இவனைப் பற்றிய குறிப்புகள் கூறுவதால், இரபா என்பது இருட்டோடு தொடர்புடைய சொல்லாகவேயிருக்க வேண்டும். இர் என்ற தமிழ் வேர்ச் சொல்லினின்றே, இரா - இரவு - இருமை - இருள் - இருட்டு போன்ற சொற்கள் நீண்டன.

இரவு - எல் எனும் தமிழ்ச் சொற்களே, இரபா - எல் எனத் திரிந்தது என்க. வகரம், பகரமாகத் திரிந்துள்ளதையும் நோக்குக.

கனானியரின் எல் தெய்வம்

இசுரா - எல் எனப்படும் நாடு, யூதர்கள் அந்நாட்டுக்குக் குடியேறு முன்னர், கனான் (canaan) நாடு என்ற அழைக்கப் பட்டது. நோவா என்பானின் மகன்வழியில் தோன்றிய கனான் என்பானின் மரபினர் வாழ்ந்த நாடே கனான் நாடு என்று சொல்லப்பட்டது. கனான் என்பானின் மகன் சிதோன் (Sidon) என்பான், ஃபோனீசியாவில் குடியேறியவன்.[119] கி.மு. 2000 ஆண்டுகளில் சிதோனின் வழிவந்தவர்கள் ஃபோனீசியாவில் வாழ்ந்திருந்தனர். சிதோன் என்ற துறைமுக நகரம், அவர் களுடைய பலதலை முறைகளுக்கு முந்திய பாட்டன் பெய ராகும். ஃபோனீசியா என்ற நாடு, தற்காலத்தில் இலெபனான் என்று அழைக்கப்படுகிறது. எனவே, ஃபோனீசியரும், கனானி யரும் உடன் பிறந்த பங்காளிகளே எனலாம்.

இவ்விரு மக்களும் எல் தெய்வத்தை வழிபட்டனர். கனான் என்பவன் நோவாவின் இரண்டாம் மகன் வழிப் பெயரன் ஆவான். கனான் எல் தெய்வத்தை வழிபட்டான் என்ற செய்தி யின் அடிப்படையில், நோவாவும் எல் தெய்வத்தையே வழி பட்டான் என அறியலாம். நோவா என்பான் குமரிக் கண்டத் தினின்றும் மேற்கே சென்று குடியேறியவன் என்பதால், குமரிக் கண்டத்திலும் எல் தெய்வ வழிபாடு இருந்தது தெளிவாகிறது. கனான் என்ற சொல்லுக்குக் கருமை அல்லது பழுப்பு வண்ணம் என்றவாறு பொருள் கொள்கின்றனர். நோவா தமிழன் என்ப தாலும், அவன் மகன்வழிப் பெயரும் தமிழனே என்பதாலும், அவன் கரிய நிறம் கொண்டிருந்ததாலும், அவனைக் கருப்பன் என்றே அழைத்தனர். கருப்பன் என்பது, கன்னன் என்ற தமிழ்ச் சொல்லாலும் அறியப்படும்.

கன்னுதல் : கருத்துப் போதல். காலில் அடிபட்ட இடம் கன்னிப் போயிற்று.

கன்னி என்ற சொல்லுக்கே கருப்பு நிறமுடையவள் என்பதே பொருளாகும்; கருப்பி.

கன்னங்கரேல் என்ற வழக்குச் சொல்லை நோக்குக.

கன்னல் இடம் = கன்னடம். கரிய மண் உடைய பகுதி, மாநிலம்.

கன்னல் = கரிய நிறம் கொண்ட கரும்பு.

கன்னன் = கரிய நிறம் கொண்ட மாந்தன்.

எனவே, கன்னன் என்ற தமிழ்ச் சொல்லே, கனான் என்று எபிரேய மொழியில் திரிந்தது என்க.

உகாரிய நகரச் சான்றுகள்

உகாரித் (ugarit) நகரம் பற்றி விவிலியத்தில் விளக்கப் ட வில்லையாயினும், இது ஃபோனீசிய நாட்டின் சிறப்பு மிக்க நகரமாகும். கி.மு. 2000 ஆண்டுகளில் இவ்வூர் சிறப்புமிக்கத் துறைமுகநகராக விளங்கியது. இன்று இவ்வூர் இரஸ் சம்ரா (Ras Shamra) என்று வழங்கப்படுகிறது. பிலித்தியர்கள் இந்நகரை கி.மு. 1200 ஆண்டுகளிலுள்ள முற்றிலுமாக அழித்துவிட்டனர். இதனுடைய இடிபாடுகள் மூவாயிரம் ஆண்டுகளாக்கிடந்து மண் மூடிப் போன நிலையில், கி.பி. 1929ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாய்வில், நூற்றுக் கணக்கான களி மண் தட்டுகளில் எழுதப்பட்டிருந்த இலக்கியங்கள் வெளிச்சத் துக்கு வந்தன. இவ்வரிவடிவங்கள் யாவும், ஆப்பு எழுத்துக் களில் (Cuneifom) எழுதப்பட்டிருந்தன. கி.மு. 1500 ஆண்டுகளில் தான், முதன்முதலாக, புதிய வரிவடிவங்களை, ஃபோனீசியர்கள் மேலை நாடுகளில் அறிமுகம் செய்தனர். உகாரிய எழுத்துக்கள் யாவும் இவ்வரிவடிவங்களுக்கும் காலத்தால் முற்பட்டவை களாகும். இவை கி.மு. 2000க்கு முற்பட்டவை எனக் கருதப் படுகின்றது[120].

உகாரிய நகரில் வாழ்ந்திருந்தோர் அனைவரும் கனானியரே. கனானியரும் இசுரா - எல் இனத்தாரும் வெவ்வேறு கால அளவுகளில், பாலத்தீனப் பகுதிகளில் குடியேறியவர்களே. ஃபோனீசியர்களுக்கும் இசுரா - எல் இனத்தார்களுக்கும்

நெருங்கிய தொடர்பு இருந்தது. எனவே, கனானியர் - ஃபோனீசியர் - இசுரா - எல் ஆகிய மரபுகளில் வந்தவர்கள் தொன்மைக்காலத்தில் தோன்றிய ஓரின மக்களே என அறியலாம். கனானியர் நோவா மரபில் வந்தவர் எனச் செய்திகள் கூறுகின்றன. ஃபோனீசியரும் இசுரா - எல் மக்களும் சுமேரிய மரபில் வந்தவர்களாகக் கருதப் படுகின்றனர். இருப்பினும் இம் மூவருடைய மொழியும், சமயமும், ஒன்றோடொன்று தொடர்பு கொண்டது மட்டுமின்றி, பல்வேறு நிலைகளில் ஒப்புமை கொண்டவைகளே.

உகாரிய நகரில் கண்டெடுக்கப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தோர், சமயம் தொடர்பான பல தொன்மக் கதைகளைக் கண்டறிந்தனர். அவைகளில், அவைகளில், எல் என்ற கடவுளே முதன்மையானவளாக கருதப்பட்ட செய்திகளை அறிந்தனர். மேலும் பால் (Baal) என்னும் கடவுள் பற்றிய செய்திகளும் காணப்பட்டன.[121] (பால் என்பது வால் என்ற தமிழ்ச் சொல்லே. விளக்கம் வேறு தலைப்பில் காண்க).

பால் என்பவன் யம் (yam) என்ற கடல் தெய்வத்தையும், மோடு (Mot) என்ற சாவுக் கடவுளையும் வென்றான். யம் கடவுளை நிலத்தில் வரவிடாமல் கடலுக்கே துரத்தியடித்தான். இதனால் மகிழ்வுற்ற பால், இடையூறுகள் இல்லாத நிலையில், எல் எனும் முதன்மைக் கடவுளுக்கு உரிமையான மலை மீது மாளிகை யொன்றை அமைத்துக் கொண்டான்.

கடற்கடவுளான யம், கடலுக்குள் ஓடிப்போன நிலையில், மோடு என்ற சாவுக் கடவுள், பால் தெய்வத்தைக் கொன்று போட்டான். வேளாண்மைக் கடவுளான பால் செத்தொழிந்து போனதால், அத்தொழிலே நசிந்து போயிற்று. அனத் (Anat) என்ற பால் கடவுளின் தங்கை மோடுக் கடவுளை ஒறுத்து, அவன் வழியாகவே ஆண்டுக்கு இருமுறை பால் கடவுளை உயிர் பெறச் செய்தாள்.[122]

மேற்கண்ட தொன்மக்கதை கனானியர் மற்றும் ஃபோனீசியர்களின் சமயம் சார்ந்ததாகும். எல் என்னும் கடவுள் மலைமீது குடியிருப்பவன் என்று அறியக் கிடக்கின்றது. குமரிக் கண்டத்திலிருந்த மேரு மலையில் சிவன் வீற்றிருந்தான் என்ற செய்தி, குறிஞ்சி நிலத் தலைவனான சிவன் எப்போதும் மலையுடன் தொடர்புடையவன் என்பதை விளக்கும். மேல்

உரு என்னும் சொல்லே, மேரு எனத் திரிந்தது. உயர்ந்த உருவம் கொண்ட மலை என்பதே, மேரு என்ற சொல்லின் விளக்க மாகும். மலையில் வாழ்ந்திருந்தவன் எல் என்னும் சிவனே என்பதை, உகாரிய ஆவணங்கள் மெய்ப்பிக்கின்றன. சிவனுக்குச் சேயோன் (தொலைவிலுள்ள மலையில் வாழ்பவன்) என்ற பெயரும் உண்டு. சேயோன் மலையென்பது சிவன் வாழ்ந் திருந்த மலையே. இம் மலையை நினைவு கூறும் சீயோன் மலை (Mt. Zion) பாலத்தீனத்திலும் உள்ளது. மோசே (Moses) கண்ட கடவுள், சினை (Mt. Sinai) மலையில் வாழ்ந்திருந்ததாக விவிலியம் கூறுகிறது. சேயுஸ் (Zeys) என்ற கிரேக்கக் கடவுளும் ஒளிம்பஸ் (ஒளி - தமிழ்ச் சொல்லே) மலையில் வாழ்ந்திருந்தான். சேயனும் சேயுசும் ஒருவரே என்பது ஆய்வாளர்களின் முடிவுகளாகும்.

எல் கடவுள், கனானியக் கடவுடளர்களில் முதன்மை யானவன் ஆவான். இவனை விட ஆற்றல் குறைந்தவர்களே மற்றக் கடவுள் ஆவர். பால் என்னும் தெய்வம், யம் என்ற கடல் தெய்வத்தைக் கொன்றான். யம் என்ற கனானியச் சொல், கடலையும் ஏரியையும் குறித்தது. எகிப்திய மொழியிலும் யம் என்ற சொல்லே அறியப்படுகின்றது. யம் சப் (Yam sup) என்னும் சொல்லுக்குச் செங்கடல் என்பதே எகிப்தியச் சொல்லின் பொருளாகும். யம் என்ற கனானிய, எகிப்தியச் சொல், யா என்ற தமிழ்ச் வேர்ச் சொல்லினின்றும் தோன்றியது. (விளக்கம் வேறு தலைப்பில் காண்க). அயம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு நீர் நிலை என்பதே பொருளாகும். இச் சொல்லும் யா என்னும் தமிழ்ச் சொல்லின் நீட்சியே.

அயம் வெள் ஆம்பல் அம்பகை நெறிதழை – குறுந்தொகை,123

பால் கடவுள், மோடு (Mot) என்ற சாவுக்கடவுளையும் வென்றான். மோடு என்ற கனானியச் சொல், மூடு (to close, to shut) என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. கனானியர் இறந்தோரை, கல்லறைகளில் வைத்து பிரிதொரு கல்லால் மூடுவர். சாவுச் சடங்குகளில் இதுவே இறுதியானதாகும். இவ்வாறு மூடப் பட்ட இறந்தோரின் கடவுளே மோடு எனப்பட்டான். (கல்லறை என்பது, கற்களால் சூழப்பட்ட அறை என்றே பொருள்படும். மணலில் புதைக்கப்படும் குழிக்கும் கல்லறை என்றே வழங்கு கின்றனர். இதனை மண்ணறை என்றே வழங்குதல் வேண்டும்.) கனானிய நாட்டில் மலைக் குகைகள் பெருமளவிலிருந்தன. அக்குகைகளில் நீத்தோரை வைத்து மூடிவிடுவது அவரது

வழக்காகும். இயேசு கிறித்துவும் கூட, இவ்வாறான மலைக் கல்லறையொன்றில்தான் அடக்கம் செய்யப்பட்டார் என்று விவிலியம் கூறுகிறது.

பால், மோடு என்ற கடவுளால் கொல்லப்பட்டான் என்றும், பாலின் தங்கை அவனை மீண்டும் உயிர்ப்பித்தாள் என்றும், இவ்வாறு ஆண்டுக்கு இரு முறை பால் உயிர் பெற்ற கதை, கதிரவனின் வட தென் பயணங்களைக் குறிப்பதும், ஆண்டிற்கு இருமுறை மேற்கொள்ளப்படும் வேளாண்தொழிலை உருவகப் படுத்தியும் சொல்லப்பட்டதாகும். பால் வேளாண் கடவுளாகவே அறியப்படுகின்றான். கனானியரின் நாட்காட்டியும் கூட தமிழரின் நாட்காட்டியைப் போன்றே அமைந்திருந்தது எனலாம்.

மேலும் பல கனானியக் கதைகள் எல் கடவுளை முன்னிறுத்துகின்றன. கெரத் (Keret) என்ற மன்னன் பற்றிய கதையிலும், தன் - எல் (Dan-el) என்பானின் கதையிலும் எல் கடவுளின் பெருமைகள் பேசப்படுகின்றன.[124] உகாரிய ஆவணங்களின் படி, எல் என்பானே கனானியரின் முழு முதல் தெய்வமாகச் சொல்லப்படுகின்றான். பழைய ஏற்பாடு விவிலிய நூலில், எல் தெய்வமே, உண்மையான தெய்வம் என்ற பொருளில் அறியப் பட்டுள்ளதை மேலை நாட்டு ஆய்வாளர்கள் உணர்த்துகின்றனர்.[125] களிமண் தட்டில் காணப்பட்ட ஓவியமொன்றில் எல் தெய்வம், உயரமான இருக்கையில் அமர்ந்திருக்க, உகாரிய மன்னன் அக்கடவுளுக்கு படையல் பொருட்களை அளிப்பது போன்ற நிகழ்ச்சி காணப்படுகின்றது.[126] இந்த ஓவியத்தில் எல் கடவுள், தாடியுடன் கூடிய முதிர்ந்த தந்தையைப் போலவும், ஆற்றலையும் ஆளுமையையும் வெளிப்படுத்தும் முகக் குறிகளோடும் காணப்படுகிறான். இவ்வுருவத்தை நினைவில் கொண்டே, இடைக்காலத்து ஐரோப்பியக் கலைஞர்கள், “பிதாவாகிய சுர்வேசுரனை” (Father) ஓவியமாகத் தீட்டினர்.

எல் கடவுளின் மனைவியாக ஆசிரா (Ashera) என்பவள் சொல்லப்படுகின்றாள். இவ்விணையின் மகனே பால் தெய்வமாகும். இவன் ஆழியன் பால் என்றும் சொல்லப்படுகிறான். ஆழியன் (Aliyan) என்ற தமிழ்ச் சொல், கடலைச் சார்ந்தவன் என்ற பொருளைத் தருவதாகும். பால் கடவுள் - மழை, வெள்ளம், புயல், வேளாண்மை ஆகியவற்றின் தெய்வமாகக் கருதப்படுகிறான். கிரேக்கத் தொன்மக் கதையொன்றில், தெக்காழியன்

(Decauliyan) என்பவனை,[127] வெள்ளத்தினின்றும் சேயுஸ் கடவுள் காத்ததாகச் சொல்லப்படுகின்றது.

ஆழியன், தெக்காழியன் (தெற்கு ஆழி) ஆகிய சொற்கள், தென்கடலைச் சுட்டுகின்றன. இவை, குமரிக்கண்டம் ஆழியின் சீற்றத்தால் அழிந்து போனதைச் சொல்லாமல் சொல்கின்றன.

எல் - அசிரா இணை பற்றிய கனானியத் தொன்மக்கதை, முற்றிலும் தமிழ்ச் சூழலில் சொல்லப்படுவதாலும், அசிரா என்ற பெண்கடவுள், கடலைச் சார்ந்தவள் என அறியப்படுவ தாலும், பிராமண சமயம் கூறும் தெட்சன் (தெக்கன்) கதை, கனானியக் கதையுடன் தொடர்பு கொள்கிறது. தெட்சன் என்பான் ஒரு மீனவனாகவும்,[128] அவன் மகள் தெட்சாயினி என்பாளை சிவன் மணந்து கொண்டதாகவும் சொல்லப்படும் கதையில், சிவனுக்கு மனைவியிருந்தது அறியப்படுகின்றது. தொன்மைக் காலத் தமிழகத்தில் சிவன் அல்லது எல் கடவுளுக்கு மனைவி மக்கள் இருந்தார்கள் என்ற கதை வழங்கப்பட்டிருக்க வேண்டும். இது இயற்கையை ஒட்டியதே. ஆனால் அதுபற்றிய செய்திகள் எவையும் கிடைக்கவில்லையென்பதால், தமிழர் குடியேற்ற நாடுகளில் சொல்லப்பட்ட கதைகள், குமரிக் கண்டத்திலும் வழங்கப்பட்டன எனக் கருதலாம். யூதர்கள் வணங்கிய எல் கடவுளுக்கு (பிற்காலத்திய எகோவா) இணையை அவர்கள் கற்பித்துக் கொள்ள வில்லை. யூத சமயம் பெண் கடவுளைப் பற்றி எதுவும் கூறவில்லை. யூதர் வழிவந்த கிறித்துவ சமயமும் பெண் தெய்வம் பற்றி எதனையும் வெளிப்படுத்த வில்லை. கிறித்துவ சமயம் தோன்றி நான்கு நூற்றாண்டுகள் வரையில், மறியன்னை (Mary) பற்றிய சிறப்பான செய்தி எதனை யும் கிறித்துவம் கொண்டிருக்கவில்லை யென்றும், பல்வேறு நாடுகளில் பரவிச் சென்ற கிறித்துவ சமயத்தில் இணைந்தவர்கள், தங்களது சமயங்களில் சொல்லப்பட்ட பெண் தெய்வங் களைப் போல், கிறித்துவ சமயத்தில் ஏனில்லை என எண்ணத் தொடங்கியதின் விளைவாகவே, மறியன்னை வணக்கம் கிறித்துவ சமயத்தில் புகுத்தப்பட்டதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின் றனர்.[129] மறியன்னை பெண் தெய்வமல்லள் என்று கிறித்துவம் கூறினாலும், நடை முறையில் மக்கள் அவ்வாறு கருதவில்லை என்பதையும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின் றனர். எனவே, ஆண் - பெண் - மக்கள் என்ற அளவிலான இயற்கையின் பாற் பட்ட வணக்க முறை தமிழகத்திலும் தொன்மைக் காலத்தில் நடைமுறையில் இருந்தது என்பதை அறியலாம்.

அபிறகாம் காலத்து எல் கடவுள்

விவிலிய ஆய்வாளர்கள், விவிலிய நிகழ்வுகளை, அபிறகாம் காலத்துக்கு முன் - பின் என இருபிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அபிறகாம் காலத்துக்கு முன் நிகழ்வுற்றவைகளே, ஆதி யாகமத்தில் அறியப்படும் பதினோரு அதிகாரங்கள் ஆகும். இவை கி.மு. 2000 ஆண்டுகட்கு முற்பட்டவை என்று கூறப் படுகின்றன. முற்பட்ட நிகழ்வுகள், எத்தனை ஆண்டுகட்கு முற்பட்டவை எனக் கூற இயலவில்லை. ஆதலால், அந் நிகழ்வு களைத் தொன்மக்கதைகளாக (Mystical stories) ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அத்தொன் மக்கதைகளிலும் எல் கடவுள் பற்றிய செய்திகள் அறியக் கிடந்தன என்பதை, இதற்கு முன் விளக்கப்பட்ட செய்திகளால் உணரலாம் அபிறகாம் காலத் திலும், அதற்குப் பிறகும் அறியப்பட்ட எல் கடவுள் பற்றிய செய்திகளை இப்போது காணலாம்.

எல் என்பது தமிழ்ச் சொல்லேயென்றும், குமரிக்கண்டத் திலேயே எல்வணக்கமுறை இருந்தது என்றும், குமரிக்கண்டம் அழிந்துபட்ட போது, வெளியேறிய தமிழர்கள் அனைவரும் தாங்கள் குடிபெயர்ந்த நாடுகளிலும் எல் வணக்க முறையைப் பின்பற்றினர் என்றும், எல் கடவுளின் தாக்கம் மேற்கத்திய நாடுகளில் பரவலாக அறியப்பட்டது என்றும், மெசபத்தோமிய கனானிய, ஃபோனீசிய, யூத சமயங்களை மேற்கோள் காட்டி விளக்க இயலும். குடியேற்றத் தமிழர்கள் பற்றிய செய்திகள், ஏற்கனவே ஆசிரியரின் இரண்டு நூல்களில் விளக்கப்பட் டுள்ளன. எனவே, யூதர் எனப்படும் மேற்கத்திய இனத்தார், தமிழர் வழிவந்த மரபாரே என்பதை கருத்தில் கொண்டு மேற் கொண்டு செய்திகளை அணுகலாம்.

அபிறகாம் என்பவனே யூத இனத்தின் (எபிரேய) முது பெருந்தந்தையாகப் போற்றப்படுகிறான். அபிறகாமுக்கு முன்பு யூத இனம் இருந்திருக்கவில்லையா என்ற கேள்வி எழலாம். விவிலியத்தில் அபிறகாமின் வருகைக்கு முன்னர், யூதர் - எபிரேயர் (ஹீப்ரு - Hebrew) என்ற சொற்கள் பயன்படுத்தப் படவில்லை.[130] அபிறகாமை ஓர் எபிரேயன் என்று விவிலியம் கூறுகிறது. அபிறகாம் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட செய்தி விவிலியத்தில் விளக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வுக்கு முன்பு அபிறகாமும் அவன் முன்னோரும் அறமியர்கள் (Aramean)

என்றும், பின்பு எபிரேயர் என்றும் அழைக்கப்படுவதாகக் கொள்ளலாம். பெயர்தான் மாறியுள்ளதேயன்றி அவர்களின் மரபு ஒரு மரபே என அறியலாம்.[131]

அபிறகாமின் தந்தை தெரா (Terra)[132] ஊர் (ur) நகரில் குடியிருந்ததாக விவிலியம் கூறுகிறது.[133] அதுவே அவனது முன்னோர் வாழ்ந்த நகரமும் ஆகும். ஊர் நகரம் கி.மு. 4000 ஆண்டுகளில் சுமேரியர்களால் உருவாக்கப்பட்டது என வரலாறு கூறுகிறது[134] சுமேரியரே உலகின் முதல் நாகரிக மாந்தர் எனவும், அவர்கள் உருவாக்கிய நகரங்களே முதன் முதலில் நகரிய நாகரிகத்தைக் கைக் கொண்டிருந்தவை யென வும் ஆய்வாளர் கருதினர். சுமேரியர்கள் யார் என்பதை இன்னும் ஆய்வாளர்கள் விடுவிக்க வில்லை. சுமேரியர்களைத் தமிழ்க் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்ய முன்வராத எந்த ஆய்வாள ராலும், சுமேரியர்கள் யார் என்ற கேள்விக்கு எக்காலத்திலும் அவர்களால் விடை கூற இயலாது. சுமேரியர் யார், அவரது முன்னோர் யார்? அவர்கள் பேசியது என்ன மொழி? அம்மொழி யின் மூலம் எங்குள்ளது? என்பதற்கான விடைகளை அளிக்க இயலாத மேலை நாட்டு ஆய்வாளர்கள், சுமேரியர் பற்றிய பிற செய்திகளைக் கூறியுள்ளனர். சுமேரியர்கள் பாரசீக வளை குடா வழியே படையெடுத்து வந்தவர்கள் என்றும், போரிடு வதில் வல்லவர்கள் என்றும், வலிமையான கடற்படையைக் கொண்டிருந்தனர் என்றும், நகரிய நாகரிகத்தை (Urban civilization)த் தோற்றுவித்தவர்கள் என்றும் கூறுகின்றனர்.[135] சுருக்க மாகக் கூறுவதென்றால், சுமேரியர் தமிழரே என்பதும், அவர்கள் சிந்துவெளியினின்றோ, தமிழகத்தினின்றோ புறப்பட்டுச் சென்று பாபிலோனைக் கைப்பற்றியவர்கள் என்பதும், மேலை நாட்டு ஆய்வாளர்கள் தரும் குறிப்புகளால் நிறுவ இயலும். அவர்கள் உருவாக்கிய நாகரிகம் உலகிற்குப் புதியவை அல்ல என்பதும், அது ஏற்கனவே அறியப்பட்டிருந்த தமிழர் நாக ரிகமே என்பதும், அண்மையில் கிடைக்கப் பெற்ற சான்று களால் நிறுவப்பட்டுள்ளது. சுமேரியர் வழிவந்தவரே யூதர்கள் எனப்படும் எபிரேயர்கள் என்போராவர். எபிரேய மொழிக்கும், சுமேரிய மொழிக்கும் மூத்த மொழியான தமிழ் மொழியின் முதல் மூலமும் வேரும், இவ்விரு மொழிகளிலும் பரவலாகக் காணப்படுவதையும் மெய்ப்பிக்க இயலும். இக்கருத்தை முதன் முதலில், 1930 களில், திருத்தந்தை ஈராஸ் அடிகளார் எடுத்

துரைத்தார். (மேலும் விளக்கங்களுக்கு ஆசிரியரின் எபிரேயத்தின் தாய்மொழி தமிழே என்ற நூலைக் காண்க).

அபிறகாம் என்ற சொல், தனித்தமிழ்ச் சொல்லாகும். அபிரகாம் என்றவாறு தமிழ்ப் பதிப்பு விவிலிய நூல்கள், ரகரத்தை மாற்றி எழுதிவருகின்றன. அது தவறாகும். தமிழ்க் கண்ணோட்டத்தில் ற கரமே சரியான பொருளைத் தரும். அப்பா + அறம் + அகம் என்ற மூன்று தமிழ்ச் சொற்களின் கூட்டுச் சொல்லே அபிறகாம் என்பதாகும். இக்கருத்தையே விவிலியமும், Father of Nations from the Land of Aram என்று விளக்குகிறது.[136] அபிறகாமின் தந்தை தெரா என்று சொல்லப் படுகிற வேளையில், தெரா என்பது, தரை என்ற தமிழ்ச் சொல்லே என அறியலாம். மிகப்பரந்த நிலத்துக்கு (தரைக்கு) உரிமையாளனாக விருந்தது பற்றியே அவன் தரை என்ற சொல்லால் அழைக்கப்பட்டான். தரை என்ற தமிழ்ச் சொல் உலக மொழிகளில் திரிந்துள்ளதைக் காண்க.

தரை (தமிழ்) - த்ர (சமற்கிருதம்) - தெரா (எபிரேயம்) - டெர்ரா (கிரேக்கம்) - டெர்ரே (இலத்தீன்) - டெர்ரி (ஆங்கிலம்).

தரை என்ற தமிழ்ச் சொல், Terranean - Mediterranean எனத் திரிந்துள்ளதை நோக்குக. த்ரவிட என்ற வடசொல், தரை என்ற தமிழ் மூலத்தைக் கொண்டதே.



மேற்கண்ட அட்டவணையில், தெரா என்பவனின் பெயரனாக பெத்து - எல் என்பவன் சொல்லப்படுகிறான். இவன்

அபிறகாமின் அண்ணன் மகன் ஆவான். எல் என்ற கடவுளின் பெயர், அபிறகாமின் குடும்பத்திலேயே காணப்படுவதால், அபிறகாம் வழிபட்ட கடவுளும் எல் என்றே அறியப்படும். அபிறகாமை கனான் நாட்டுக்கு அழைத்தவரும் எல் கடவுளே என அறியலாம். அபிறகாமுக்குப் பிறந்த முதல் மகனுக்கு, இசும - எல் என்றே அபிறகாம் பெயரிட்டுள்ளதால், அபிற காமின் கடவுள், எல் கடவுளே என உறுதியாகக் கூறலாம்.

பெத்து எல் (Bethu - el)

பெத்து எல் என்ற சொல்லில் உள்ள ஈற்றுச் சொல்லான எல், கடவுளைக் குறித்தது.[138] அபிறகாம் கனானிய நாட்டில், பெத் - எல் என்ற ஊரில்[139] மேடை அமைத்து கடவுளுக்குக் காவு கொடுத்தான் என்ற செய்தி விவிலியத்தில் காணப்படுகிறது. பெத்து - எல், பெத் - எல் என்ற சொற்களுக்கான வேறுபாடு, குறிப்பாக பெத்து - பெத் என்ற சொற்கள் ஒரு பொருளைக் குறித்தனவா அல்லது வெவ்வேறு பொருளைக் குறித்தனவா என அறிய முற்படும் போது, பெத் என்ற சொல், வீட்டை (House)க் குறித்தே சொல்லப்பட்டுள்ளதைக் காணலாம். பெத்து என்ற சொல்லுக்குப் பொருள் தெரியவில்லை என ஆய்வாளர் கருதுகின்றனர். பெத் + உ என்றவாறு, வீட்டுக்கு உரியவன் என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கலாம்.

பெத் என்ற எபிரேயச் சொல், pet, peta என்ற மூலச் சொல் லினின்றும் பிறந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[140] இதற்கு இடம், பரந்த இடம் என்றவாறு பொருள் அறியப்படுகின்றது.

பெத்-எல் = கடவுளின் வீடு. குறுகிய இடத்தைச் சுட்டும் வகையில் உள்ளது.

பெத்-லெகம் = இச்சொல்லுக்கு வீடு என்ற பொருள் மறைந்து ஊர் என்ற பொருளே சொல்லப்பட்டுள்ளது.

எனவே, பெத் (Beth) என்ற எபிரேயச் சொல், வீடு ஊர் என்ற இரு பொருளையும் கொடுத்தது எனலாம்.

பெட் - பெடா என்ற மூலச் சொல்லினின்றே, பெத் என்ற சொல் பிறந்தது. இது, தமிழில் படு - படி - பட்டி என்றவாறு அறியப்படும்.

விள் என்ற தமிழ் மூலச் சொல், பிரித்தல் துண்டித்தல் என்றவாறு பொருள்படும்.

விள் - விடு : தனிமைப் படுத்துதல்.

விள் - விடு - விடி : நீங்குதல். இரவுப்பொழுது நீங்குதலே விடிதல் என்றானது.

விள் - விடு - விடை : விள்ளிக் கொடுக்கும் பதில்.

விடுதல் என்பது தனிமைப்படுத்தல் என்ற பொருளில், விடுதலை - விடுதி - விடுப்பு போன்ற சொற்கள் நீண்டன.

விள் - விண் : தரையினின்றும் பிரிந்து நிற்கும் வானம்.

விள் - விண் - விண்டு : துண்டித்தல், அறுத்தல்.

விள் - விடு - வீடு : தனிமையாயுள்ள குடியிருப்பு.

தமிழின் வகரம் பிறமொழிகளில் பகரமாகத் திரிதலின் படி, வீடு என்ற தமிழ்ச் சொல், விட - பெட - பெடா - பெட் என எபிரேய மொழியில் திரிந்ததாகக் கொள்ளலாம். சில சொற்கள் தமிழில் உள்ளவாறே, பகரத்தில் உள்ளவை பகரமாகவே வேற்று மொழிகளில் காணப்படுகின்றன.

படு - படி என்ற மூலச் சொற்கள் நீண்டு, பட்டி - பட்டிணம் என்றாயின.

படிதல் : பொருந்துதல். படி - பட்டி : மக்கள் கூடி வாழும் குடியிருப்பு.

பட்டி எனும் சொல்லே, மேலும் பரந்த ஊரைக் குறித்தது பட்டிணம் என்றானது.

விள் எனும் வேர்ச்சொல், நூற்றுக்கணக்கான சொற்களைத் தமிழில் அளித்துள்ளதைக் காணலாம். விள் எனும் சொல்லே, பள் எனும் சொல்லுக்கும் வேராவதால்,

விள் - விடு - வீடு என்றவாறும்,

விள் - பள் - படு - படி - பட்டி என்றவாறும்.

எபிரேய மொழியில் Pet, Peta, Beth என்றவாறு திரிந்துள்ளன என்பதை அறியலாம். தெலுங்கு மொழியில் பெத்து என்னும் சொல்லுக்கு பெரிய (Big) என்ற தமிழ்ச் சொல்லே, பெரிது - பெரித்து - பெத்து எனத் திரிந்தது. தெலுங்கில் சொல்லப்படும் பெத்து என்ற சொல், எபிரேயச் சொல்லான பெத் என்பதோடு ஓசைத் தொடர்பு உள்ளதேயின்றிப் பொருள் தொடர்பு இல்லை எனலாம்.

பெத் - எல் (கடவுளின் வீடு) என்ற ஒரு சொல் மட்டுமே இல்லத்தைக் குறித்துள்ளதாக அறியப்படுகின்றது. பல சொற்கள் ஊரைக் குறித்தே சொல்லப்பட்டுள்ளன.

பெத் - அனி,[141] Beth-any : எருசலேம் நகருக்கு அருளிகலுள்ள ஊர்.

பெத் - எல்,[142] Beth - el : ஊரைக் குறித்தது.

பெத் - எசுதா,[143] Beth-esda : ஊரைக் குறித்தது.

பெத் - ஓரன்,[144] Beth - Horam : ஊரைக் குறித்தது.

பெத் - லெகம்,[145] Beth - lehem : ஊரைக் குறித்தது.

பெத் - பெக்,[146] Beth - phage : பாக் என்பது அத்திப்பழம். அத்திப்பழவீடு என்றும், ஊர் என்று சொல்லப்படும்.

பெத் - சயிதா,[147] Beth - Saida : ஊரைக் குறித்தது.

பெத் - சான்,[148] Beth - Shan : ஊரைக் குறித்தது.

பெத் - செம்,[149] Beth - Shem : ஊரைக் குறித்தது.

பெத் - சூர்,[150] Beth - Zur : ஊரைக் குறித்தது.

பெத் என்ற சொல், வீட்டைக் குறித்தது போலவே, ஊரையும் குறித்தது எனலாம்.

ஊரென்பது ஓரினத்தார் வாழும் ஒரே வீடாகக் கருதி, இவ்வாறு சொல்லப்பட்டிருக்க வேண்டும். தமிழில் அகம் என்ற சொல், வீட்டையும் நாட்டையும் குறித்ததை நோக்குக.

பெத் என்ற சொல்லுக்குப் பிறகு வரும் பின்னொட்டுச் சொல்லே, அவ்வூரின் பொருளை உணர்தியது எனலாம். பெத் - எல் என்பது கடவுளின் வீடு என்று சொல்லப்பட்டது. கோயில் இருந்த ஊரும் பெத் - எல் என்றே அழைக்கப்பட்டது.

பெத் - லெகம் என்பது, உணவின் வீடு எனப்பட்டது. லெகம் என்பதற்கு உணவு (Bread) என்றே பொருள் கூறப்படுகிறது. அலகு என்ற தமிழ்ச் செல்லே, லெகு - லெகம் என்று எபிரேய மொழியில் திரிந்துள்ளது.

அலகு : நெல் என்ற தவசம். உணவும் உணவுச் சார்ந்த தவசங்களையும் குறிக்கும். அலகுடை நீழ லவர் - திருக்குறள்.[151]

பெத்லெகம் என்ற ஊர், வேளாண் தொழிலில் ஈடுபட்ட மக்கள் வாழ்ந்திருந்த ஊராக இருந்தது. மற்ற ஊர்களைக் காட்டிலும், பயிர்த் தொழில் சிறப்பாக நடைபெற்றதைக் கருத்தில் கொண்டு, பெத்லெகம் உணவின் ஊர் எனச் சொல்லப் பட்டது.

தமிழில், ஊரின் பொருளையுணர்த்தும் சொல் முதலிலும், ஊர் - பட்டி - பாக்கம் - குறிச்சி - பட்டிணம் போன்ற சொற்கள் ஈற்றிலும் சொல்லப்படுவதற்கு மாறாக, எபிரேய மொழியில் பின்னது முன்னதாக மாறியுள்ளது.

எ.கா. பெத்-பாக் : பாக் (phage) என்பது பாக்கையை பாத்த அத்திப்பழத்தைக் குறித்த சொல்லாகும்.

மேட்டு - ஊர் : மேடு முதலில் சொல்லப்பட்டு, மேட்டூர் எனப்பட்டது.

இசும – எல் (Ishma - el)

அபிறகாமின் இல்லத்தார், எல் கடவுளை நினைவு கூர்ந்தே, பெத்து எல் என்ற பெயரை, நகோரின் மகனுக்குச் சூட்டினர். கூடிய அகவையில் இருந்த அபிறகாம், தனக்குப் பிறந்த முதல் மகனுக்கு இசும - எல் எனப் பெயரிட்டான். தன்னை வடமெசபத் தோமியாவிலிருந்து கனான் நாட்டுக்கு அழைத்த எல் கடவுளின் பெயரை, தனது மகனுக்கு வைத்து, எல் கடவுள் மிது தனக்கிருந்த பற்றுதலை அபிறகாம் வெளிப்படுத்தினான். ஆகார் என்ற பணிப்பெண்ணுக்குப் பிறந்தவனே இசும - எல் எனப்படுபவனாவான். ஆகார் என்ற சொல்லிலுள்ள, கார் என்ற தமிழ்ச் சொல், அப்பெண் கரிய நிறம் கொண்ட எகிப்தியப் பெண் என்பதை விளக்கும்.

இசும - எல் (Yisma - el) என்ற பெயருக்கு, "எல் கடவுள் என்சொல்லை இசைவாகக் கேட்கட்டும்", என்பதே பொரு ளாகும்[152] (Let El hear). இசைவு என்ற தமிழ்ச் சொல், Yis என்ற முதற் சொல்லாக உள்ளதை நோக்குக. இசை என்ற தமிழ்ச் சொல்லுக்கு, ஒலி, புகழ், சொல், மேன்மை என்றவாறு பொருள் விரியும்.

இசைத்தல் என்பது, இணைதல், பொருந்துதல், உடன் படுதல், ஒத்துப்போதல் எனவும் விரியும் இசையென்பதே, இச்சா என வட மொழியில் திரிந்து விருப்பத்தையுணர்த்தியது.

இசை : வரையறுக்கப்பட்ட ஒலிகளைக் கொண்ட பாண் துறை. இசை உயர்வானது. மக்களை ஈர்க்கும் வலிமை கொண்டது. அது பற்றியே, மீஇசை - மீயிசை என்றவாறு உரைத்தனர்.

மீயிசை : மீ என்பது உயர்வையும் பெருமையையும் உணர்த்தும்.

மீயிசை என்ற தமிழ்ச் சொல்லே Muse என்று கிரேக்க மொழியில் சொல்லப்பட்டு, Music என்று ஆங்கிலத்தில் திரிந்தது.

மீ + இசு = மீசு, மிகுதி.

இசையென்பதற்கு விதி, கட்டுப்பாடு, ஒழுக்கம், பண்பாடு எனவும் பொருள் கொள்ளலாம்.

இ + செய் = இசெய் - இசை. இவ்வாறு தான் செய்யப்பட வேண்டும் என்ற இலக்கணத்தை விளக்கும் சொல்.

மேற்கண்டவாறு சிறப்பு பெற்ற இசையென்ற தமிழ்ச் சொல்லே இஸ் (Yis) என்றவாறு எபிரேய மொழியில் திரிந்து, இசும - எல் என்ற சொல்லாகவும் பிறந்தது.

இசும - எல், ஈசாக்கு பிறந்த பிறகு, தனது தாயுடன் வெளியேற்றப்பட்டான்.[153]

இசும - எல், மிகச் சிறந்த வில்லாளியாக (Archer) கருதப் பட்டான். தந்தையாகிய அபிறகாமை விட்டுப் பிரிந்து சென்ற இசும - எல், தந்தையை மீண்டும் சந்திக்கவேயில்லை என்று சிலரும், அபிறகாம் இறந்த போது அவ்விறுதிச் சடங்கில் கலந்து கொண்டான்[154] எனச் சிலரும் கருதுகின்றனர். இன்றைய அரபு நாட்டின் மக்கள், இசும - எல் வந்தவர்களே என்று கருதப்படுகின்றனர்[155] (ஆதி. 25:12-18) யாக்கோபுவின் தலைமகனான ஈசா (Esau) என்பவன், இசும - எல்லின் மரபிலேயே பெண் எடுத்தான் என்ற விவிலியம் கூறுகிறது[156] (ஆதி. 28:9;36:3).

அபிறகாமை கனான் நாட்டுக்கு அழைத்த எல் கடவுள், அவனது மரபை மணலைப் போலவும், விண்மீன்களைப் போலவும் பல்கிப் பெருகச் செய்வதாக வாக்களித்தார் என்று விவிலியம் கூறுகிறது. ஆனால், அபிறகாமுக்குப் பிறகு வந்தவர்களில், ஈசாக்கின் மகன் யாக்கோபின் மரபினர் மட்டுமே,

கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்றும், அவர்களே இசுரா - எல் இனத்தார் என்றும் சொல்லப்படுகின்றது அபிறகாமின் முதல் மகனான இசும - எல், ஈசாக்கின் முதல் மகனான ஈசா ஆகியோர் பற்றிய செய்திகளை விவிலியம் விளக்க வில்லை.

அபிறகாம்[157]

இசும - எல்
அரேபியப் பழங்குடியினர்
(விவிலியத்தில் கூறப்படவில்லை)

ஈசாக்கு

ஈசா
பாலத்தீனத்தின் தென்
கிழக்குப் பகுதியில்
வாழ்ந்திருந்தவர்
(விவிலியத்தில்
விளக்கப்படவில்லை)

யாக்கோபு
இசுரா - எல்
இனத்தார்
கனான்
நாட்டில்
குடியேறியவர்கள்

(இவர்களின் மரபுகளைப் பற்றி மட்டுமே
விவிலியம் பேசுகிறது)

அபிறகாம், தேர்ந்தெடுக்கப்பட்ட முதுபெரும் தந்தையென சொல்லப்பட்ட நிலையில், மேற்கண்ட பகுதிகளில் வாழ்ந்திருந்த இசும - எல், ஈசா ஆகியோரின் மரபுகளும் கடவுளால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே என்பது தெளிவு. யாக்கோபு வழிவந்தவர்களே யூதர் எனக் கருதப்படுகின்றனர். இசும - எல், ஈசாவின் மரபினர், யூத இனத்தினும் பெரிதும் பல்கிப் பெருகியவர்கள். எனவே இன்று அறியப்படும் அரேபிய நாட்டினரும். இசுரா - எல், பாலத்தீனம், சிரியா, இலெபனான், எகிப்து, வளைகுடா நாடுகளில் வாழ்பவரும் அபிறகாமின் வழித்தோன்றல்களே என அறியலாம். அக்கண்ணோட்டத்தில் நோக்குகையில், கடவுள் அபிறகாமுக்குக் கொடுத்த வாக்குச் சரியாகவே நிறைவேறியுள்ளதாக அறியலாம்.[158] இன்று அபிறகாம் வழிவந்த யூத கிறித்துவ சமயங்களும், அதே வழியில் பிறந்த இசுலாம் சமயமும், உலக மக்களில் மூன்றில் இரு பங்கினரைக் கவர்ந்துள்ள நிலையில், கடவுளின் வாக்குறுதி நிறை

வேறியுள்ளதாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் யூதர்கள் மட்டுமன்று, கிறித்துவர்களும் இசுலாமியருங் கூட, அபிறாகமின் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களே என்ற கருத்தும் சொல்லப் படுகின்றது. இவர்களோடு தமிழரையும் இணைத்துக் கொண் டால், எல் கடவுளின் மக்களே இன்று உலகில் பெரும் பான்மையினராக உள்ளனர் எனத் தெளியலாம். ஒரே இனவழி மரபில் தோன்றிய யூதரும் இசுலாமியரும், தங்களது உறவு களை மறந்து இன்று சண்டையிட்டுக் கொள்வது வருந்தற் குரிய செய்தியாகும்.

ooo

இசுரா – எல் (Isra - el)

இசுரா - எல் (Yisra - el) என்ற எபிரேயச் சொல்லுக்குப் பொருள் யாதெனத் தெரியவில்லையென, மேற்கத்திய மொழியியலார் கூறுகின்றனர். என்றாலும், பொதுவாகச் சொல்லப் படும், "இவன் எல் கடவுளுடன் மல்லுக் கட்டினான்", (he contents against El) என்ற விளக்கம் தரப்படுகின்றது.[159] தற்கால மொழியியலார், "எல் ஆளட்டும்" (Let El rule) என்றும் பொருள் கூறுகின்றனர்.[160] விவிலியத்தில், இசுரா - எல்லின் மக்கள் என்றும், இசுரா - எல்லின் வீடு என்றும், இசுரா - எல்லின் அரசு என்றும் அடிக்கடி சொல்லப்படுகின்றன. இசுரா - எல் என்ற சொல், எவ்வாறு யாக்கோபுவின் மரபோடு ஒட்டிக் கொண்டது என்பதை விளக்குவது கடினமான பணியென விவிலிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[161] கி.மு. 1230 ஆண்டுகளில் பொறிக்கப்பட்டதாகக் கருதப்படும் கற்பாளங்கள் (Stele of Merneptah), முதன் முதலில் இசுரா - எல் என்ற பெயரைப் பற்றி விளக்குகின்றன. இவை எகிப்திய மன்னன் கனான் நாட்டின் மீது படையெடுத்துச் சென்றதை விளக்குவனவாகும். கி.மு. 858-824 ஆண்டுகளில் ஆண்ட அசீரிய மன்னன் சால்ம நேசர் (Shalmanesar) என்பானின் காலத்தின் குறிப்புகளிலும் காணப் படுகின்றன.[162]

பொதுவாக, யாக்கோபுவின் பன்னிரு மகன்கள் வழிவந்த மரபினரே இசுரா எல் என்று அழைக்கப்பட்டனர். யாக்கோபு வுக்கு இசுரா - எல் என்ற பெயரும் உண்டு. யாக்கோபு தனது மாமன் இலவன் (Leban) வீட்டுச் சென்ற போது, வழியில் ஓரிடத்தில் படுத்துறங்கியதாகவும், அவ்விரவில் முகம் தெரியாத தேவ மாந்தன் ஒருவனுடன் போரிட்டதாகவும் விவிலியம் கூறுகிறது.[162] எல்லின் இசைவுக்கு மாறுபட்டு அவருடன் மல்லுக் கட்டியதால், இசைவுறா யாக்கோபு என அழைக்கப்பட் டிருக்க வேண்டும். எல்லுடன் போரிட்டதாலோ, எல்லின் தூதனுடன் போரிட்டதாலோ, இசைவுறா - எல் எனச் சொல்லப்

பட்டிருக்க வேண்டும். இசை என்ற தமிழ்ச் சொல், இசுரா - எல் எனும் சொல்லோடு தொடர்புடையது என்பது தெளிவு. இசுரா - எல் என்ற எபிரேயச் சொல்லுக்கான விளக்கத்தை இதுவரையில் விவிலிய ஆய்வாளர் தெளிவு படுத்த வில்லை என்பதே உண்மை யாகும். இசும - எல் என்ற சொல்லிலுள்ள yis எனும் எபிரேயச் சொல்லே, இங்கும் சொல்லப்பட்டுள்ளதால், முதலில் சொல்லப்பட்ட தமிழ்ப் பொருளையே இதற்கும் கூறலாம்.

கனான் நாடு என்றழைக்கப்பட்ட பகுதியை, யாக்கோபுவின் மரபுவழி மக்கள், ஓசுவா என்பான் தலைமையில் போரிட்டு வென்றபின், கனான் நாட்டைத் தங்களது முன்னோனாகிய யாக்கோபு என்பானின் பெயராகிய இசுரா - எல் என்னும் பெயரால் அழைத்துக் கொண்டனர். சாலமன் மன்னன் காலத் துக்குப் பிறகு பிளவுபட்ட அந்நாடு, வடபகுதி இசுரா - எல் என்றும் தென்பகுதி யூதேயா என்றும் அழைக்கப் பட்டது.[163] கி.பி. முதல் நூற்றாண்டில் யூத இன மக்கள் தங்கள் தாய் நாட்டை விடுத்து உலகெங்கும் ஓடிப்போய்விட்டதால், இசுரா - எல் என்ற நாடும் காணாமல் போயிற்று. வரலாற்றில் கி.மு. 1200 முதல் கி.மு. 700 வரையில் மட்டுமே அறியப்பட்ட அந்நாடும், யூதர்களுக்கு (யாக்கோபுவின் மரபினருக்கு) உரிமை யானதன்று. பாபிலோன் பகுதியில் பிறந்து, வடமெசபத்தோமி யாவில் வாழ்ந்து, புதிதாகக் குடியேறிய கனான் நாட்டை, அபிறகாமுக்கும் அவன் மரபினருக்கும் எவ்வாறு கடவுள் வழங்கினார் என்பதும் விவிலியத்தில் விளக்கப்படவில்லை. உண்மையில் 500 ஆண்டுகளே இப்பகுதி இசுரா - எல் மக்களுடையதாயிருந்தது.

கி.பி. 1948ஆம் ஆண்டில், இரண்டாம் ஞாலப் போருக்குப் பிறகு, ஐ.நா. அவை, நாடிழந்து அலைந்து கொண்டிருந்த யூத இன மக்களுக்கு, 2500 ஆண்டுகட்கு முன்பு அவர்கள் இழந்த நாட்டைத் திருப்பிக் கொடுத்தது.[164] புதிய நாட்டில் குடியேறிய யூதர்கள், தங்களது பழைய பெயரான இசுரா - எல் (Isra - el) என்ற பெயரையே வைத்துக் கொண்டனர். தங்களது பழைய கொடியான நீல வண்ணத்திலுள்ள விண்மீன் கொடியினையே (தாவீது மன்னன் கைக் கொண்டிருந்தது) தங்களது புதிய நாட்டின் அரசுச் சின்னமாகவும் வைத்துக் கொண்டனர். கி.மு. 300 ஆண்டுகளிலேயே இறந்துபோன எபிரேய மொழியை, மீண்டும் உயிர்ப்பித்து, கடந்த 50 ஆண்டுகளில், மீண்டும் பேச்சு -

எழுத்து வழக்கிற்குக் கொண்டு வந்துவிட்டனர். 99 விழுக்காட்டு யூத மக்கள் எபிரேய மொழியை அறியாதிருந்த நிலையில், 50 ஆண்டுகளில் 100 விழுக்காட்டு மக்களும் எபிரேய மொழியைப் பயின்று பேசவும் எழுதவும் தொடங்கிவிட்டனர்.[165] 2500 ஆண்டுகட்கு முன்பு இறந்துபட்ட எபிரேய மொழியை, மீண்டும் 50 ஆண்டுகளில் உயிர்ப்பிக்க இயலும் என்றால், ஆரிய - ஆங்கிலப் பிடியிலுள்ள தமிழை விடுவிக்க 10 ஆண்டுகள் போதுமன்றோ! 20000 ஆண்டுகளாக சீரிளமைத் திறனோடு வாழ்ந்து கொண்டிருக்கும் செந்தமிழ் மொழியை, பிறமொழிப் பிடிப்புகளினின்று விடுவிக்க, எபிரேயத்தை உயிர்ப்பித்த இசுரா எல் ஆட்சியாளர்கள் போன்றே, தமிழகத்திலும் முன் வருவார்களா?

ooo

இலவனின் எல் தெய்வம்

இலவன் (Laban) என்பான், அபிறகாமின் தம்பி நகோர் என்பானின் பெயரன் ஆவான்.[166] நகரோரின் மகன் பெத்து - எல் என்று ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. பெத்து -எல்லின் மகனே, இலவன் எனப்படுபவன் ஆவான். லெபன் என்ற எபிரேயச் சொல்லுக்கு வெண்மை என்று பொருள் கூறப் பட்டுள்ளது. எல் என்ற சொல்லே, இல் - இல - இலவு எனத் தமிழில் நீண்டது.

கதிரவன் செங்கதிர்களைப் பாய்ச்சுவது போன்று, திங்கள் வெண்கதிர்களைப் பாய்ச்சுவதாக கூறப்படும். எபிரேய மொழியில் இலவன் என்ற சொல்லுக்கு நிலவு என்றும் சிலர் பொருள் கூறுகின்றனர்.

எல் = ஒளியுடன் கூடிய கதிரவன். அல் = ஒளியற்ற இருட்டு.

நிலவு, இருபத்தேழு விண்மீன்களின் இல்லத்திலும், ஒவ்வொரு நாளும் நின்று செல்லும். நிலவு நிற்கும் மனையே நாள்மீன் என்பர். நிலவு தங்கும் மனையை, இல் எனவும் கூறுவர் நிலவு, நிலையாக ஓரிடத்திலும் நில்லாது, சுற்றிச் சுற்றிவருவ தால், அது நிலா எனப்பட்டது நில் - நில்லா - நிலா.

ஒவ்வொரு இல்லமாக (இராசி) நின்று செல்வதால்,

இல் - இல - இலவு - இலவன் என்றும் சொல்லப்பட்டது.

இலவு என்ற சொல்லுக்கும் நிலவு என்ற சொல்லுக்கு முள்ள ஒலித் தொடர்பை நோக்குக.

இலவன் வெண் கதிர்களைப் பாய்ச்சுவதால், வெண்மைக் கும் இலவு என்றே பொருள் கூறப்பட்டது.

இலவன் என்று நிலவைக் கூறிய தமிழ்ச் சொல், தமிழகத்தில் வழக்கிழந்து விட்டது. என்றாலும், தமிழ் மொழியினின்றும்

திரிந்த எபிரேயம் போன்ற மொழிகள், இலவன் என்ற சொல்லை நிலவு என்றும், வெண்மை என்றும் கூறுகின்றன.

இலவு என்ற தமிழ்ச் சொல், தற்போது இலவம் பஞ்சை அளிக்கும் (Silk cotton) மரத்துக்கு மட்டும் சொல்லப்படுகிறது. வெண்மை நிறமான பஞ்சை அளிப்பதால், அம்மரம் இலவு என அழைக்கப்பட்டது. சமற்கிருதத்தில் லவணா (இலவணா) எனத் திரிந்து, வெண்ணிறமான உப்பைக் (salt) குறித்தது. உவண் என்பதற்கு உப்பு என்ற பொருள் தமிழில் உண்டு. உவண் - லவணா.

கடலுக்கு, இலவண சமுத்திரம் என்ற சொல்வழக்கு வடமொழியில் உண்டு.

சிந்து என்ற தமிழ்ச் சொல் நீரைக் குறித்ததே. அது மழை, ஆறு கடல் என விரியும்.

கடல் உப்பை (sea salt), சிந்து லவணா என்றும் வடமொழியில் கூறுவர்.

இராமன் என்ற பெயர் (ராமா - வடமொழி), இர் - இர - இருள் என்ற பொருளில், கரிய நிறத்தைக் குறித்ததே. இராமன் என்பதற்கு கரிய நிறம் கொண்டவன் என்பதே பொருளாகும். இராமன் என்பது தமிழ்ச் சொல்லே; அது ராமா என வடமொழியில் திரிந்தது.

இராமனுக்குப் பிறந்த மகன் இலவன் (லவ) என்றே அழைக்கப்பட்டான். இலவன் இராமனைப் போலின்றி வெண்மை நிறமாக இருந்தான் என்பதை, லவ என்னும் சொல்லே விளக்குகிறது.

இலவு என்ற தமிழ்ச் சொல், லவ என்று வடமொழியிலும், லவ என்று எபிரேயத்திலும், லெப என்று ஃபோனீசிய மொழியிலும் திரிந்துள்ளதை நோக்குக.

லெப என்ற ஃபோனீசியச் சொல்லுக்குப் பனி என்பது பொருளாகும். பனி வெண்மை நிறமுடையது என்பதால், பனி மலைகள் சூழ்ந்த ஃபோனீசியா, பிற்காலத்தில் லெபனான் (Labanon) என்றே அழைக்கப்பட்டது.

விவிலியம் கூறும் லெபன் (Laban) என்ற சொல், வெண்மையைக் குறித்ததே.[167]

இலவன் என்ற லெபனின் மகளான இராக் - எல் என்பவளையே யாக்கோபு திருமணம் செய் கொண்டான். இராக் என்பதும் கருமையைக் குறித்த எபிரேயச் சொல்லே. தந்தை இலவனு (வெள்ளாயன்)க்கு, கறுப்பி (இராக்) பிறந்தாள் எனக் கருதலாம். இப்பெயர்கள் எல்லாம், கரணியப் பெயர்களாகவே தோன்றுகின்றன. தந்தையின் பெயர் பெத்து - எல் என அறியப் பட்ட நிலையில், இலவன் தன் மகளுக்கு (ஆண் பிள்ளை பிறக்கவில்லை) இராக் - எல் எனப் பெயரிட்டான். எனவே, எல் கடவுளே இலவனின் தெய்வம் என்று கருதுவது முற்றிலும் சரியான பார்வையாகும்.

ஆனால், யாக்கோபுவின் கடவுள் வேறு யாரோ எனக் கருதுமாறு விவிலியம் மயக்க உணர்வை ஏற்படுத்துகிறது.[168] இலவனின் தந்தை பெத்து - எல் என்பான், யாக்கோபுக்குப் பாட்டன் முறையாகும் என்பதால், யாக்கோபுக்கும் எல் கடவுளுக்கும் உள்ள தொடர்பை நாம் அறியலாம். ஆனால் யாக்கோபுக்கும் எல் கடவுளுக்கும் தொடர்பில்லாதது போன்ற தொரு தோற்றத்தை விவிலியம் தருகிறது.

இலவன், எல் கடவுளைத் தன் இல்லத்தில் வைத்து வழிபட்டுவந்தான். யாக்கோபு தன் மனைவி மக்களுடன் தனது தந்தை நாட்டிற்கு (கனான் நாடு)த் திரும்பும் போது, இராக் - எல் என்பாள், தனது தந்தையின் சிலையைத் திருடிக் கொண்டு போய்விடுகிறாள். இலவன், யாக்கோபுவுக்கு தன் இரு பெண் மக்களையும், ஏராளமான கால்நடைகளையும் அளித்தான். ஆனால், அவன் வழிபடும் கடவுளின் சிலையைக் காணாது சினமுற்றான். தனது மருமகனைத் துரத்திக் கொண்டுபோய், தனது மகளிடமிருந்த அச்சிலையை மீட்டான் என விவிலியம் கூறுகிறது.[169] மிகச் சிறிய மண்பொம்மையான அச்சிலையை மீட்க, இலவன் எடுத்துக் கொண்ட முயற்சி, அச்சிலையின் சிறப்பையுணர்த்தும். அதுவே எல் தெய்வச் சிலை எனச் சொல்லவும் வேண்டுமோ!

அச்சிலை, தெரபிம் (Terraphim) என்று எபிரேய மொழியில் கூறப்பட்டுள்ளது.[170] தெர என்பது தரையையும், பிம் என்பது பொம்மையையும் குறித்தவைகளே. தரைப் பொம்மை அல்லது மண்பொம்மை என்பதே தெரபிம் என்று எபிரேய மொழியில் திரிந்துள்ளது. இந்த நிகழ்ச்சியின் வழியாக, அபிறகாமும்

அவனது இல்லத்தாரும் சிலை வழிபாடு செய்து வந்தவர்களே எனத் தெளியலாம். சிலை வழிபாடு (Idolatory) என்பது, தொல் தமிழரின் வழிபாட்டு முறையே என்பதும் தெளிவு.

அபிறகாம் சிலை வழிபாடு செய்தவன் என்பதும், அவனது தம்பியின் பெயரனான இலவன் என்பான் சிலைவழிபாடு செய்தவனே என்பதும் விவிலியத்தில் விளக்கப்பட்டிருந் தாலும், யாக்கோபு வேறு ஒரு கடவுளை வணங்கியவன் போல் காட்டப்படுகிறான். அபிறகாமின் காலம், கி.மு. *1995* எனவும்,[171] விவிலியம் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டது கி.மு. *700-300* எனவும் சொல்லப்படுவதாலும், விவிலியம் தொகுக்கப்பட்ட காலத்தில், யூதர்கள் சிலைவழிபாட்டை நிறுத்திவிட்டனர் என்பதாலும், சிலைவழிபாடு தொடர்பான பல பகுதிகள் விடுக்கப்பட்டன அல்லது மறைக்கப்பட்டன என்பதாலும், இலவன் - யாக்கோபு கடவுளர் வெவ்வேறானவர் என்ற தோற் றத்தை விவிலியத்தில் புகுத்திவிட்டனர் எனக் கருதலாம். இம் முரண்பாடுகளுக்குக் கரணியம் விவிலியத்தைத் தொகுத்தவர் களேயன்றி, மூலத்தை எழுதியவர்கள் அல்லர் எனத் தெளியலாம்.

விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில், எல் என்ற தெய்வமே யூதர்களின் தெய்வமாயிருந்தது என்பது தெளிவாக விளக்கப் பட்டுள்ளது. எல் தெய்வம் ஆண் தெய்வமே என்றும் அறியப் பட்டுள்ளது.

பெத் - எல்[172] *: கடவுளின் இல்லம் (ஆதி. 35:7)* - El Beth - el.

யூதர்களின் முன்னோர்களின் கடவுளான எல்[173] *(ஆதி. 49:25)* - el of your fathers,

இசுரா - எல் மக்களின் எல்[174] *(பாடல்கள், 146:5)* - El of Jacob,

எப்போதும் இருக்கின்ற எல்[176] *(ஆதி. 21:33)* - El of Eternity, என்றவாறு விளக்கப்பட்டுள்ள எல் தெய்வம், கடவுள் (God) எனக் குறிக்கப்பட்டுள்ள இடத்திற்கெல்லாம் பொருந்துவ தாகவும் அறியப்படுகின்றது.[177]

ooo

எல் கடவுளின் வேறு தோற்றங்கள்
(The Images of El)

எல் என்பது தமிழ்ச் சொல்லே என்றும், அக்கடவுள் குமரிக் கண்டத்தில் வணங்கப்பட்டவன் என்றும், அவனே முழுமுதற் கடவுள் என்றும், விவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூலில் கண்டுள்ள முதல் பதினோரு அதிகாரங்களின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். கடவுள் ஒருவரே என்ற தமிழரின் கொள்கை, விவிலியத்தின் படைப்பதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ளது. நான்கு நிலங்களுக்கான கடவுளர் பிற்காலத்தில் அறியப்பட்ட பிறகும், குறிஞ்சி நிலத் தலைவனே முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொள்ளப்பட்டான். இக் கொள்கையை, திருமூலரும் ஒருவனே தேவன் என்றவாறு வெளிப்படுத்தினார். அந்த ஒரு கடவுளைப் பல பெயர்களால் அழைத்ததற்கானச் சான்றுகள் தமிழகத்திலும் உண்டு.[178] அதே முறையில் எல் கடவுள், கனான் நாட்டிலும் பல பெயர்களால் அழைக்கப் பட்டான்.

எல் - எல்லோன் (El - Elyon)[179]

எல் - எல் ஓலம் (El - Olam)[180]

எல் - எல் சடை (El - Shaddai)[181],

ஆவுடையப்பன் என்று நெல்லையிலும், பெருவுடையார் என்று தஞ்சையிலும், ஆடலரசன் என்று தில்லையிலும் அழைக்கப்பட்ட சிவனைப் போன்றே,

எல்லோன் என்று எருசலேமிலும், ஓலம் என்று பீர்சிபா விலும், பெரித் (Berith) என்று செக்கம் நகரிலும் எல் கடவுள் அழைக்கப்பட்டான்.[182]

எஃப். எம். கிராஸ் (F.M. Cross) என்ற வரலாற்றாய்வாளர், மேற்கண்ட பெயர்கள் தனித்தனியான கடவுளர்களைக் குறித்தன எனக் கொள்ளல் கூடாதெனக் கூறுகிறார்.

மேலும் இச் சொற்கள், எலோயிம் (Elohim), எலோ (Eloah) என்றும் அறியப்படுகின்றன.

எல் என்றும் சொல், பாபிலோனிய மொழியில் இலு (ilu) என்றும், அரபு மொழியில் இலா (ila) என்றும் அறியப்படுகின்றது. Bab - ilu என்ற அக்காடிய (பாபிலோனிய)ச் சொல்லுக்கு, எல்லின் வாயில் (the gateway of El) என்பதே பொருளாகும்.[183] பாப் - இலு எனும் சொல், பாப் - எல் (Bab - el) என்று எபிரேய மொழியில் சொல்லப்படுகின்றது. பாப் எல் என்ற கோபுரத்தைக் கட்ட முயன்றவர்கள், அது கட்டிமுடிக்கப்படாமல் குழப்பத்தில் முடிந்ததால், குழப்பம் என்ற சொல்லுக்கே Babel எனப் பெயர் வந்தது. Bab. என்ற சொல் வாய் - வாயில் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்பதால், பாபிலோன் என்ற அக்காடியச் சொல்லே, தமிழ் மூலத்தினின்றும் தோன்றியதென்பது தெளிவு.

எல்லோன், ஓலம், சடை, போன்ற சொற்கள், எல் கடவுளைப் பற்றி விளக்கும் சொற்களே (Adjectives) என ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். ஓலம் (Olam) என்பதற்கு, எப்போதும் இருக்கின்ற (eternal) என்றவாறு பொருள் கொள்கின்றனர்.

OOO

எல் – சடை (El - Shaddai)

எல் கடவுளுக்குச் சடை என்றவொரு அடை மொழி சொல்லப்பட்டுள்ளது. சடை என்ற சொல்லுக்கான பொருள் பற்றி, மேல் நாட்டு ஆய்வாளர்களிடம் ஒருமித்த கருத்து ஏற்பட வில்லை. சடை என்ற சொல்லை, விவிலியத்தில் குருமார் களின் மரபு (Priestly traditions) பயன்படுத்தியுள்ளது.[184] விவிலியத்தில் சடை என்ற சொல்லுக்கான விளக்கம் இல்லை. ஆல்பிரைட் (W.F. Albright), சடை என்பது மலைத் தொடர் (Mountain ranges) என்று விளக்கமளிக்கிறார்.[185] பாபிலோனிய சமய நம்பிக்கை களின் படி இறைவன் மலைகளில் வாழ்ந்திருப்பதாக அறியப் பட்டது. (The common ancient Semitic belief is that the home of the gods lay on the mountain, mentioned in some passages of the Old Testament).[186] மோயீசனுக்குச் சினை மலையில் (Mt. Sinai) தோன்றிய இறைவன், எல் சடை என்றே கருதப்படுவதாக ஆய்வாளர்கள் எண்ணுகின்றனர்.[187].

சடை என்ற தமிழ்ச் சொல், மயிர்க்கற்றையைப் பற்றிப் பொதுவாகக் கருதப்பட்டாலும், சிவனுடைய நீண்ட மயிர், விரிந்து பரந்து கிடந்ததைப் பற்றி இலக்கியங்கள் கூறுகின்றன.

எரிசடை யெழில் வேழந் தலையெனக் கீழிருந்து – பரிபாடல்,[188]

எரிசடை என்பது, சிவனைத் தலைத் தெய்வமாகக் கொண்டுள்ள திருவாதிரை மீனைச் சுட்டுவதாகும். பொன் னொளி மின்னும் தவனச் சடைமுடி என்று திருமூலர் கூறு வதும் இக்கருத்தையொட்டியதே. திருவாதிரை எனும் மூதிரைக்குப் பக்கத்தில் தெரிவது விடை (காளை அல்லது இரிஷபம்) ஓரையாகும். மூதிரையைச் சிவனாக உருவகம் செய்த தமிழர்கள், விடையை அவனது ஊர்தியாக்கினர். அடுத்து நீண்டு தெரியும் பால்வெளிப் பகுதியைச் சிவனின் சடையாகச் சொல்லி வைத்தனர். இவையெல்லாமே வானியல் உருவகங்கள் என அறிதல் வேண்டும்.

சள் எனும் சொல்லுக்கு நீட்சி என்ற பொருளுண்டு.

சள் - சள - சளசளப்பு = தொடர்ந்து பேசிக் கொண்டிருத்தல்.

சள் - சடு - சாடு = தொடர்ந்து குற்றஞ் சொல்லிக் கொண்டிருத்தல்.

சள் - சடு - சடை = நீண்ட கூந்தல். இது ஜடா என வடமொழியில் திரிந்தது.

சடை - சட்டை = நீண்ட அங்கி.

சள் - சடு = நீண்டு ஓடும் ஆறு.

சடை = மயிரைப் பின்னிய தொகுப்பு, நீண்டு செல்லும் வேர்.

சடையன் : நீண்ட மயிரைக் கொண்டிருப்பவன், சிவன்.

சடை என்ற எபிரேயச்சொல், நீண்டு செல்லும் மலைத் தொடரைக்குறிப்பது, சடை - நீளுதல் என்ற தமிழ்ப்பொருளையே குறிப்பதால், அது தமிழ்ச்சொல்லே என்று அறியலாம்.

ooo

கிரேக்க நாடு

கி.மு. 3000 ஆண்டுகளில், ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள், கிரேக்கத்துக்குத் தெற்கேயுள்ள கரட்டுத் தீவை (Crete island) வென்று, அங்கு தமது ஆளுகையை நிலைப்படுத்தினர். இவர்கள், தமிழ் மரபில் வந்த ஃபோனீசியர்களே என்பதற்கானச் சான்றுகள் பலவுள்ளன. வணிகர்களான ஃபோனீசியர்கள், நடுத்தரைக் கடலை யொட்டிய நகரங்களையெல்லாம் தங்கள் கட்டுப்பாட்டிற்குக்கொண்டுவந்தனர். கரட்டுத் தீவின்தான் முதன்முதலாக ஓர் அரசு செயல்படத்தொடங்கியது. இதனை ஐரோப்பாவின் முதல் அரசு என்றும் குறிப்பிடலாம். கி.மு.1900 ஆண்டுகளில், கிரேக்கப்பகுதிகள் அடிக்கடி வெளி நாட்டி னரின் தாக்குதல்களுக்கு ஆட்பட்டன. கி. மு. 1500 ஆண்டுகளில், கிரோக்கர்கள் தமது பிழைப்பைத் தேடி, கிழக்கிலிருந்த பாபி லோன், பாலத்தீனம் போன்ற நாடுகளில் குடியேறி வாழ்ந்து வந்தனர்.[189] கிரேக்க மொழியென்பது, பற்பல தீவுகளில் வாழ்ந் திருந்த மக்கள் பேசிய கொச்சை மொழியாகவே அறியப் பட்டிருந்தது. பாபிலோனிய மொழியை அக்கொச்சை மொழி யுடன் கலந்து பேசுவாராயினர்.

கி.மு. 500ஆண்டுகளில் வாழ்ந்திருந்த எரடோட்டஸ் என்றும் வரலாற்றுத் தந்தையும், கிரேக்க மெய்யியலாளரான எம்பிடாக்கஸ்ல், (கி.மு. 495 - 43), கிரேக்க அனுவியத்தின் அறிஞராகக் கருதப்படும் லியூசிப்பஸ், அவரது மாணவரான டெமாக்ரட்டஸ் (கி.மு. 460 - 370) ஆகியோர் தமது இளமைக் காலத்தில், பாபிலோன், சிறிய ஆசியா போன்ற பகுதிகளில் வாழ்ந்திருந்தவராவர். கிழக்கித்திய கணிதம், வானியல். மெய்யியல் போன்ற அறிவுசார்ந்த கலைகளில் மேற்கண்டோர் ஆர்வம் கொண்டிருந்தனர்.

ஃபோனீசியர்கள் கி. மு. 1500 ஆண்டுகளில் கண்டுபிடித்த புதிய வரிவடிவங்களை, கிரேக்கர்கள் ஏற்றுக் கொண்டு, கிரேக்க

மொழிக்கு ஊக்கம் கொடுத்தனர். காட்மஸ் என்ற வணிகரே. இப்புதிய வரிவடிவ முறையை கிரேக்கத்தில் அறிமுகம் செய்தார் என்று எரடோட்டஸ் கூறுகிறார்.[190] புதிய வரி வடிவங்களைக் கைக்கொண்ட கிரேக்கர்களின் இலக்கியப் படைப்புகள் அடுத்திருத்து வெளிவரத் தொடங்கின. ஓமரின் கவிதைகள், புதிய வரி வடித்தில் எழுதப்பட்டவைகளே. கி.மு. 400 ஆண்டு களில் கிரேக்கமொழி சிறப்புறத் தொடங்கியது. தாலமி என்னும் வானியலார் தொகுத்த குறிப்புகள் அக்காலத்திலேயே வெளி வந்தன. அலெக்சாந்தரின் போர்க்கள வெற்றிகள் கிரேக்கர் களையும், கிரேக்க மொழியையும் உயர்த்தின. கிரேக்கர்களால் வென்றெடுக்கப்பட்ட நாடுகளில், கிரேக்க மொழியைக் கற்பதும் பேசுவதும் அறிவுக்கு இலக்கணமாகக் கருப்பட்டது. கிரேக்க மொழி கற்றோரே அறிவுடையோர் எனமக்கள் எண்ணினர். கிறித்து பிறப்பாண்டுகளில் கிரேக்கமொழியே முதன்மை பெற் றிருந்தது. கிரேக்கத்தினின்று இலத்தீனும், இலத்தீனிலிருந்து மற்ற ஐரோப்பிய மொழிகளும் கிளைத்தன.

தொன்மைக்கால கிரீஸ் (Greece) நாட்டுக்கு எல்லாஸ் (Hellas) என்பதே பெயராகும்.[191] கிரேக்கமொழியில் Ellas (எல்லாஸ்) என்றும் அழைத்தனர்.[192] தற்போதையை கிரேக்க நாட்டை, ஆங்கிலத்தில் The Hellenic Republic of Greece என்றும்,[193], கிரேக்க மொழியில் Elliniki Dimokratia என்றும் அழைக்கின்றனர்.[194]

Hellas - Ellas - Eellenic - Elliniki, ஆகிய சொற்களில் காணப் படும் சொல், எல் என்பதே ஆகும்.

பாபிலோன், ஃபோனீசியா, கனான் நாடுகளில் வணங்கப் பட்ட எல் கடவுள் பற்றியும், அந்நாட்டு மக்களிடேயே எல் பற்றிய செல்வாக்கையும், கிரேக்கர்கள் அறிந்திருந்தனர். வரலாற் றில் இருண்ட காலமாக (Dark age) அறியப்பட் கி. மு. 1000 - 800 ஆண்டுகளில், கிரேக்கர்கள் கூட்டம் கூட்டமாக (En masse), நடுத்தரைக் கடலின் கிழக்கு நாடுகளின், வயிற்றுப் பிழைப்புக் காகக் குடியேறினர் என்று வரலாறு கூறுகிறது.[195]. இதனால் எல் கடவுளையே கிரேக்கர்களும் ஏற்றுக் கொண்டனர். அதன் விளைவாகவே எல்லின் நாடு (El Country) என்று தங்கள் நாட்டை அழைத்துக் கொண்டனர். ஏதென்சு நகருக்கும் டெல்ஃபி நகருக்கும் இடையிலிருந்த மலையொன்று, எலிகோன் (Helikon) என்றே அழைக்கப்பட்டது. எல் - கோன் ஆகிய இரண்டும்

தமிழ்ச் சொற்களே. எல் கடவுளே எங்களது மன்னன் என்பதே இச் சொல்லின் பொருளாகும். ஒளிம்பியா (Olympia) என்று தென் கிரேக்க நாட்டில் நகரம் ஒன்று அழைக்கப்பட்டது. கிரேக்கத்தின் வடபகுதியில் உள்ள மலைக்கு ஒளிம்பஸ் (Mt. Olympus) என்றே பெயரிடப்பட்டது.

ஒளிம்பஸ்:[196]

ஒளிவமரங்கள் (Olive trees) ஓங்கி வளர்ந்துள்ள மலை, ஒளிவ மலை என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுவர். ஒளிவ மரம் என்பது (Olea luropes), 50 அடி உயரம் வரையில் வளரக் கூடியதும், எப்போதும் பசுமையாகக் காணப்படுவதுமான ஒரு மரமாகும். கிரேக்க மொழியில் Oleaceae என்று இம்மரம் சொல்லப்பட்டது. இம்மரத்தின் பண்புகள் பற்றி கலைக் களஞ்சிய விளக்கங்கள் சிறப்பாக உள்ளன.

(A long - lived evergreen tree native to the Mediterranean region, growing 50 ft, trunk silvery, guarled with numerous cavities, leaves opposite, narrow, pointed, leathery dark green above pale beneath, flowers small, white, four petals, fruit succulent, oily green, ripening over one to black, since early times oil obtained from pressed fruit - Cambridge Encylopaedia.[197] p. 808)

ஒளி என்ற தமிழ்ச் சொல்லைத் தாங்கி நிற்கும் இம்மரம் ஒளிமரம் என்றே சொல்லப்பட்டு, ஒளிவ (Oliva) என்று திரிந்துள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில், வீடுகளிலும் பொதுவிடங்களிலும் விளக்கெரிப்பதற்கு இவ்வெண்ணெயே பயன்பட்டதால், ஒளிக்கு உதவும் எண்ணெய் ஒளி எண்ணெய் என்றே சொல்லப்பட்டது. இதனை ஒளிநெய் என்பதே சரியானச் சொல்லாகும்.

எல் என்பதற்கு ஒளியென்ற பொருளுமுண்டு. எல் - ஒளி ஆகிய இரண்டு தமிழ்ச் சொற்களும் கிரேக்க நாட்டிலும் அதன் வரலாற்றிலும் சிறப்பான இடங்களைப் பிடித்தவைகளாகும். ஒளிதரும் நெய்யைத் தரும் மரம், ஒளிமரம் என்றே சொல்லப் பட்டதுபோல், ஒளி மரங்களடர்ந்த மலையும் ஒளிமலை (Olympus) என்றே அறியப்பட்டது. இதன் பொருளை உணராதவர் ஒளி என்ற சொல்லை, ஒலி என்றவாறு ஒலிம்பஸ் என்று தவறாகக் குறித்துவிட்டனர். கிரேக்க நாட்டில் வழக்கிலிருந்த

ஒளி - ஒளிம்பஸ் என்ற சொற்களை அடிப்படையாகக் கொண்டே, ஒலிம்பிக் (Olympic) என்ற போட்டி விளையாட்டுகள் தோன்றின. ஒளிம்பிக் மலைப்பகுதியில் நடை பெற்றதால், இது ஒளிம்பிக் எனப்பட்டது.

இந்த ஒளிம்பஸ் மலையில்தான், சேயன் அல்லது சேயோன் என அறியப்பட்ட தமிழ்நாட்டில் எல் கடவுள், சேயுஸ் (Zeus) என்ற பெயரால் அழைக்கப்பட்டு, அம்மலையிலேயே வீற்றிருந் தான். கி.மு. 1000 ஆண்டுகளில், சேயுசுக்கு விழா எடுக்கப்பட்ட செய்திகள், வரலாற்றில் காணக்கிடக்கின்றன. கி.மு. 776 முதல் நான்காண்டுகளுக்கு ஒருமுறை இவ்விழா எடுக்கப்பட்டு, அவ்விழாவில் விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெற்றன. இந்நிகழ்வே தற்கால ஒளிம்பிக் போட்டிகளுக்கான முதற்படி யாகும். கிரேக்கத்தில் அறியப்பட்டது போன்றே, நடுத்தரைக் கடலின் தீவு நாடான சைப்ரசிலும் ஒளிம்பஸ் என்றொரு மலைக்குப் பெயரிடப்பட்டிருந்தது. ஒளிவ என்ற சொல்லின் நீட்சியாகவே, ஒளிவர் (Oliver) என்ற பெயர்ச்சொல் ஆங்கிலத் தில் காணப்படுகின்றது.

எல் என்ற சொல்லோடு தொடர்புடைய சில கிரேக்கச் சொற்களாவன:

Hel: [199] கிரேக்கத் தொன்மக் கதைகளில் கூறப்படும் குழந்தை வளர்ந்துவிட்ட நிலையில், இறந்தோர் உலகிற்கு காவ லாக இருந்தனர்.

Helheim: [200] இறந்தோர் உலகம் (under world) முதலில் கூறப்பட்ட Hel என்பவள், இங்குதான் வாழ்ந்திருந்தாள், எல் என்ற தமிழ்ச்சொல் ஒளி, பகல், நெருப்பு, தீ என்ற பொருளில் தமிழில் கூறப்பட்டுள்ளது. அப்பொருளையே கொண்டு, எல் என்ற கிரேக்கச் சொல், தீ நெருப்பு என்ற பொருளில் காணப் படுவதை நோக்குக. இறந்தோர் உலகம் (நரகம்), நெருப்பு உலகம் என்றே சொல்லப்படுவதால் நெருப்புலகம், Hel (எல்) என்ற சொல்லால் விளக்கப்பட்டுள்ளதைக் காண்க. Hel என்ற நரகத்தைத் குறித்த கிரேக்கச்சொல்லே Hell என்று ஆங்கிலத்தில் சொல்லப்பட்டுள்ளது. எல் - Hel (கிரேக்கம்) - Hell (ஆங்கிலம்)

Helen: [201] கிரேக்கக் கதையில் வரும் ஒரு பெண். ஒளி பொருந்திய அழகுள்ளவள்.

Helena, St:[202] எல் என்ற சொல்லால் அழைக்கப்பட்ட உரோமானியப் பெண்மணி. பேரரசன் கான்ஸ்டண்டைன் (The great) என்ற உரோம நாட்டு மன்னனின் தாய், உரோம நாட்டில் கிறித்துவத்தை அனுமதிக்கச் செய்தவள்.

Helene:[203] ஒரு விண்மீன். எல் என்ற சொல்லின் தொடங்கு கிறது. மேலும் இதற்கு மற்றொரு பெயராக Dione என்ற வழக்கும் உண்டு. எல் என்பது தீ எனும் பொருளில் தீயோன் என்பதே, Dione எனத் திரிந்தது. என்க. Helene - Dione ஆகிய இரு சொற்களும் ஒரு பொருளைக்குறித்தனவே.

எல் என்ற தமிழ்மூலத்தினின்றும் பிறந்து இன்று பரலவாக அறியப்படும் சொற்களாவன.

Helicon[204]= போயாட்டியாவின் மலைத்தொடர்.

Helicopter[205]= An air craft.

Heliocentic system:[206] Planetary theory. எல் என்ற கதிரவனை மையப்படுத்திச் சொல்லப்படும் கோள்கள் பற்றிய கொள்கை.

Helios:[207] கிரேக்கத் தொன்மக் கதையில் கூறப்பட்டுள்ள ஞாயிற்றுக் கடவுள் (Sun god)

Helios Project:[208] கதிரவனுக்கும் அறிவனுக்கும் (Mercury) இடைப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்யும் திட்டம்.

Helio trope:[209] விண்ணைத் தொடும் உயர்ந்த மரம். (கதிர வனைத் தொடுவதான கற்பனை)

Helium:[210] ஒளியுள்ள ஒரு பொருள் (Chemical element)

மேலும், Hellbender, Hellebore, Helleborine, Hellen, Hellenistic age Philosopy, Hellenists, Hellemization போன்ற சொற்கள்,[211] எல் என்ற தமிழ் மூலச் சொல்லினின்றும் தோன்றியவைகளே.

Hellow: தற்காலத்தில் தொலைபேசியில் அழைக்கப்படு பவரும், அழைப்பவரும் Hellow என்ற சொல்லைப் பயன்படுத்து கின்றனர். இச்சொல், பொருளற்ற ஓரொலிதான் என்றும், தமிழில் ஏய், யோவ், போன்றவைகளைப் போன்றதேயென்றும் பலர் கருதுகின்றனர். உண்மையில் அது ஒரு வாழ்த்துச் சொல்லே இசுலாமியர் ஒருவர் ஒருவரைச் சந்தித்துக்கொள்ளும் போது,

அமைதி உங்களோடிருக்கட்கும் என்ற பொருளில், அசாலமு அலைக்கும் என்பர். இது வணக்கம் என்று தமிழில் கூறப்படு வதைப்போன்றே. இசுலாமியர் அல்லாவைத் தவிர்த்து எவரை யும் வணங்குவதில்லை என்ற கருத்தைக் கொண்டிருப்பதால், வணக்கம் என்று கூடச் சொல்வதில்லை. அதைப்போன்றே Hellow என்ற சொல், எச்சொல் மூலத்தினின்று பிறந்தது. எனத் தெரியாமல் பலரும் குழம்புகின்றனர். அது உண்மையில் கடவுளைக் குறித்தச் சொல்லே. கடவுளை, இறைவா என்று தொடங்கப்படும் Hellow என்ற சொல், எல் என்ற கடவுளைக் குறித்துச் சொல்லப்பட்டதே. பேச்சைத் தொடங்குமுன் கடவுள் பெயரைச் சொல்லித் தொடங்குவது என்ற நடைமுறைப் படிதான் Hellow என்ற சொல் அறியப்படுகின்றது. கடவுள் இல்லை என்ற கொள்கையைக் கொண்டிருப்பவர்களும்கூட, கடவுளே என்று சொல்லித்தான் தொலைபேசியில் உரையாடு கின்றனர். இச்சொல்லின் உண்மையான பொருள் தெரிந்தால், ஒருக்கால் இச்சொல்லைச் கூறாது தவிர்த்துவிடுதல் கூடும். உலகெங்கும் எண்ண முடியாது அளவில், மக்கள் தங்கள் தொலைபேசிகள் வழியே எல் கடவுளை அழைத்துக் கொண்டு தானிருக்கிறார்கள் என்பதே உண்மையான செய்தியாகும்.

○○○

யா – தெய்வம்

யா என்ற ஓரேழுத்துச் சொல்லுக்குத் தமிழில் சரியான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. தமிழில் நெடில்களே முதலில் தோன்றினவென்றும், அதற்கேற்ற குறில்கள் பிற்காலத்தில் தோன்றியவையே என்றும் தேவநேயப் பாவாணர் கருதுகிறார். யகரம் சொல்லிற்கு முதலில் வராது என்று தொல்காப்பியம் கூறுகிறது. யா என்பது ஒரெழுத்துச் சொல்லாகவும், பல சொற்களுக்கு முதல் எழுத்தாகவும் வந்துள்ளதைக் காணலாம். இருப்பினும் யா வெனும் எழுத்தில் தொடங்கும் சொற்கள் குறைவாகவே உள்ளன.

நெட்டெழுத்து ஏழே ஓர் எழுத்து ஒருமொழி

– தொல்காப்பியம்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு நெட்டெழுத்துக்களும் சொற்களாகிப் பொருள்தரும் என்பது தொல்காப்பியரின் கூற்றாகும்.[212] ஐ என்ற எழுத்தை அய் என்றும் எழுதலாம் என்றும் கூறுகிறார்.

அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்

ஐ என் நெடுஞ்சினை மெய் பெறத் தோன்றும்

– தொல்காப்பியம்[213]

யகரம் ஆகாரத்துடன் மட்டுமே மொழிக்கு முதலில் வரும் என்பார். இதன் மூலம் யகர ஒற்று மொழிக்கு முதலில் வராது என்பதும் தெளிவு.

ஆவோடல்லது யகரம் முதலாது – தொல்காப்பியம்.[214]

யா என்ற எழுத்து சொல்லுக்கு முதலில் வருமென்பதும், அது தனிப் பொருளைத் தரும் என்பதும் தொல்காப்பியரின் கூற்றாகும்.

யா எனும் சொல்லின் வேர்ச் சொல் யாது? யா எனும் சொல்லுக்கு என்ன பொருள்? இவ்வினாக்களுக்கான விடை தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை. சில சொற்கள் இயற்கையிலேயே தோன்றின போல் யா என்ற சொல்லும் இயற்கையானதா?

சொல்லாய் வறிஞர் பா. அருளி, யா எற சொல்லுக்கு இருள், கருமை என்றவாறு பொருள் கூறுகிறார். யா எனும் சொல்லோ அல்லது எழுத்தோ நீண்டு ஒலிக்கும் சொற்களான யாமன், யாமம் என்பனவற்றை மேற்கோள் காட்டுகிறார்.[215]

யா - யாஅம் = யாம் - யாம்அம் = யாமம்.

யா + அன்= யாமன்.

யாமம் என்ற சொல் முந்தியாதா? யாமன் முந்தியாதா என நோக்குகையில், யாமன் வரும் பொழுது யாமம் எனப்பட்டதாக அறிய முடிகின்றது. அதன் வழியில் யாமன் என்பவன் கறுப்பன் என்ற பொருளில், அவன் வரும் பொழுதும் இருட்டாக அமைவதால், யாமம் எனப்பட்டது. கருமை வந்தவனுக்கும், இருட்டுப் பொழுதுக்கும் இணைந்து வரலாயிற்று. யமன் என்ற பேச்சு வழக்குச் சொல், யமா என்ற வடசொல்லினின்றும் தமிழ்ப்படுத்தப்பட்டது என்று சிலரும், யாமன் என்பதே கொச்சையாக யமன் எனப்பட்டது,

எனச்சிலரும் கருதுவர். சமற்கிருதம் என்ற மொழியே, தமிழ்மொழியின் அடித்தளத்திலிருந்து கோர்க்கப்பட்ட மொழியென்பதில் மாற்றுக்கருத்து இல்லை.[216] தமிழில் சொற்கள் பல்லாயிரம் இருந்தும், அவை வடமொழியில் திரிக்கப்பட்டு, மூலம் அழிக்கப்பட்டதால், பல தமிழ்ச் சொற்களை, அயன் மொழிச் சொற்களாகக் கருதி மயங்கும் நில ஏற்பட்டுள்ளதற்கு யா என்ற ஓரெழுத்துச் சொல்லே சரியான எடுத்துக்காட்டாகும். யா என்ற சொல்லுக்கு இருட்டு, கருமையென்று நேரிடையாக, எந்தத் தமிழ் இலக்கியமும் பொருள் கூறவில்லை.

தொல்காப்பியத்தில், யா என்ற சொல்லுக்குக் கருமை என்று பொருள்சொல்லப்படவில்லை. யா என்பது ஒரு மரம் என, தொல்காப்பியம் கூறுகிறது. மெல்லெழுத்து மிக்கு வருதற்கு எடுத்துக்காட்டாக யா மரம் சொல்லப்பட்டுள்ளது.

யா மரக்கிளவிவும் பிடாவும் தளாவும் –தொல்காப்பியம்,[217]

யாமனின் ஊர்தியாக எருமையைச் சொல்வர். இருமெய் என்ற தமிழ்ச்சொல்லே எருமை எனத்திரிந்தது. இருண்ட அல்லது கரிய உடலைக் கொண்ட விலங்கு என்ற பொருள் அதன் பெயரிலேயே உள்ளது. கரிய நிறங் கொண்ட யாமன், காரிருளில் வரும் போது, அவனது ஊர்தியும் கரிய நிறத்தில் இருக்க வேண்டுமல்லவா?

யமன் என்ற சொல், யகர ஒற்றைத் தாங்கிய வருவதால் அது தமிழ்ச்சொல்லாக இருக்க இயலாது என்றும், அது வடசொல்லே என்றும் முடிவு கட்டிய தமிழ்ப்புலவர்கள் யமன் என்று எழுதி இலக்கணப் பிழையைச் செய்யலாகாது எனக் கருதி, ஞமன் என்றவாறு தமிழ்ப்படுத்தினர். யாமன் என்ற தமிழ்ச் சொல்லை, யமா என்று திரிந்துக் கொண்ட ஆரியத்தை நம்பி, அதுவே மூலச் சொல்லெனவும் கருதி, யாமனை ஞமன் என்று திரித்துக் கொண்டது. புலவர்களின் அறியாமையையே காட்டுகிறதெனலாம்.

திருந்துகோன் ஞமன்றன் மெய்யிற் பிரிவி– பரிபாடல்,[218]

யாமனின் கையில் தண்டம் இருப்பதாகவும் அதன் பொருட்டே அவனை,

தெரிகோன் ஞமன் – புறநானூறு,[219]

என்றும் கூறினர். நடுநிலையுடன் அவன் ஒறுப்பு வழங்குவதால், நடுவன் என்றும் கூறினர்.

காலன் என்பதும் யாமனுக்கு மற்றொரு பெயராகும். கால் என்ற சொல்லும் கருமை என்பதே. கன் - கல் - கால் என அது நீண்டது. காலாய் (கறுப்பாய்) இருந்தவன் காலன் எனப்பட்டான். கால் எனன்பதற்குக் காற்று எனவும் ஒரு பொருளுண்டு.

.... கழறுங் காலுறழ் பெழுந்தவர் – பரிபாடல்,[220]

காற்றடிக்கும் பருவத்திற்கேற்ப ஆண்டுக் கணக்குப் பிரிக்கப்பட்டது.[221] அதுவே காலம் எனப்பட்டது. கால் + அம் = காலம் என்ற தமிழ்ச்சொல்லுக்கு கொடிய இருள் என்ற பொருளுமுண்டு. கொடிய இருள் காலத்தின் தலைவன் காலன் எனப்பட்டான். உயிரையும் உடலையும் தனித்தனிக் கூறு களாக்குபவன் கூறன் அல்லது கூற்றன் என்றும் அழைக்கப்பட்டான். ஒரு நாட்டின் மண்டிலங்கள் தனித்தனிப் பிரிவுகளாக்கப்

பட்டு, அதாவது கூறுபோடப்பட்டு, வகுக்கப்பட்டன. கூறு போடப்பட்டப் பிரிவுகள், கூற்றம் எனப்பட்டன.

குல் - குறு - கூறு - கூற்று = வாயினின்று ஒவ்வொரு பகுதி யாக விழும் கருத்துகள்.

குல் - கொல் - கொல்லன் = மரங்களைக் கொன்று அவற்றை ஒன்றோடொன்று தைக்கும் தைச்சன் அல்லது தச்சன்.

குல் - கொல் - கோல் = வளைவான தடி.

குல் - கொல் - கோல் - கோடு = வளைந்திருக்கும் கிளை அல்லது கொம்பு.

குல் என்ற வேர்ச் சொல்லினின்று நீளும் சொற்களைப் பாருங்கள் இவ்வகையிலான சொற்களின் நீட்சியை உலகின் எம்மொழிகளிலும் காணவியலாது என்பதே, தமிழின் தனிச் சிறப்பாகும்.

மேற்கூறப்பட்ட செய்திகளின்படி, யாமம் - யாமன் - காலன் - எருமை போன்ற சொற்கள் கருமையை உணர்த்துவன என்பதில் ஐயமில்லை.

ooo

யா – நீர்

யா என்ற சொல், கருமையைக் குறித்து போன்றே நீரையும் குறித்தது. யா என்ற மரத்தைப் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

ஆனால் அது கருமை என்றோ நீர் என்றோ குறிப்பிட வில்லை. கடுங்கோடையில் பாலை நிலத்தில் காணப்படும் ஒரு மரம்பற்றிக் குறுந்தொகை கூறுகின்றது. ஏற்கனவே யாமம் என்ற சொல் நடு இரவைக் குறித்தது. என்பதையும் குறுந் தொகை, பாடல்களால் விளக்குகின்றது.[222] அனைத்துப் பாடல் கலுமே தலைவன் தன் தலைவியைக் காணவரும் இரவு நேரம் பற்றியே குறிப்பிடுகின்றன. யாமனைப் பற்றிய செய்தியொன்று மில்லை.

பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்
துரவுக்களிறு போல்வந் திரவுக்கதவ முயறல்.[223]

எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் இதற்கோர் எடுத்துக் காட்டாகும்.

"ஊரில் உள்ளோர் பலரும் துயில் கொள்ளும் இருள் செறிந்த இடையிரவின் கண் (யாமத்தின் கண்), வலியையுடைய களிற்றைப் போலவந்து, இரவுக் காலத்தே, தாழிட்ட கதவைத் திறக்க முயன்றதனால் ஏற்படும் ஒலியானது........" யாமம் என் பதை இடையிரவு, நடு இரவு, நள்ளிரவு எனக் குறுந்தொகை விளக்கமாகக் கூறுவதைக் காணலாம்.

யாமரம் என்ற பாலைநில மரம் பற்றிய செய்தியையும் மூன்று பாடல்களில் குறுந்தொகை கூறுகின்றது.[224]

நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே

பாலை நிலத்தில் கடுங்கோடையில் தனது பிடியுடன் (பெண்யானை) செல்லும் யானை, தன்பிடிக்கு நீர் வேட்கை யுண்டாதலையறிந்து வருந்தியது. கடுங்ககோடையில் நீரின்மை யால், நீரைப் பெருமளவில் தன்பட்டைகளில் தேக்கிவைத் திருக்கும் யாமரத்தில் பட்டைகளை உரித்து, அவற்றைப் பிழிந்து, அந்த நீரைத் தனது பிடிக்கு அளிப்பதாக இப்பாடலின் கருத்து, இக்காட்சியைக் கண்ட தலைவி பெண்யானை படும் துன்பங் கண்டு, பெண்ணாகிய தன்னையும் நினைத்து விரைவில் தலைவன் வந்து சேர்வார் என்ற செய்தியை விளக்குகிறது.

யா அம் பொளிக்கும் = யா மரத்தில் பட்டையை உரித்து நீரைத் தரும்.

யாமம் என்பது கருமை என்று கூறப்படும் செய்தியின்படி, யாமரம் என்பது கருமையான மரம் என்றவாறு இங்கு பொருள் கொள்ளப்படவில்லை. மாறாக நீர் மரம் என்ற பொருளே விஞ்சுகிறது.

தலைவி தலைவனைப் பிரிந்த காலத்தில், தலைவனைப் பிரிந்த துன்பத்தைவிட, தலைவிபடும் இன்னல் மிக்குள்ளதாகத் தோழி கருதுகிறாள். தலைவன் யா மரங்கள் அடைந்துள்ள பாலை நிலம் வழியே பயணம் செய்கையில் துன்பமடைவான் என்று தலைவி வருந்தினாள் என்ற கருத்து,

கவலை யாத்த வவல நீளிடை

இதன் வழியே விளக்கப்படுகின்றது.[225]

ஏற்கனவே பாடல் 37 சொல்லும் கருத்தினை யொட்டியே, பாடல் 255உம் கூறுவதைக் காணலாம். தோழி தன் தலைவியை நோக்கி,

“தலைவன் தாம் செல்லும் பாலை நிலத்தின் யானை தன் சுற்றத்தைப் பாதுகாக்கும் காட்சியைக் கண்டு, நாமும், நம் இல்லறக் கடன் இறுப்பதற்கு நம் முயற்சி முற்றல் வேண்டும் என்று செல்வார்,” எனக் கூறினாள்,

மேலும் பல செய்திகள் யாமரம் பற்றித் தமிழ் இலக்கியங் களில் காணப்படுகின்றன.

உம்ப லகைத்த வொன்முறி யாவும்– மலைபடுகாடாம்.[226]

பெருங்களி றுரிஞ்சிய மண்ணரை யாஅத்
தருஞ்சுரக் கவலைய வதர்படு மருங்கின் – அகநானூறு[227]

முளிசினை யாஅத்துப் பொளி பிளந்தூட்ட – அகநானூறு[228]

புன்றலை மடப்பிடி யுணீஇய ரங்குழை
நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுட்
படிஞிமிறு கடயுங்களிறே – அகநானூறு[229]

மேலும் நற்றிணையிலும்,[230] கலித்தொகையிலுங்கூட[231] யாமரத்துக் காட்சிகளைக் காணலாம்.

யாமரம்

"இது பாலை நிலத்திலுள்ள தொரு மரம். யா என்று வழங்கப்பெறும் அவ்வழக்கு விளா, விளாம், மரா மராமெனச் சில மரப்பெயர்கள் வழங்கி வரும் முறையைப் போன்றதென்று தோன்றுகின்றது. இம் மரத்தின் பட்டை நீர்ப்பசை மிக் தென்று தெரிகின்றது.

- டாக்டர் உ. வே. சா. குறுந்தொகை விளக்க உரை, ப. 86.

யாமரம் பற்றி நச்சினார்க்கினியர்

"ஆச்சாவை (யாஆ என்பதை ஆ வென்று கூறுகிறார்)ப் பிளந்து அந்நாரைப் பொளித்து ஊட்டும் அன்பினால்யுடைய........",

தொல்காப்பியம், பொருளதிகாரம்,[233]

மேற்கண்ட செய்திகள் யாவும், யாமரம் என்பது நீர் மரமே எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. யா என்ற சொல், நீர் என்ற பொருளில் உரைத்தது. கடைக்கழகக் காலத்துடன் வழக்கிழந்து போயிற்று. தொல்காப்பியருக்கு முற்பட்ட காலத்தில் யா என்பது நீரைக் குறித்தே சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

சுமேரியக் கடவுள் யா

சுமேரியர்கள் யார் என்ற கேள்விக்கு இன்று வரை மேலைநாட்டு ஆய்வாளர்களால் விடைகாண இயலவில்லை. இருப்பினும், அவர்கள் சிந்துவெளியினின்றோ, தமிழ்நாட்டி னின்றோ, படையெடுத்துச் சென்று, பாபிலோன் நாட்டை வென்றவர்கள் என்பதற்கானச் சான்றுகள் வலுவாக உள்ளன. சுமர் என்ற சொல், சமர் (போர்) என்ற தமிழச் சொல்லின் திரிபே.[234] பாரசீக வளைகுடா வழியே சுமேரியர் நுழைந்து,

பாபிலோன் மீது படைஎடுத்தனர் என்று வரலாறு கூறுகிறது.[235] அங்கு ஊர் என்ற நாகரிக நகரைத் தோற்றுவித்தவர்களும் சுமேரியர்களே. உலகின் முதல் நாகரிக நகரமாக ஊர் அண்மைக் காலம் வரையில் கருதப்பட்டது. தற்போது கிடைத்துள்ள சான்றுகளின் படி, ஊர் நகரத்தினும் பழமையான நாகரிகம் சிந்துவெளியிலும், சிந்துவெளியினும் தொன்மையான நாகரிகம் பூம்புகாரிலும் காணப்பட்டதாக அறியலாம். பூம்புகார் நகரின் வடிவமைப்பு, மொகஞ்சதாரோ நகரில் காணப்பட்டதைப் போன்று, ஊர் நகரிலும் காணப்பட்டதால் இம்மூன்று நகரங் களையும் உருவாக்கியவர்கள் தமிழர்களே என அறிய முடிகிறது.[236]

திருத்தந்தை ஈராஸ் பாதிரியார், சுமேரிய மொழிக்கு சிந்துவெளி மொழிக்கும் உள்ள தொடர்பை எடுத்துக் காட்டி னார். அவருக்குப் பிறகு வந்த ஃபேர் செர்விஸ் என்பார் இக்கருத்தை உறுதிப்படுத்தினார். இன்று சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமோ என இதுவரையில் மறுத்து வந்தவர்களா லும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், சுமேரியர் தமிழர் வழிவந்தோரே என்பது பல்லாற்றாலும் இன்று மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. அக்கண்ணோட்டத்தில் சுமேரியச் சொற்கள் பலவும் தமிழ் மூலத்தையே கொண்டுள்ளன என்பது தெளிவு.[237]

சுமேரிய எழுத்துக்களைப் படித்தவர்கள், பல தவறு களைச் செய்துள்ளனர். ஆப்பு எழுத்து முறையில் (Cunieform) அமைந்துள்ள அச்சொற்களைச் சிலர் தலைகீழாகப் படித்துப் பொருள் கொண்டனர். எடுத்துக்காட்டாக நாராம்சின் (NARAM SIN) என்றவொரு மன்னன் பெயர் அவ்வெழுத்துக்களில் காணப்படுகின்றது. இதன்னைத் தகைீழாகப் படித்துள்ளனர் என்றே தோன்றுகிறது. SIN MARAN என்றவாறு, சின்ன மாறன் என்ற தமிழ்ப் பெயரில் அச்சொல் அறியப்படுவதை நோக்குக.

இவ்வாறு முழுமையாகப் படிக்கப்படாத பலசொற்களில், யா என்ற சொல்லும் காணப்படுகின்றது. அனு(ANU), யா (YA) என்லில் (ENLIL) ஆகிய முக்கடவுளர்கள் பற்றிய செய்தி, சுமேரியக் குறிப்புகளில் காணப்படுகின்றன.[238]

இப்பெயர்களின் அனு என்பது வானம் (Sky) என்ற பொருளிலும், என்லில் என்பது, lil என்றவாறு, நிழல் (Shadow) என்ற பொருளிலும் சொல்லப்பட்டுள்ளன. யா என்ற சொல்

லுக்கு கடல் தெய்வம் என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. இத்தெய்வம், மீனவர்களின் காவல் தெய்வமாகவும் கருதப் பட்டது. அரை மாந்தனும் அரைப்பகுதி மீனுமாகக் காட்சி யளிக்கும் இத்தெய்வம் தான், பாபிலோனியர்களுக்குக் கலை, அறிவியல், வானியல் போன்ற கல்வியைக் கற்றுத்தந்தவன் என்றும் கூறப்படுகின்றது. இம்மூன்று கடவுளர்களில் யாத் தெய்வமே ஆற்றலுள்ளவனாகவும், மிகச் சிறந்த அறிவுள்ளவ னாகவும் அழைக்கப்படுகிறான். இச்செய்தியின் மூலம், யாத் தெய்வம், அங்கு நாகரிகமற்றவர்களாயிருந்த மக்களுக்கு, கல்வி மற்றும் பண்பாட்டுக் கலைகளைக் கற்றுத்தந்தவன் என அறியப்படுகின்றான்.[239]

தேவநேயப் பாவாணர், இந்த யாத் தெய்வம் தமிழ்க் கணியனே என்றும், கடல் கோளால் அழிவுற்ற குமரிக் கண்டத்தினின்றும் தப்பிப் பிழைத்துச் சென்ற தமிழனே என்றும், அரைப்பகுதி மீன் உருவம், பாண்டிய அரசையும் மன்னர் களையும் நினைவூட்டுவதாக உள்ளது என்றும், கடல்கோளின் பிடியினின்றும் தப்பிப்பிழைத்துச் சென்றதால், அங்கு கடல் தெய்வமாக அறியப்பட்டான் என்றும் கருதுகிறார்.[240] யா என்ற சொல்லைப் பற்றிய விளக்கத்தையும் பாவாணர் அளிக்க வில்லை. சுமேரியரின் நகரிய நாகரிகம் பாபிலோன் நாட்டில் சிறப்புற்றிருந்த செய்தியாலும், சுமேரியர் தமிழரே என்ற முடிவாலும், தமிழ்ச்சூழலில் அறியப்படும் தெய்வமாக யா இருப்பதாலும், அத்தெய்வம் கடலைச் சார்ந்த நீருக்குத் தெய்வ மாக இருப்பதாலும், தமிழிலக்கியங்கள் கூறும் யா என்ற சொல், நீரைக் குறித்ததே என அறியலாம். தமிழகத்தில் தொன்மைக் காலத்தில் வழக்கிலிருந்த யா என்ற நீரைக் குறித்த சொல், தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கிழந்து போய் விட்டது எனக் கருதலாம்.

தமிழ்நாட்டில் வழக்கிழந்து போன பல சொற்கள் சிந்து வெளியில் காணப்படுவதாக முனைவர், இரா. மதிவாணன் குறிப்பிடுகின்றார்.[241] எடுத்துக்காட்டாக, அவ்வை என்ற பெண்பாற்பெயருக்கான ஆண்பாற்பெயர் தமிழில் அறியப் படாத நிலையில், சிந்துவெளியில் அவ்வன் என்ற பெயர் காணப்படுகிறது. சூத்திரன் என்பது வடமொழிச் சொல்லோ என அறியப்பட்ட நிலையில், சமற்கிருதம் என்ற மொழி தோன்றுவதற்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே, சுமேரிய

மொழியில் அச்சொல் காணப்படுகின்றது.[242] சாத்து என்ற தமிழ்ச் சொல், ஏழு என்ற எண்ணைக் குறித்ததாக எபிரேய மொழி கூறுகிறது.[243] ஆனால் சாத்து என்ற சொல், எண் ஏழைக் குறித்த தற்கானச் சான்றுகள் தமிழகத்தில் ஒன்று கூடக் கிடைக்க வில்லை. சுன்னத் செய்துகொள்ளும் வழக்கு பற்றிய ஆரலோத்து (Araloth) என்ற எபிரேயச் சொல்லைப் பிரித்துப் பார்த்தால் அது ஆரல் + ஊத்தை என்ற இருதமிழ்ச் சொற்களின் திரிபு களாகவே காணப்படுகின்றது.[244] இப்படியொரு சொல் தமிழகத்தில் இருந்திருக்கவில்லையென்பது தெளிவு. இப்படி பல எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். அந்த அளவில் யா என்ற தமிழ்ச்சொல், தமிழகத்தில் நீரைக்குறித்துச் சொல்லப்பட்டதே என்பதை எகிப்தியச் சொற்களும் உறுதி செய்கின்றன.

எகிப்திய மொழியில் கடலுக்கு, யாம் (Yam) என்ற சொல் காணப்படுகிறது.[245]இதனை யம் என்றும் கூட ஒலிக்கலாம். செங்கடலை, எகிப்திய மொழி யம் சப் (Yam sup) என்று கூறுகிறது. ஃபோனிசிய, கனனிய மொழிச் சொற்களும் யம் (Yam) என்றே கடலைச் சுட்டுகின்றன. யம் சப் என்ற சொல் லிலுள்ள சப் என்ற சொல், செப்பு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. செப்பு = செம்மை, சிவப்பு என்றும் பொருள்படும். சிவப்பு என்ற சொல்லும் கூட சப் எனத் திரிபு பட்டிருக்கலாம். கிரேக்க மொழி, எரிதிரை (Erithrea) எனக் கூறுகிறது.[246] எரி = சிவந்த நெருப்பு அல்லது சிவப்பு. திரை = கடல் எரிதிரை என்ற தமிழ்ச் சொல்லே, எரித்திரிய என்று கிரேக்கத்தில் திரிந்துள் ளதை நோக்குக.

யா என்ற தொன்மைக் காலத்தமிழ்ச் சொல், தனது வளர்ச்சியில் யா - ய - யம் - அயம் என மாறியிருக்க வேண்டும். அயம் என்ற தமிழ்ச் சொல், ஏரி கடல் போன்ற நீர் நிலைகளை விளக்குவதை நோக்குக. அயம் என்ற சொல்லின் அ விடுபட்டுப் போன நிலையில், யம் என்ற ஈற்று எழுத்துக்களே, எகிப்திய மொழியில் யம் என்றும் சொல்லப்பட்டிருக்கலாம்.

யா என்ற நீரைக்குறித்த தமிழ்ச் சொல், பாபிலோனிய, சுமேரிய, கனானிய, ஃபோனிசிய, எகிப்திய மொழிகளில் காணப் படுவதாலும், இந்நாடுகளில் குடியமர்ந்தோர் தொன்மைக் காலத் தமிழர்களே என்பதாலும், யா என்ற நீரைக் குறித்த சொல், தொன்மைக் காலத்தில் வழக்கிலிருந்து தொல்காப்பியம் காலத்திலேயே வழக்கிழந்து போயிற்று என அறியலாம்.

அயன்வெள் ஆம்பல் அம்பகை நெறிதழை – குறுந்தொகை[247]

அயம் வெள் ஆம்பல் = நீரில் வளர்ந்த வெள்ளாம்பல்

அயம் = நீர், குளம், ஏரி என்று வின்ஸ்லோ அகரமுதலியும்,[248]

அயம் = குளம், நீர் எனச் சதுரகராதியும் பொருள் கூறுகின்றன.[249]

யா என்பது,

கருமையைக் குறித்த தமிழ்ச் சொல் என்றும்,

நீரைக் குறித்த தமிழ்ச் சொல் என்றும்,

தெளிவடைதலைப்போல, திசையைக் குறித்தும் யா சொல்லப்பட்டது.

யாத்திசை என்பது தென்திசையே என அடுத்துப் பார்க்கலாம்.

நிலநடுக்கோடு, ஞாலத்தை இரு கூறுகளாகப் பிரிக்கின்றது. அக்கோட்டுக்குத் தெற்கே குமரிக்கண்டம் நிலைபெற்றிருந்தது. கி.மு. 20000 ஆண்டுகளில் குமரிக்கண்டம் பொலிவுற்றிருந்தது. அக்காலத்தில் இமயமலையோ, வங்க அரபுக் கடல்களோ அமைந்திருக்கவில்லை. இக்காலத்து இந்தியப் பேராழியே குமரிக் கண்ட நிலப்பகுதியாயிருந்தது. யா அகம் என்கிற யாவகம் முதல் ஆப்பிரிக்கா வரையில் ஒரு நிலப்பகுதியாகவே அமைந் திருந்தது. மரஞ்செடி கொடிகளும், விலங்குகளும், உயிரினங் களும், மாந்தவினமும் இயற்கையாய் வளர்ச்சி யடைய (Evolution), குமரிக் கண்டத்தின் இயற்கைச் சூழல் ஏற்புடைய தாயிருந்தன.

பரந்து விரிந்திருந்த குமரிக் கண்டத்தில் தமிழ்மொழி மட்டுமே பேசப்பட்டது. தமிழரைத் தவிர மற்றவர் அங்கே வாழ்ந்திருக்கவில்லை. கி.மு. 20000 ஆண்டுகளில், நாகரிகப் பண்பாட்டு மக்களாய்த் தமிழர் பொலிவுற்றிருந்தனர். கி.மு. 18000 முதல் 12000 ஆண்டுகள் இடைவெளிகளில், பெரியதும் சிறியதுமாகப் பல கடல் கோள்கள் நிகழ்வுற்றன என்று புவியியலார் கூறுகின்றனர். முதல் கடல்கோளின் போது முதல் தமிழ்க் கழகமும் இரண்டாவது கடல் கோளின் போது இரண் டாவது தமிழ் கழகமும் அழிந்து போனது என்றெல்லாம் கூற

இயலாது. தொடர்ந்து நிகழ்வுற்ற கடல் கோள்களால், குமரிக் கண்டத்தின் நிலப்பரப்பு குறைந்துகொண்டே வந்தது. இறுதியாக, கி.மு. 12000 ஆண்டுகளில் ஏற்பட்ட கடல்கோளே மிகப் பெரியது என்று புவியியலாளர் கருதுகின்றனர்.

வளி மண்டலத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் (ஓசோன் திரை கிழிந்து போனதாகத் தற்கால அறிவியல் கூறுகிறது.) வடதென் முனைப் பனிப் பாளங்கள் உருகத் தொடங்கின இதன்விளைவாக, கடல்நீரின் உயரம் 400 அடிவரையிலும் மேல்நோக்கியது. இப்பேரழிவினால், குமரிக்கண்டம் முற்றிலுமான அழிந்து போயிற்று. இலக்கக்கணக்கான தமிழர்கள் மாண்டு போயினர். தப்பிப்பிழைத்த மக்கள், நிலம் கண்ட விடத்தே குடியேறினர். மறைந்துபோன தமிழர்களோடு, அவர்களது இலக்கியச் செல்வங்களும் வரலாறும் கூட மறைந்து போயின. தப்பிப்பிழைத்த தமிழர்களின் குடியேற்ற நாடுகளாக, சிந்துவெளியும் பாபிலோனும் சிறப்பாக அறியப்பட்டுள்ளன. இவ்வெள்ளத்தின் நிகழ்வுகளைப் பல்வேறு நாடுகளும், அதன் சமயங்களும் தத்தம் பார்வையில் கூறுகின்றன. தற்காலத்திய தமிழகம் குமரிக் கண்டத்தில் வடபகுதியாக இருந்தது எனலாம்.

யா என்ற தமிழ்ச் சொல் நீரைக் குறித்ததாலும் நீரினாலேயே குமரிக்கண்டம் அழிந்துபட்டதாலும், அக்கண்டம் நிலை பெற்றிருந்த தென்திசையை யாத்திசை என்றே தமிழர் வழங்குவாராயினர். தென்திசையில் மாண்டு போன தமிழர்களை, அவர் வழிவந்தோர், தென்புலத்தார் என்றே அழைத்தனர். இவ்வழிவு பெரும்பாலும் புரட்டாசித் திங்களில் நிகழ்வுற்றிருக்க வேண்டும். புரட்டாசித் திங்களில் வரும் கார்உவா நாளில், மாண்டுபோன தமது முன்னோரை நினைத்து, தமிழர்கள் நினைவுநாள் கடைப்பிடித்திருக்க வேண்டும். இவ்வழக்குத் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, தமிழர் குடியேறிய நாடுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டது. என்று கருதுவது சரியான கண்ணோட்டமாகும். சிந்து வெளியில் கடைப்பிடிக்கப்பட்ட நினைவு நாள் பற்றிய செய்திகளை ஆரியர் அறிந்து கொண்டு, அவர்களும் நினைவு நாள் வழக்கைக் கைக் கொண்டனர்.

ஆரியர்கள் இந்நினைவு நாள் பற்றிக் கூறும் தகவல்கள் யாவும், ஆரியர்களுக்கு எவ்வகையிலும் தொடர்பில்லாதவை. ஆரியச் செய்திகளின்படி,

1. ஆரியர்களின் முன்னோர், தெற்கேயிருந்த நாட்டில் வாழ்ந்திருந்து மகாளய அமாவாசை நாளில் இறந்து போயினர்.
2. மாண்டு போன ஆரியரின் முன்னோர், மிகச்சிறந்த அறிவர்களாயிருந்தனர். வானியல், கணிதம் போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.
3. ஆண்டுக்கொரு முறை அவர்களை நினைவு கூர்ந்தால், அவர்களது அறிவு, ஆரியருக்கும் கிட்டும் என்று நம்பினர்.
4. மாண்டு போனவர்களைப் பிதிர்கள் என்று ஆரியர் அழைத்தனர்.

மேற்கண்ட செய்திகள், தமிழர்களின் முன்னோர்களுக்கே பொருந்துவதாக உள்ளன. ஆரியர் இச்செய்தியைக் கூறிய காலத்தே, அவர்கள் விந்திய மலையைக் கடந்து தென்னிந்தியாவுக்குள் நுழையவேயில்லை. தென்திசைக்கும் ஆரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இறந்து பட்டவர்கள் அறிவாளிகள் எனச் சுட்டுவது, தமிழ்க் கணியர்களையே என்பது சொல்லாமலேயே விளங்கும். புரட்டாசித் திங்கள் மாளய அமாவாசை நாளை நினைவு நாளாகக் கருதினர் என்ற செய்தியும் கூடத் தமிழர் கடைப்பிடித்த வழக்காகும். மாளய என்ற வடசொல்லும் கூட, மாளல் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே எனக் கருதலாம். இன்றைக்கு அறியப்படும் மாலத்தீவு (Maldives), மாளல்தீவு என்றே அழைக்கப்பட்டிருக்கவேண்டும்.

மாலை போல் அமைந்திருந்த தீவு என்ற கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. தமிழர்கள், தென்புலத்தார்க்குக் கடனிறுத்தல் என்ற கடமையைக் கடைப்பிடித்து வந்த செய்தி இலக்கியங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது.

> தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
> பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும். புறநானூறு.[250]

மாண்டு போன தமிழர்களின் மக்கள் தொகை குறைந்து பட்டதால், தென்புலத்தார் நினைவு நாளில், பிள்ளைகளைப் பெற்றெடுப்பது என்பது, இழப்பை ஈடுசெய்யும் வகையில் அமைந்திருந்தது. அதற்காகவே ஒவ்வொருவரும் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை – திருக்குறள்.[251]

மேற்கண்ட செய்திகளின்படி தமிழர் தம் முன்னோர் பற்றிய நினைவு நாளை, தமது கடன்களில் ஒன்றாகவே கருதி வந்தனர் என்பதே அறியலாம். இச் செய்திகளுக்கெல்லாம். தொடர்பே யில்லாத ஆரியரும், தன்முன்னோர், பற்றிய நினைவு நாளைக் கொண்டாடுவதாகக் கூறிக்கொண்டனர். இறந்து பட்ட தமது முன்னோர்களைப் பிதிர்கள் (ptrs) எனவும் அழைத்துக் கொண் டனர். நாடோடிகளாய் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு நாளொரு இடமும் பொழுதொரு புல்வெளி யுமாகப் போய்க் கொண்டிருந்த ஆரியருக்கு, இவ்வாறான நினைவுநாள் கடைப் பிடிக்கும் வழக்கு என்றுமேயிருந்ததில்லை.

சிந்துவெளியில் குடியேறிய ஆரியர், அம்மக்கள் ஆண்டுக் கொருமுறை, தமது முன்னோர்களை நினைவு கொண்ட நிகழ்வைக் கண்டு, தாமும் அவ்வாறே செய்யமுற்பட்டனர் என்பதும், பிதிர்கள் பற்றி ஆரியர்கூறும் செய்திகள், அச்செய்தி களை அவர்கள் சிந்துவெளி மக்களிடமே தெரிந்து கொண் டனர் என்பதை உறுதி செய்கின்றன. அடையைத் தட்டிய ஒருவனைப் பார்த்துத் தனது தொடையைத் தட்டிக் கொண்ட கதைதான், ஆரியரின் செய்திகளாகும்.

பிதிர்கள் - பிதிர் என்ற வடசொல்லும்கூட, போத்து என்ற தமிழ்ச் செல்லின் திரிபாகவே உள்ளது. போத்து என்ற தமிழ்ச் சொல் இன்று வழக்கிழந்து விட்டது என்றாலும், ஆண்மையை விளக்கும் சொல்லாகவே அது அறியப்படுகின்றது. போத்து இன்றி மக்கள் பெருக்கம் இல்லை என்பதால், போத்து என்பது தந்தையைக் குறித்த தமிழ்ச்சொல்லே எனலாம். போத்து என் பதே பித்த - பித்ரு - பிதா என்றவாறு வடமொழியில் திரிந்தது.

போத்து (தமிழ்) - பிதா (வடமொழி) - பாத்தெர் (இலத்தீன்) -ஃபாதர் (ஆங்கிலம்)

பிதிர்களின் திசை தென்திசையே என்று ஆரியச் சமயம் கூறுகிறது.[252] இது குமரிக்கண்டத்தைக் குறித்ததே. ஆரியர்கள் பிதிர்கள் பற்றிப் புதுப்புது கதைகளைப் பிற்காலத்தில் புனைந்து கொண்டனர். அக்கதைகளும் கூடத் தமிழ்ச் சூழல்களின் அடிப்படையில் சொல்லப்பட்டவைகளே. குமரிக் கண்டத்தி

லிருந்து தப்பிப்பிழைத்த தமிழர்கள், தமது முன்னோர்கள் மாண்டு போனபின்பு மறுஉலகில் வாழ்வதாகக் கருதியதின் அடிப்படையில், தமது தெய்வமான சிவனிடம் இறந்துபோன தமது முன்னோரைக் காக்கவேண்டி முறையிட்டனர். சிவனும் தமது மக்களின் கோரிக்கையை ஏற்று, யாமன் என்பானை தென்திசைக்கு மன்னனாகப் பணித்தான்.

தென்திசைக்கு வேந்தன் சிவனே என்பது வெள்ளிடை மலை. அவனே தமிழரின் தனிப்பெருங் கடவுளாவான். தனது ஆளுகைக்குட்பட்ட பகுதியில் நிகழ்வுற்ற கொடும்பாழுக்கு இலக்கான தம் மக்களை எண்ணி, யாமன் என்ற தனது பணியாளைச் சிவன் பணித்தான் எனச் செய்திகள் கூறுகின்றன.

தென்பாண்டி நாடே சிவ உலகம்
பாண்டி நாடே பழம்பதி — மணிமொழியார் திருமொழி

முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி — அப்பர்
சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு —ஔவையார்.

என்று சிவபெருமானின் பெருமைகளைத் தென்குமரி நாட்டுடன் இணைத்தே புலவர் பாடினர்.

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைத் தும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனாங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே —கடவுள் வாழ்த்து.[253]

திருமந்திரம் கூறும் இச்செய்தியால், தென்திசையிலுள்ள யாமபுரத்துக்கு, ஒப்பற்ற மன்னனாக யாமனைப் பணித்த செய்தி அறியக்கிடக்கின்றது.

யாமன், தென்திசையில், நீரால் அழிந்துபட்ட நிலப் பகுதியில் மாண்டோருக்குத் தலைவனாகப் பணிக்கப்பட்டான். என்பதே முதல் செய்தியாதலால், அவன் என்ன நிறத்தில் இருந்தான் என்பது அடுத்து சிந்திக்கக் கூடியதேயன்றி, நிறம் முதற்செய்தியல்ல என்பது தெளிவு. யா என்பது நீரைக் குறித்தது என்பதே முதல் செய்தி. அதற்கானச் சான்றுகள் தமிழிலும் தமிழினின்று கிளைத்தல் பிற மொழிகளிலும் உள்ளன.

நீரால் அழிந்து போன குமரிக்கண்டம் இருந்த நீர்த்திசை - யாத்திசை எனப்பட்டது. இரண்டாவது நிலையாகும். யா

என்பது திசையைக் குறித்தது. நீர் என்ற முதற்பொருளை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்பட்டதே.

யாமன் அத்திசையிலிருந்த உலகிற்கு மன்னனாகப் பணிக்கப் பட்டான் என்ற செய்தி மூன்றாவது நிலையாகும். இது, யா - நீர், யா - திசை என்ற இரு பொருள் அடிப்படையிலும் சொல்லப்பட்டதே.

நீரில் மூழ்கிப்போன இடம் இருண்டு காணப்பட்டதும், மறுஉலகை இருட்டுலகம் என நம்பியதன் அடிப்படையிலும், யா என்ற சொல் இருள், கருமை என்ற பொருளிலும் நீண்டது.

இருட்டைக் குறிக்க யாமம் என்ற சொல் மட்டுமே தமிழில் இருந்திருந்தால், யா என்ற சொல் இருட்டைக் குறித்ததே எனத் துணியலாம். ஆனால் இருட்டை விளக்க ஏராளமான சொற்கள் தமிழில் ஏற்கனவே உள்ளனவென்பதால், யாமன் என்ற சொல், முதலில் நீரைக் குறித்தும், பின்னர் அவன் ஆண்ட திசையைக் குறித்தும், மூன்றாவதாக கருமையைக் குறித்தும் சொல்லப் பட்டன என்பதே உண்மையாகும். யா என்ற சொல்லினின்று நீண்டு யாமம் என்ற சொல் தோன்றவில்லை. யா - யாமன் என்று நீரையும் திசையையும் குறித்த சொல்லாகவே முதலில் உணரப்பட்டது. யாமன் வரும்பொழுது யாமம் என்று அறியப் பட்டது. யாமம் என்ற இருட்டைக் குறித்த சொல் பிற்காலச் சொல்லே.

பொதுவாக இறந்தோர், ஆவிகள் எல்லாம் கரிய நிறம் கொண்டவை என்ற நம்பிக்கை, தமிழர்களிடம் மட்டுமல்லாமல், உலகின் அனைத்து சமயங்களிலும் காணப்படுவதால், இறந் தோரின் தலைவன் கரிய நிறமாகவே இருப்பான் என்று கருதப் பட்டது. அவன் கறுப்பன் என்பதால், அவன் ஊர்ந்து வரும் விலங்கான எருமையும் கருமை நிறமாகவே சொல்லப்பட்டது. எருமை, யாமனுக்கு ஊர்தியாகக் கருதப்படு முன்னரே கருமை யாகத்தானிருந்தது. இரு + மெய் என்ற சொற்களே எருமை என நீண்டன. இருட்டான அல்லது கரிய உடலைக் கொண்ட விலங்கு என்பதே இதன் பொருளாகும்.

மாந்தர் பயணம் மேற்கொள்ள ஊர்தி தேவைப்பட்ட அடிப்படையில், கடவுளுக்கும் ஏதோவோர் விலங்கை ஊர்தி யாகத் தமிழர் கற்பித்துக் கொண்டனர். இவ்வாறு கடவுளருக்கும் கற்பித்துச் சொல்லப்பட்ட விலங்குகள் யாவும்

தமிழ்நாட்டில் அறியப்பட்டனவே எனலாம். ஒட்டகத்தைத் தமிழர் எந்தக் கடவுளுக்கும் ஊர்தியாகக் கூறவில்லை. காளையும், மயிலும் எருமையும், அரிமாவும் என்று தமிழ்நாட்டு விலங்குகள் தமிழர்தம் கடவுளுக்கும் ஊர்திகளாகச் சொல்லப்பட்டன.

யா என்ற தமிழ்ச் சொல், கருமையைக் குறித்து எழுந்த முதற்சொல்லே எனக் கூற இயலாது. யா என்பது முதற்பொரு ளாக நீரை உணர்த்தியது என்பதால், நீர் என்ற சொல் பிற்காலத்தில் நீண்டு கருமையையும் குறித்தது.

நீர் - நீல் = இன்றும் தெலுங்கில் நீல் என்ற சொல்லே நீரைக் குறிக்கின்றது.

நீர் - நீல் - நீல = நீலம் என்ற வண்ணம் ஒரு வண்ணமே யல்ல என்பதும், கருமையுடன் வெண்மை கலப்பதே நீலம் என்றும் கருதப்படும். நீலம் என்ற நிறமும் கருமையைக் குறித்ததே. கார் வண்ணனான கண்ணனை, நீல வண்ணத்திலும் காண்பது பற்றி சிந்திக்கவும்.

நீர் - நீல் என்ற அடிப்படையில் சொல்லப்பட்ட ஆறே, எகிப்தில் அறியப்படும் நீலாறு ஆகும். அது நீல் என்றே அழைக்கப்பட்டு, பிற்காலத்தில் Nile எனப்பட்டது.

நீலாற்றை ஆய்வு செய்த புவியியலார், நடு ஆப்பிரிக்கப் பனிமலையில் தோன்றும் நீலாறு, எகிப்தின் எல்லையைத் தொடும் வரையில் வெள்ளை நிறமாகவும் (White Nile) எகிப்தில் நீல நிறமாகவும் (Blue Nile) காட்சியளிப்பதாகக் கூறுகின்றனர்.

நீர் - நீல் - நீல - நீலம் ஆகிய சொற்கள் யாவும் தமிழ்மூலச் சொற்களினின்றும் நீண்டவைகளே.

யா என்பதை நீர் எனக் கொண்டால், அச்சொல்லின் நீட்சியும் கருமையைக் குறிப்பதைக் காணும்போது, கருமை நிறத்துக்கும் மூலமாயிருப்பது யா என்ற நீரே எனத் தெளியலாம்.

யா வென்பது நீரை முதலாவதாகவும்
யா வென்பது திசையை இரண்டாவதாகவும்
யா வென்பது கருமையை மூன்றாவதாகவும்

கொண்டு சொல்லப்பட்ட தமிழ்ச் சொற்களே என்பதால், யா = நீர், திசை கருமை என்ற மூன்று பொருளிலும் உணரப் படும் என்பது தெளிவு.

சதுரகராதியில், யா என்ற சொல்லுக்கு மேற்கண்ட மூன்று பொருளையும் வீரமாமுனிவர் கூறவில்லை. மாறாக, யா என்பதை ஒரு மரம் என்று கூறுகிறார். யாமம் என்ற சொல்லைத் தெற்கு எனத் தெளிவாகக் காட்டுகிறார்.[254]

யாமம் = இராத்திரி, சாமம், தெற்கு.
யாமாவதி = இராத்திரி
யாமளை = காளி
யாமினியம் = தெற்கு.

யாம என்று தொடங்கும் சொற்களை தெற்கு, இருள் என்ற பொருளில் கூறுகிறார். தெற்கும் இருளும் எம்மூலச் சொல்லினின்று தோன்றியவை என்பதற்கான விளக்கம் சதுரகராதியில் இல்லை. மேற்சொல்லப்பட்ட, நீர் - திசை - கருமை என்ற பொருளில் நீரைவிடுத்த மற்ற இருபொருளும் சதுரகராதியில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

வின்ஸ்லோ தமிழ் ஆங்கில அகர முதலி,[255]
யாமம் = தெற்கு, சாமம், திக்குப் பாலகர்
யாமியம் = தெற்கு
யாமினி = இரவு
யாமினியம் = தெற்கு

என்றவாறு பொருளுரைக்கின்றது.

யாமம், யாமினி, யாமினியம், யாமியம் போன்ற சொற்கள் தெற்கு எனப் பொருள் கூறப்பட்டாலும், அவை யாமன் என்ற தென்திசை வேந்தனைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளே எனலாம்.

யாமன் என்ற மூலச் சொல்லை, தமிழ் இலக்கியங்கள் எவையும் குறிப்பிடவில்லை. யமன் என்றும், ஞமன் என்றும், நமன் என்றும் அவை குறிப்பிடுகின்றன. யாமன் என்பதே மூலச் சொல் என்பதைத் தமிழ்ப் புலவர்கள் அறிந்திருக்கவில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது. யாமன் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு வடமொழிச் சொல்லான யமா என்ற சொல்லையே பலரும் மூலச் சொல்லாகக் கருதிக் கொண்டு, அதனைத் தமிழ் முறைப்படி ஞமன் என்றவாறு குறித்தனர்.

யமா என்ற இறப்புக் கடவுள் பற்றி ஆரியர் கூறும் செய்திகளாவன:[256]

"வேத காலத்தில் யமன் சிறப்பானதொரு கடவுளாகக் கருதப்பட்டான். இவ்வுலகில் முதன்முதல் இறந்தவன் யமனே என்பதால், இறந்தோரின் கடவுளாகக் கருதப்படுகிறான். இக்கருத்தின்படி முதலில் உலகில் பிறந்தவனும் யமனேயாவான். ஆதலால், இறந்தோர் உலகை வழிநடத்தும் பொறுப்பு யமனிடம் கொடுக்கப்பட்டது. ஒருயிர் இறந்து போன 4 மணி 40 நிமிடங்களுக்குள், யமனிடம் போய்ச் சேருகின்றது. அவ்வுயிரைத் தனது அவையின் முன்பாக நிறுத்தி, அவ்வுயிர் உலகில் வாழ்ந்திருந்த போது செய்த நம்மைகளையும் குற்றங்களையும் பற்றி ஆய்வு செய்கிறான். அவை, சித்திரகுப்தன் என்ற பதிவாளன், வைத்திருக்கும் சுவடியில் எழுதப்பட்டுள்ளன. சித்திரகுப்தன் அவைகளைப் படித்தபின், யமன் தன்னிடமுள்ள அளவு கோலால் நன்மை தீமைகளின் எடையைப் பார்த்து, நல்லவை கூடியிருப்பின் சுவர்க்கத்துக்கும் அல்லவை கூடியிருப்பின் நரகத்துக்கும் அனுப்பி வைக்கின்றான். சந்தர், மகா சந்தா என்ற இரு அமைச்சர்கள் யாமனுக்கு உறுதுணையாகப் பணியாற்றுகின்றனர். யமனுக்குப் பல்வேறு பணியாட்கள் உண்டு. அவர்கள் யாவரும் சிவந்த கண்களுடனும், காக்கை மூக்குகளுடனும், தொங்கும் மயிர்க்கற்றையுடனும் காக்கையின் கால்களுடனும், கரிய வண்ண ஆடையுடனும் காட்சியளிப்பர்.

யமன், தெக்ஷன் என்பானின் பத்து மகளிரையும் மணந்தவனாவான். இவனுடைய மனைவியரில் குறிப்பிடப்படுபவர்கள் ஹேமமாலா, சுசீலா, விஜயா, ஆகியோராவர். இவன் நடுநிலை தவறாதவர் என்பதால், தர்மராஜா என்று அழைக்கப் படுகிறான். எண் திசைகளில் தென்திசைக்குத் தலைவனாக யமன் இருகிறான். சில குறிப்புகளில் பாண்டவருக்குத் தந்தையாகவும் வேறு சிலவற்றில் தர்மனுக்கு அண்ணனாகவும் சொல்லப் படுகின்றான்.

யாமனைப் பற்றி ஆரியர் சொல்லும் செய்திகள் யாவும் தமிழ்ச் சூழலை யுடையதாகவே காணப்படுகின்றன. தெக்கன் என்பான் (தென்கித்தியான்) தமிழனே என்பதும், அவன் மகள் பதின்மரை யாமன் மணந்ததும் தென்னிலத்துக்கு (தெக்ஷன் லோக பாலா)த் தலைவனாக இருப்பதும், முதலில் தோன்றிய

மாந்தன் யாமனே என்ற கருத்து, தமிழனே மாந்த இனத்தில் முதல் குடியினர் என்பதும், ஆரியச் செய்திகளிலேயே காணப் படுகின்றன.

யாத்திரேலியா என்று வழங்கப்பட்ட ஆஸ்திரேலியா என்ற சொல்லிலுள்ள, Auster என்ற சொல்லுக்கு, தெற்கு என்றே பொருள் கொள்கின்றனர்.

Austral = Southern. இது யாத்திரை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே ஆகும்.

யாத்திரை = தென்கடல்

வடநாட்டிலிருந்து தென்நாட்டிற்குக் குறிப்பாகத் தமிழகம் வந்த ஆரியர், தமிழகத்தைக் கடல் நாடு என்றே அழைத்தனர். த்ர (வடமொழி) என்ற சொல், தமிழகத்தின் கடற்கரைப் பகுதி களைக் குறித்ததாக வடவிலக்கியங்கள் கூறுகின்றன. த்ர என்ற வடசொல், தரை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. கடற்கரைப் பகுதிகளைக் குறித்த த்ர என்ற சொல், பிறகு தென்னிந்தியா வையும் சுட்டியது. அதன்வழி பிறந்த சொல்லே த்ரவிட் (திராவிட) என்ற சொல்லாகும். ஆரியர்கள் தென்னாட்டுப் பயணத்தை, யாத்ர என்றே கூறினர். யா என்பது தெற்கையும், த்ர என்பது தென்னாட்டையும் குறித்தன. இச்சொல்லைத் தமிழில் யாத்திரை எனக் கூறினர்.

யாஅகம் என்ற தீவு, தென்திசையில் இருந்ததால், அது யாவகம் எனப்பட்டு, பிறகு சாவகம் என்றாகி, இறுதியில் ஜாவா (Java) என்று நிலைத்தது.

யா = தெற்கு, அகம் = நாடு யாவகம் = தென்னாடு.

கிரேக்க மொழியில் – யா

நோவா என்பான், குமரிக் கண்டத்தினின்றும் தப்பிப் பிழைத்தத் தமிழனே என்று ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. அவன் நாவாயன் அல்லது நாவாய்க்காரன் என்ற கரணியப் பெயராலேயே அழைக்கப்பட்டான். அவனது மூன்று மகன் களின், கடைமகன் பெயர், யா - பெத் (Ya - pet) என்று எபிரேய மொழியில் சொல்லப்பபட்டுள்ளது. அவ்விரு சொற்களுக்கான பொருளும் தனித்தனியே விளக்கப்பட்டுள்ளன. பெத் (pet) என்ற சொல் பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

பள் - படு - படி - பட்டி என்றவாறு ஊரைக் குறித்தது. pet[256]என்ற சொல்லே Beth எனவும் நீண்டு, அது வீட்டைக் குறித்தது. பற்றியும் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

யா -பெத் என்ற சொல்லுக்கு, தெற்கேயிருந்த ஊரினன் என்றவாறும், தெற்கில் குடியிருந்தவன் என்றும் பொருள் கொள்ளலாம். நோவாவைப் போன்று, யா - பெத் என்பதும் கரணியப் பெயரே எனலாம்.

யா - பெத் என்பானுக்கு ஏழு மகன்கள் பிறந்ததாக விவிலியம் கூறுகிறது.[257] இவர்கள் அனைவரும் கருங்கடலை யொட்டிய பகுதிகளில் சென்று குடியமர்ந்தனர் என்று விவிலியம் கூறுகிறது. இவர்களே, இந்தியா - ஐரோப்பிய மரபு வழியினர் என்று அறியப்படுகின்றனர்.[258] (The principles of the grouping of peoples under the sons of Noah are geographical; peoples who live in adjoing lands and who speak cognate languages are grouped to gether Thus the sons of Yapet are Indo - European, the sons of Shem *First son of Noah) are Semite (which is retained by modern ethnology), and the sons of Ham (Second son of Noah) are Hamitic, i.e, African The Motives for exceptions in three groupings are historical and geographical)

இந்த ஏழு மக்களும் கருங்கடலைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடியேறினர் என்ற செய்தியில், நான்காம் மகனான யாவன் (Yavan) என்பான் கிரேக்கநாட்டில் குடியேறியாத விவிலியக் குறிப்புகள் கூறுகின்றன. எபிரேய மொழியில் சொல்லப்பட்ட யாவன் என்ற பெயர், கிரேக்க மொழியில் பிற்காலத்தில் இயோன், (Ion) என்று திரிபு[259] பட்டது. இச்சொல்லைக்கொண்டே, சின்ன ஆசியாவின் (Asia Minor) மேற்குப் பகுதியில் உள்ளவை, இயோனியன் பெருநகரங்கள் (Ionian cities) என்றும், கிரேக்கத் துக்குக் கிழக்கேயுள்ள கடல், இயோனியன் கடல் என்றும் அழைக்கப் பட்டன.

Yavan: son of Yapet (Gn. 10:2; 4:1) As a geographical name it designates the Greek colnies of the west coast of Asia Minor continental Greece and the Greco - Macedonian Kingdom.

யாவன் என்ற சொல் புவியியல் தொடர்பான (திசை பெயரே என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளதை நோக்குக.[260] யாவன் என்ற சொல் தனித்தமிழ்ச் சொல்லாயிருப்பதாலும்,

அது தென்திசையைக் குறித்தச் சொல்லாயிருப்பதாலும், யாவன் தென்திசையிலிருந்து வந்தவன் என்பதை அறியலாம். யாவன் என்ற தமிழ்ச் சொல், தமிழ்நாட்டிலும் அறியப்படவில்லை என்பதே உண்மை நிலையாகும். யாவனின் வழிவந்த மக்களே கிரேக்கர்கள் என வரலாறு கூறுவதால், கிரேக்கர்களை யாவனர்கள் என்றே வரலாறு கூறுகிறது.

யாவனர்கள் கிரேக்கர்களே என்று தெளிவுபடுத்தப்பட்டிருக்கையில் தமிழ்நாட்டைச் சார்ந்த பலர், யாவனர் முகமதியர் என்றும், அரபு வணிகர் என்றும் தவறாகக்கூறினர். தமிழ் இலக்கியங்கள், யாவன் - யாவனர் என்பதைத் தமிழ்ச்சொல் என்று அறியாமல், அவர்களை யவனர் என்று, தவறாக அழைத்தன. தொல்காப்பிய விதிப்படி, யாவன் என்றவாறு அத்தமிழ்ச்சொல் அமைந்திருக்க, அச்சொல்லை வேற்று மொழிச் சொல் எனத் தவறாகக் கருதி, யவனர் என்று எழுதினர். இன்னும் சிலர், தொல்காப்பியருடைய இலக்கணவிதி, கடைக் கழகக் காலத்தில் மீறப்பட்டு, யகர ஒற்றை முன்வைத்து யவனர் என எழுதப்பட்டதாகவும் கூறினர். கடைக்கழகப் புலவர் களுக்கு யாவனர் தமிழ் மரபில் வந்தவரே என்று உண்மை தெரிந்திருக்க வாய்ப்பில்லையென்பதால், யவனர் வேற்று மொழிச் சொல் எனச் கருதிவிட்டனர்.

யா என்ற முதற் சொல்லின் நீண்ட யாமன் என்ற சொல்லைவிட, யாவன் என்ற சொல்லே சரியானதும் சிறப் புடையதுமாகும். என்றாலும் யாமன் என்ற சொல் தவறான வொன்றில்லை எனலாம். யா + அவன் = யாவன் என்பது பொருந்தமானதொன்றாகும்.

கடைக்கழக இலக்கியங்கள் காட்டும் யாவனர்:

அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும் – மணிமேகலை.[261]

யவனத் தச்சரு மவந்திக் கொல்லரும் – [262]

பயறை வறியா யவனர் இருக்கையும் – சிலப்பதிகாரம்.[263]

அடல்வாள் யவனர்க் கயிராகு புக்காங்கு – சிலப்பதிகாரம்[264]

வன்சொல் யவனர் வளநா டாண்டு - சிலப்பதிகாரம்[265]

நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து - பதிற்றுப்பத்து.[266]

கிரேக்கர்கள், கிரேக்கத்தைச் சுற்றியிருந்த தீவுகளில் வாழ்ந்தோர், கருங்கடல் பகுதியில் வாழ்ந்தோர், சின்ன ஆசியாவின் மேற்குப்பகுதியிலுள்ள தீவுகளில் வாழ்ந்தோர் (செப்பரைத் தீவு என்ற தமிழ் மூலத்தைக் கொண்ட சைப்ரஸ் தீவு) இந்திய - ஐரோப்பிய மொழியைப் பேசியவர்களாக அறியப்பட்டனர். மேலை நாட்டு ஆய்வாளர்களின் மொழியினப் பகுப்புக் கொள்கையின் படி, செமிட்டிக் மொழியினம், நடுத்தரைக் கடலுக்குக் கிழக்கேயும், இந்திய ஐரோப்பிய மொழியினம் மேற்கூறிய நாடுகளிலும் பேசப்பட்டன. இவ்விரு மொழிக் குடும்பமும் தமிழ் என்ற மூலமொழியினின்று கிளைத்தவை களே எனலாம். இந்திய - ஐரோப்பிய மொழிக்கும், இந்திய - ஆரிய மொழிக்கும் (ஆரியர் இந்தியாவுக்கு வருமுன்னர் பேசிய மொழி) பல தொடர்புகள் உண்டு. ஏனெனில் இந்திய ஆரியரும், இந்திய - ஐரோப்பிய மொழி மரபினரே. மேலை ஆரியம் என்பது கிரேக்கம் உள்ளிட்ட அதன் கிளை மொழிகளையும், கீழை ஆரியம் என்பது, சமற்கிருதம் உள்ளிட்ட அதன் வழி மொழிகளையும் சுட்டுவனவாகும். இந்திய - ஐரோப்பிய மொழி யினத்தில் முதன்மையாகக் கருதப்பட்ட கிரேக்க மொழியிலேயே தமிழ்ச் சொற்கள் பொதிந்து கிடக்கின்றன. என்பது போல், இந்தியாவுக்குள் வந்த ஆரியரின் நாடோடி மொழியிலும் தமிழின் தாக்கங்கள் இருந்தன. சமற்கிருதம் என்பது. ஏற்கனவே ஆரியர் பேசிவந்த நாடோடி மொழியுடன், தமிழ் இணைந்து உருவானதே என்பது தெளிவு. ஆரியரின் மொழி தொன்மைக் காலத்தில் தமிழினின்றும் பிரிந்து, பின் இந்தியா வந்த அவர்தம் மொழி, மேலும் தமிழுடன் இணைந்து செம்மைப்படுத்தப் பட்டதால், அது சமற்கிருதமாயிற்று.

இந்திய ஆரியத்துக்கும் (சமற்கிருதத்துக்கும்) மேலை ஆரியத்துக்கும் உள்ள தொடர்பை அறிந்த செர்மானியர் போன் றோர், கி.பி. 1600 ஆண்டுகளுக்குப் பிறகு சமற்கிருதத்தைக் கற்றனர். மேலை ஆரியத்தில் கூறப்படாத செய்திகள் சமற் கிருதத்தில் காணப்பட்டன. அவை தமிழரோடு ஏற்பட்ட தொடர்பால் கிடைத்தவை என்பதை, செர்மனியர் அறிந் திருக்கவில்லை. இந்திய ஆரியத்தைத் தாங்கிப் பிடிப்பதின் வழியாக, மேலை ஆரியரான, செர்மானியரின் புகழை உலக அரங்கில் உயர்த்திக் கொள்ள, செர்மானியர் முடிவு செய்து, இந்திய ஆரியரின் புகழைப் பரப்பினர். வானவியல், கணிதம், மருத்துவம், அறிவியல், ஓகம் போன்ற துறைகளில் உலகிற்கே

முன்னோடிகளாய் இந்திய ஆரியர் விளங்கினர் என்று செர் மானியர் தவறாகக் கருதினர். மாக்சுமுல்லர் போன்ற மொழியிய லாரும், இட்லர் போன்ற ஆட்சியாளரும் செர்மானியரின் இன மரபில் பெருமைப்பட்டுக் கொண்டது. இந்திய ஆரியத்தைக் காட்டியே என்பது தெளிவு.

தற்காலத்தில் தமிழ்மொழியை ஆய்வு செய்வோரின் பார்வை, மேலை ஆரிய மொழிகளின் மீதும் திரும்பியுள்ளது. கிரேக்கம், இலத்தீன் மொழி உள்ளிட்ட ஐரோப்பிய மொழி களில் தமிழ் மொழியின் வேர்கள் தென்படுவதை உணர்ந்துள் ளனர். டாக்டர் இலகோவரி, டாக்டர் எமனோ, டாக்டர் பர்ரோ போன்ற மேல்நாட்டு மொழியியல் அறிஞர்களும் இந்திய - ஐரோப்பிய மொழிக் குடும்பம், தமிழ்மொழிக்குக் கடன் பட்டவையே என்று கருதுகோள் கொண்டனர்.

இந்தியாவுக்கு வந்த ஆரியரும், தொல்மைக்காலத்தில், தமிழ்இன வழியில் தமிழரே என்பதே பல்வேறு செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வின ஒற்றுமையின் கரணியமாகவே ஆரியர் பேசிவந்த (சமற்கிருதம் தோன்றுதற்கு முற்பட்ட மொழி) அவர்தம் நாடோடி மொழியிலேயே, தமிழ்ச் சொற்கள் காணப்பட்டன என்பது மொழியியலாரின் முடிபுகளாகும். ஆரியர்களின் உயர்வு, அவர்களது இனத்தால் வந்ததல்ல என்பதும், அது தமிழோடு அவர்கள் கொண்டிருந்த மரபு வழித் தொடர்பால் வந்ததென்றும் ஆரியர் உணருங்காலம் விரைவில் வரும் என்பது திண்ணம்.

எபிரேய மொழியில் – யா

விவிலியச் செய்தியின்படி, யாக்கோபுவின் மனைவி இராக் - எல் என்பானுக்குப் பிறந்தவனே யாமின் எனப்பட்டவனாவான். இவன் பிறந்தபோது அவன் அன்னையான இராக் - எல் என்பவள் இறந்துபோனாள். யாக்கோபுவின் மற்ற மக்கள் யாவரும், வடமெசபத்தோமியாவிலுள்ள படன் அறம் (Padan Aram) என்ற பகுதியில் பிறந்தவர்களாவர். யாமின் என்பான் மட்டுமே தென்பகுதியான பாலத்தீனத்தில் பிறந்தவனாவான். அதனால் அவனைத் தெற்கின் மகன் (Son of south) என்றும், தெற்கித்தியான் (Southerner) என்றும் அழைத்தனர்.[267] (Bin - Yamin, Hebrew word, meaning - son of the right most probably son of the south" or the southerner)

எபிரேய மூலத்தினின்று மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கில விவிலியமான The New American Bible, யாமின் என்ற சொல் லுக்கு அளிக்கும் விளக்கமாவது:[268] Bin - Yamin: son of the right hand. this may be interpreted to signify a son is his fathers help and support/ but more likely its original meaning was southerner. In the Hebrew idiom, the south lies to one's right hand and bin - Yamin was the southern most of the Rack- el tribes.

யாமின் என்ற எபிரேயச் சொல், யா (Yaw - Yah) என்ற எபிரேய மூலச்சொல்லினின்றும் பிறந்ததாகக்கூறப்படுகின்றது. யா என்ற மூலச்சொல்லினின்றும்,

யா - பெத் (Yap et) = நோவாவின் மூன்றாவது மகன்
யாவன் (Yavan) = யா -பெத் என்பானின் மகன்,
யாமின் (Yamin) = யோக்கோபுவின் மகன்,
யாகோவா (Yahweh) = யூதர்களின்கடவுள்.

ஆகிய நான்கு சொற்களும் நீண்டதாக விவிலிய ஆய்வாளர் கள் கருதுகின்றனர்.[269] இந்நான்கு பெயர்களும் விவிலியத்தில் மிகச் சிறப்பான செய்திகளைத் தெரிவிப்பனவாகும். குறிப்பாக, யாமின்-யாகோவா போன்ற சொற்கள் மிகவும் சிறப்பானவை களாகும்.

இந்நான்கு பெயர்களில், யா - பெத் சொல்லுக்கான பொருள் விளக்கப்படவில்லை. யாவன் என்ற சொல், புவியியல் தொடர்பானதொரு பெயர் என்று சொல்லப்பட்டுள்ளது. யாமின் என்ற சொல்லுக்கு, தெற்கத்தியான் என்று தெளி வாகவே பொருள் கூறப்பட்டுள்ளது. யாகோவா என்ற பெயர், தென்பகுதி மக்கள் வழிபட்ட கடவுளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இச்சொற்கள் யாவும், யா என்ற எபிரேய மூலச் சொல்லினின்றே பிறந்ததாக விவியியக் குறிப்புகள் கூறுகின்றன.

இவையின்றி Hayah; Ayah என்ற இரு சொற்களும் விவிலியத்தில் காணப்படுகின்றன. இவை ஏவாள் (Eve) என்ற முதல் தாயைக் குறிப்பனவென்று விளக்கம் கூறப்பட்டுள்ளன. இச்சொற்கள், முதலில் கூறப்பட்ட நான்கு சொற்களைப் போலன்றி, பின்னொட்டுச் சொற்களாகக் (Yah - suffix word) கூறப்பட்டுள்ளன. இவை யா என்ற மூலச் சொல்லினின்றும் பிறந்தவையல்ல என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மேலும், இச்சொற்கள் அவ்வா (Hawah) என்ற சொல்லோரும் தொடர்

புடையது என்றும், இச்சொற்கள் யாவும், எபிரேயச்சொற்கள் அல்லவென்றும், வேறு ஏதோவொரு மொழியில் சொல்லப் பட்டதை எபிரேயம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் (The name is not Hebrew and it may well be that it underwent transformation when it was adopted into the Hebrew tongue) அமெரிக்க ஆங்கில விவிலிய நூல் விளக்கம் தருகின்றது.[270]

யாமின் என்பான் தெற்குப் பகுதியில் பிறந்தவனாதலால், யாமின் என்று அழைக்கப்பட்டான் என்று விவிலியம் தெளி வாகக் கூறுகிறது. தென்திசையை வலத்திசை என்றும், வலது கை என்றும் விவிலியம் மேலும் விளக்கமளிக்கின்றது. யாக்கோபு வின் கடைமகனான யாமின் என்பான், தனது தந்தைக்கு உதவி யாக இருந்தனர் என்ற பொருளின், "யாக்கோபுவின் வலது கை" என்று அழைக்கப்படுகிறான்.

வலது - தெற்கு ஆகிய இரு சொற்களுக்கும் தமிழில்தான் முதற்பொருள் உள்ளது. தொடக்கப்பள்ளிகளில், இன்றும் கூட மாணவர்களுக்குத் திசைகள் பற்றிச் சொல்லித் தரும் போது, மாணவனை கிழக்கு முகமாக நிறுத்தி, ஆசிரியர் பின் வருமாறு கூறுவதை அறியலாம்.

கதிரவன் தோன்றும் திசை கிழக்கு - முகத்துக்கு நேராக உள்ள திசை.

கதிரவன் மறையும் திசை மேற்கு - முகத்துக்கு எதிராக உள்ள, முதுகுத் திசை.

வலது கைப்புறம் தெற்கு, இடதுகைப்புறம் வடக்கு என்பதாகும்.

இதன்மூலம் வலது திசை - தெற்கு என்று சொல்லப்படும் இதே தமிழ் வழக்கு, எபிரேய மொழியிலும் எடுத்தாளப் பட்டிருக்கிறது.

வலது என்ற தமிழ்ச்சொல், வலிமை என்ற பொருளில் கூறப்பட்டதாகும். பொதுவாக இடது கையைவிட வலதுகை வலிமையுள்ளது என்பது தெளிவு.

வல் என்ற வேர்ச் சொல்லினின்றே வலது என்ற சொல் பிறந்தது.

வல் என்ற சொல்லுக்கு வலிமை (Strength) என்பதே பொருளாகும்.

வல்-வள் என்ற சொல்லினின்றே, வளமை - வளம் - வளர் - வளி - வளை - வள்ளம் - வள்ளல் - வள்ளி - வள்ளுவன் போன்ற சொற்கள் நீண்டன. இவையாவும், உயர்வு வலிமை போன்ற பொருளை உணர்த்துவனவாகும்.

வல் - வலி: வன்மை (Strength, Force, Power)

வலி என்ற சொல், வலிமை வலிவு வலு எனவும் நீண்டது.

வல்: வல்லடி வல்லவன், வல்லமை, வல்லாண்மை, வல்லார், வல்லான், வல்லாளன், வல்லிசை என நீண்டது.

வல் - வல - வலது : ஆற்றலுள்ள வலப்பக்கம் அல்லது தென்பக்கம்.

வலக்கை : தந்தைக்கு வலது கையாய்த் தனயன் விளங்கினான். வலது கை என இங்கே சொல்லப்படுவது உதவி, ஆற்றல், என்றவாறு கொள்க.

வலது என்ற முன்னொட்டுச் சொல்லுடன் பல சொற்கள் தமிழில் உள்ளன.

வலங்கை, வலசாரி, வலஞ்சுழி, வலத்து மாடு, வலம்புரி, என்பன சிலவாகும்.

வல் - வள் என்ற இரு மூலச் சொற்களினின்று தோன்றும் தமிழ்ச்சொற்கள் யாவும், வளமை - ஆற்றல் - உயர்வு - பெருமை என்ற உயர்ந்த பொருளைத் தருவனவே. வலம் என்ற தமிழ்ச் சொல்லே, பலம் (power) என்று வடமொழியில் திரிந்தது.

வள் - வல் என்ற அளவில் வால் எனவும் நீண்டது.

வால் என்ற தமிழ்ச் சொல்லுக்கு மிக உயர்ந்த நுணுக்கமான பொருளுண்டு.

மாந்தனுக்கு வாய்போல், விலங்குகளுக்கு வாயாக வால் விளங்குகிறது. விலங்குகள் தங்கள் குறிப்பையுணர்த்த வாலையே பயன்படுத்துகின்றன. மாந்தனின் நட்பு விலங்கான நாய், தனது ஒவ்வொரு வாலசைவின் மூலமும் ஒவ்வொரு செய்தியைத் தருகின்றது. பக்கவாட்டில் வாலை ஆட்டும் போது, அது அன்பையும் நட்பையும் விளக்கும். வாலை உயர்த்திக் காட்டும் போது, ஆற்றலையும் வலிமையையுணர்த்தும். தொங்கவிட்டுக் கொண்டிருந்தால், பணிவைக்குறிக்கும். இரண்டு கால்களுக்

கிடையே வாலை நுழைத்துக் கொண்டால் அது அச்சத்தைக் குறிக்கும். இன்னும் பல செய்திகளை அறிவியலாளர் காட்டு கின்றனர்.

வல் - வால்: உயர்வு, மிகுதி, பெருமை என்றவாறு பொருளுண்டு.

வால்: குறைகளில்லாத என்ற பொருளுமுண்டு (Purity, cleaness).

வால் : உண்மையென்றவாறும் பொருள் கொள்ளலாம் (Truth)

வால் என்ற தமிழ்ச்சொல்லே, வாலா என்ற வடமொழியில் திரிந்தது.

வால் என்பது உண்மையைக் குறித்தது. போலவே, உண்மையின் உறைவிடமான இறைவனையும் குறித்தது.

வல் - வல - வால் என்றும் அறியப்படுவதால், அது தென் திசையையும் குறித்தது.

வள் - வல் - வால் - வான் எனவும் நீண்டது.

வால் என்ற சொல் இறைவனையும் சுட்டியது பற்றியே, திருவள்ளுவரும் இறைவனை

வாலறிவன் என்று போற்றுகிறார்.[271]

வால் = உண்மை, மிகுதி, பெருமை, விரிவு, என்றவாறு பொருள்கொள்ளப்பட்ட இறைவனுக்குண்டான இலக்கணங் களை, வால் விளக்குகின்றது.

அறிவன்: முக்காலங்களையும் உணர்ந்த, அறிந்த இறைவன்.

வால் என்ற சொல், வலது என்ற சொல்லோடு தொடர்பு கொண்டதால் அது தென்திசையையும் குறித்தது.

எனவே, வாலறிவன் என்ற சொல்லுக்கு, பெருமைக்குரிய உண்மையான இறைவன் என்றும், தென்திசைக் கடவுள் என்றும் பொருள் கொள்ளலாம்.

தமிழர் அறிந்த தென்திசைக்கடவுள் சிவனே எனப்படுவ தால், வாலறிவன் என்று திருக்குறள் காட்டும் சொல்லுக்கு, தென் திசைக் கடவுள் எனப்பொருள் கொள்வதே சிறப்பானதாகும்.

தமிழ்க்கடவுளான வால், கனானிய ஃபோனிசியச் சமயங்களில் - பால் (Ball) எனப்படுகின்றான். வால் - பால். வகரம் பகரமாகத்திரிந்துள்ளதை நோக்குக. இந்த பால் கடவுள், எல் என்ற கடவுளின் மகனாகவும் சொல்லப்படுவதால், எல் - வால் தமிழ்ச் சொற்களின் தொடர்பை அறியலாம். வால் (பால்) என்பான், தென்திசைக் கடவுளாதலால், அவன் தந்தையாக எல் கடவுளும் தென்திசைக் கடவுளே என அறியலாம்.

வல் - வல - வலது என்ற பொருளில், எபிரேய மொழியில் சொல்லப்படும். யாமின் என்ற சொல்லும் தொடர்புபடுவதால், யாத்திசை என்பதும், வலத்திசை என்பதும் தென்திசையை என அறியலாம்.

எபிரேய மொழி, தமிழின் கிளைமொழியே என உறுதியாகக் கூறலாம். தமிழில் தற்போது வழக்கில் இல்லாத, தொல்காப்பியர் காலத்தில் கூட வலக்கிழந்த பல தமிழ்ச்சொற்களை, எபிரேய மொழியில் காணலாம். என்பதற்கு, யா - வலது என்ற சொற்கள் காட்டும் தென்திசைப்பொருளால் அறியலாம்.

யாவன் என்ற தமிழ்ச் சொல்லை, கிரேக்க மொழியாலும், யாமன் என்ற சொல்லை எபிரேய மொழியாலும் அறியலாம். யாமன் என்ற தமிழ்ச்சொல்லே, யாமின் (Yamin) என்று எபிரேய மொழியில் திரிந்துள்ளது. அதுவே யாமீன் (Yameen) என்று அரபுமொழியிலும் திரிபுபட்டுள்ளது.

பின் என்றும் பென் என்றும் (Ben - Bin) என்றும் முறையே எபிரேய அரபுமொழிகளில் காணப்படும் முன்னொட்டுச் சொற்கள் (Ben - Yamin, Bin Yameen) பின் என்ற தமிழ்ச் சொல்லே என அறியலாம்.

பின் = பின்னால், இறுதியாக, கடைசியாக, பிறகு என்றவாறு பொருள் நீளும். தந்தைக்குப் பிறகு தனயன் என்ற பொருளில் சில சொற்களும், கடைமகன் என்ற பொருளில் சில சொற்களும், எபிரேய அரபு மொழிகளில் காணப்படுகின்றன.

அபு - பென் - ஆதம் (Abu - Ben. Adam) = ஆதாமின் மகன் அபு.

பென் - யாமின் (Ben - Yamin) = கடைசி மகன் யாமின்.

ஓசாமா - பின் - லேய்டன் (Ozama- Bin - Laiden) = லெய்டனின் மகன் ஓசாமா.

பென் யாமின் என்ற எபிரேயச் சொல், பெஞ்சமின் (Benjamin) என்று ஆங்கிலத்தில் திரிந்துள்ளது.

யாகோவா

யூதர்களின் கடவுள் யாகோவா என்று அழைக்கப்படுகின்றனர். யாகோவா என்ற பெயர்ச்சொல், Yahoah - Yahweh என்றவாறு ஆய்வாளர்களால் ஒலிக்கப்படுகின்றது. ஆங்கில ஒலிப்பில் Jehovah என்று அறியப்படுகின்றது. இச்சொற்கள் யாவும், Yah - Yaw என்ற எபிரேய மூலச் சொல்லினின்றும் நீண்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். யாகோவா என்ற சொல், எபிரேயச் சொல் அல்லவென்றும், இதனுடைய மூலச் சொல், வேறெந்த மொழியிலோ உள்ளதென்றும், அம்மொழி யாதெனக் தெரியவில்லை என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆதாம் முதல் அபிறகாம் வரையிலான செய்திகளில், யூதர்களின் முன்னோர்கள் எல் கடவுளையே வழிபட்டதை அறிய முடிகின்றது. அபிறகாமுக்குப் பிறகும் கூட, எல் கடவுளே யூதர்களின் கடவுளாயிருந்தார். அபிறகாமை, வடமெசபத்தோமியாவிலிருந்து கனான் நாட்டுக்கு அழைத்தது. எல் கடவுளே யாவார். அபிறகாமின் உடன்பிறந்தார் வழிபட்டது. எல் கடவுளையே. அபிறகாமின் தம்பி மகனுக்கு எல் கடவுளின் பெயரே சூட்டப்பட்டிருந்தது. (பெத்து - எல்) பெத்து எல்லின் மகனான இலவன் (Leban) என்பானும் எல் கடவுளையே வழிபட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

எகிப்தில் அடிமைகளாயிருந்த யூதர்கள் வழிபட்டதும் எல் கடவுளையே என அறியலாம். சினை மலையில் மோயிசனுக்குத் தன்னை வெளிப்படுத்திய இறைவன், தான் மோயீசனின் முன்னோர்களான அபிறகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் கடவுளே எனக் கூறினார். மோயீசன் கடவுள் தன்முன் தோன்றிப் பேசிய போது, கடவுள் பெயர் யாதெனக் கேட்டான். சுற்றி வளைத்துப்பேசாமல், நேரிடையாகவே உங்கள் பெயரென்ன என்று கடவுளிடம் கேட்கப்பட்டபோது, கடவுள் "நான் இருக்கின்றவர்", என்று (I am who am) மட்டுமே பதிலுரைத்தார்.[272] இருக்கின்றவர் என்ற பதில் உண்மையான, பொருத்தமான, கடவுளின் பண்புகளைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்ற விடையே என்றாலும், கல்வியறிவற்ற மக்களுக்கு இப்பெயர் எந்த அளவுக்குப் புரியப்போகிறது. என்று மோயீசன் எண்ணியிருக்கவேண்டும்.

Yehweh என்ற சொல், ஏற்கனவே குறிப்பிட்டது போல, அவ்வா (Hawah) என்ற சொல்லின் பொருளை உணர்த்துவதாக ஆய்வாளர்கள் கருதினர். அவ்வா என்ற எபிரேயச் சொல்லுக்கு, To be - இருக்கின்றவாறு பொருள் உணர்ந்தனர். அவ்வா அல்லது அவ்வை (ஔவை) என்ற தமிழ்ச்சொல், வயது முதிர்ந்து வழ்ந்து கொண்டிருக்கும் மூதாட்டியைக் குறித்தது. அவ்வை என்ற பெண்பாற் சொல்லுக்கு ஆண்பாற்சொல், அவ்வன் (ஔவன்) என்பதே, ஆனால் இச்சொல் தொல்காப்பியர் காலத்திலிருந்தே வழக்கிழந்து போனாலும், சிந்துவெளியில் அவ்வன் என்ற சொல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

டபிள்யூ. எஃப், ஆல்பிரைட் என்ற அறிஞர்,[273] ஆசேர் - எக்வா (Aser - Yahweh) என்று இச்சொல்லுக்கு விளக்கம் கூறுகிறார். "ஒன்றுமில்லாமையினின்று உயிர்களை உருவாக்கியவனும், அவ் வுயிர்கள் இன்றிருக்கின்றவாறு படைத்தவனும் (He brings into being whatever comes into being. The name therefore designates Him as Creator) படைப்பில் முதல்வனுமான எப்போதும் இருக் கின்ற கடவுள்." எனப் பொருள் கொள்ளலாம் என்கிறார்.

யா (Yaw - Yah) என்று சொல்லுக்குப் பொருள் அறிய வியலாத மேலைநாட்டவர், மேற்கண்டவாறு விளக்கமளிக் கின்றனர். யா என்ற மூலச்சொல், எம்மொழியில் காணப்படு கிறது. என அறியப்படவில்லையாதலால், எபிரேய மொழி கூறும் தெற்கு என்ற விளக்கத்தோடும், வலிமை (வலது) என்ற பொருளோடும், யா என்ற சொல்லை அவர்கள் தொடர்பு படுத்த முயலவில்லை. தெற்கு, வலிமை ஆகிய சொற்களோடு தொடர்புபடுத்தப்பட்ட கடவுள், கண்ணோட்டத்தில் மிகச் சிறப்பான பொருளைப் பெறுகிறான் என்ற கருத்து மேலை நாட்டவரால் அறியப்படவில்லை.

மேலை நாட்டவர் கூறும் விளக்கங்களுக்குப் பொருத்த மான தமிழ்ச்சொற்கள், Yahweh என்ற சொல்லில் உள்ளன என்பதை அறியாத ஆய்வாளர்கள், சரிவரப் புரிந்துகொள்ள இயலாது (unconvinced) விளக்கங்களையே அளித்துள்ளனர். மேலும் எகோவா என்ற சொல்லை அடிக்கடிச் சொல்லுவதும், அச்சொல்பற்றி ஆய்வுசெய்வதும் கூட கடவுளை இழிவுபடுத்து வதோடு, கடவுளின் பத்துக்கட்டளைகளில் ஒன்றான "என் பெயரை அடிக்கடிச் சொல்லாதே" என்றவாறு பணித்து, அச்சொல்லை ஒலிக்கவே அச்சப்பட்டனர்.

உண்மையில் எகோவா என்ற பெயரை, மோயீசனிடம் தோன்றிய கடவுள் கூறவேயில்லை. "இருக்கிறவர்" என்று கூறிய கடவுளின் பெயரை "எகோவா" என்று மாற்றியது யார் என்பதற்கும் ஆய்வாளர்களால் விடையிறுக்க இயலவில்லை. எகோவா, யூதர்களின் (யாக்கோபு வழிவந்த) கடவுளே அல்ல வென்றும் அச்சொல்லுக்கு உரிய கடவுள், மோயீசனின் மாமனார் (எத்ரோ - Yethro) வழிபட்டு வந்த கடவுளே என்றும் சொல்லப்படுகின்றது. எத்ரோ என்பவர், சினை மனைப்பகுதி யில் வாழ்ந்திருந்த மிடியன் (Midian) என்ற மக்களின் அரசியல் மற்றும் சமயத் தலைவன் ஆவான்.[273] எகிப்திலிருந்து ஒறுப்புக்கு அஞ்சி ஓடிவந்த (Fugitive) மோயீசன், சினை மலைப் பகுதியில் அடைக்கலமானான். எத்ரோவின் மகளை மணந்து கொண் டவன், அவனது கால்நடைகளை, சினை மலைப் பகுதியில் மேய்த்து வந்தான். அம்மலையின் உச்சியில் தான் தங்களுடைய கடவுள் இருப்பதாகத் தனது மாமனின் கூற்றால் மோயீசன் அறிந்திருந்தான். ஒரு நாளில் அம்மலைப் பகுதியிலேயே, இறைவன் மோயீசனுடன் பேசிய செய்தி விவிலியத்தில் காணக் கிடக்கின்றது.

இருக்கிறவர் என்ற பெயர், மெய்யியல் பெயராகத் தெரிந்த தால் (theological name), மோயீசனே தனது மாமனாரின் கடவுளான எகோவா என்ற பெயரை, தான்கண்ட கடவுளுக்கும் சூட்டியிருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எகோவா என்ற பெயர் பிற்காலத்தில் ஆண்ட தாவிது, சாலமன் மன்னர்களால் (ஊதா என்ற மரபினர் Judha) பரவலாக உணர வைக்கப்பட்டது. சினைமலைப்பகுதி (Mount Sinai) பாலத்தீத் திற்குத் தெற்கில் உள்ளது. மிடியன் என்ற மலைவாழ் மக்கள், அபிறகாமின் இரண்டாவது மனைவி கெத்துரா (Kethura) என்பவளுக்கு பிறந்த மக்கள் வழிவந்தவர்கள் என அறியப்படு கின்றனர்.[274] இம்மக்கள், அபிறகாமின் மறைவுக்குப் பிறகு, தெற்கே சென்று குடியேறினர் எனலாம்.[275] அபிறகாம் எல் தெய்வத்தேயே வழிபட்டு அத்தெய்வம் மலைமீதே வீற்றிருப்ப தாக நம்பப்பட்டதாலும், சினை மலைப்பகுதியில் எல் கடவுள் இருந்ததாக மிடியன் இன மக்கள் கருதியிருக்கவேண்டும். எல் கடவுளை, அபிறகாமுக்குப் பின்வந்த அவனது மரபார், எகோவா அழைத்திருக்க வேண்டும். அபிறகாமுக்கும் மோயீச னுக்கும் இடைவெளியான காலம் 750 ஆண்டுகள் என்று

கருதப்படுவதால், இப்பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு களுண்டு. எகோவா என்ற கடவுள் தெற்கே அறியப்பட்டதால், அவ்வாறு பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

எகோவா என்ற சொல், யா என்ற மூலச் சொல்லினின்றே பிறந்ததாக விவிலிய ஆய்வாளர்கள் கருதுவதாலும், யா என்ற சொல்லுக்கு எபிரேய மொழியில் தெற்கு என்ற பொருளே உணரப்படுவதாலும் எகோவா என்ற பெயர், தெற்குத் திசை யுடன் தொடர்புடைய பெயரே என்பது தெளிவு. யா + கோ என்ற இருசொற்களில், கோ என்ற சொல்லுக்கான விளக்கத்தை விவிலிய ஆய்வாளர்கள் விளக்கவில்லை அல்லது அச்சொல்லுக் கான பொருள் அவர்களுக்குத் தெரியவில்லை. கோ என்ற தமிழ்ச்சொல் இறைவனைக் குறித்ததே என்பது தெளிவு. கோ குடியிருந்த இல்லமே, கோயில் எனப்பட்டது.

யா = எபிரேய மொழிப் பொருளில் தெற்கு அல்லது வலது

யா = தமிழ்ப்பொருளில், தெற்கு அல்லது வலது, வலது என்பது வல்லாண்மையைக் குறிக்கும்.

யா =தமிழ் மற்றும் எபிரேயப் பொருளில் தென்திசை யைக் குறித்ததே

கோ = இறைவன், கடவுள்.

யா + கோ = தென்திசையிலிருந்த வலிமையுள்ள இறைவன்

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தென்திசையிலிருந்த வலிமை பெற்ற இறைவன் சிவனே. பாலத்தீனத்தைப் பொருத்த வரை வலிமைமிக்க இறைவன், எல் என்பானேயாவான். எல் கடவுளும் தமிழ்க்கடவுளே என ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

யா + கோவன் - யாகோவா என்றவாறு சொல்லப்படும் யூதர்களின் இறைவன்.

“தென்திசைக் கடவுள்” என்ற பொருளைக் கொண்டிருப் பவனே என்பது தெளிவு. மேலை ஆய்வாளர்களால் விடுவிக்க இயலாத யாகோவா என்ற சொல்லை தமிழ்க்கண்ணோட்டத் தில் மிக எளிதாக விடுவிக்க இயலும். யாகோவா என்ற சொல் லுக்கு, தென்திசைக் கடவுள் என்பதே சரியான விளக்கமாகும்.

○○○

அடிக்குறிப்புகள்

1. சேயோன் மேய மைவரை உலகமும் - தொல்காப்பியம், பொருள். 951:2
2. ceyan = son; Ce - Fish.

   indus Script Among Dravidian Speaker, Dr. R. Mathivanan, ISIAC, Madras, 1995, p. 28.
3. Ce = No six., Ibid, p. 94.
4. ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும், சிலப்பதிகாரம், 1:4.
5. தமிழர் வரலாறு, ஞா தேவ நேயன், நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு, 1967.
6. அபிதான மணிமாலை, பதிப்பாசிரியர், வித்துவான். சு. பால சாரநாதன், டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், பெசண்ட் நகர், சென்னை, 1988, ப. 14.
7. பாவாணர், தமிழர் வரலாறு.
8. குறுந்தொகை, 92:1.
9. மேலதே, 315:3.
10. மணிமேகலை, 8:18.
11. மேலதே, 12:86.
12. சிலப்பதிகாரம், 1:4.
13. மேலதே, 11:43.
14. பரிபாடல், 3:5.
15. மேலதே, 3:22.
16. பதிற்றுப்பத்து, 17:10.
17. மேலதே, 69:6.
18. Dictionary of the Bible, John L. MeKenzie, S.J., Asian Trading Corporation, Banglore, 1983, p. 432.
19. வின்சுலோ தமிழ் - ஆங்கில அகர முதலி, M. Winslow, Asian, Educational Services, New Delhi, 2001; p. 43.
20. மேலதே,
21. மணிமேகலை, 13:38.
22. பரிபாடல், 13:54
23. Brady's Book of Fixed stars, Bernadette Brady, Goodwill Publishing House, 18, Rajendra Palace, New Delhi, 1998. p. 198.

24. Ibid, p. 213.
25. Ibid, p. 294.
26. Ibid, p. 313.
27. Ibid, p. 35.
28. Ibid, p. 30.
29. Ibid, p. 104.
30. Ibid, p. 103.
31. Ibid, p. 302.
32. Ibid, p. 261.
33. Ibid, p. 185.
34. Ibid, p. 31
35. Dictionary of the Bible, p. 320.
36. I சாமு, 3:1-18.
37. Dictionary of the Bible, p. 230.
38. மார்க், 15:34.
39. மணிமேகலை, 22:152.
40. பதிற்றுப்பத்து, 19:11.
41. குறுந்தொகை, 47:3.
42. மேலதே, 161:1.
43. மேலதே, 179:2.
44. மலைபடுகடாம்; 346.
45. குறுந்தொகை, 234:2.
46. ஐங்குறு நூறு, 489:2.
47. தொல்காப்பியம், சொல். 754
48. சிலப்பதிகாரம் 2:66.
49. மேலதே, 10:180.
50. மேலதே, 28:70.
51. மேலதே, 2:38.
52. மணிமேகலை, 1:54.
53. சிலப்பதிகாரம், 14:7
54. சிறுபாணாற்றுப் படை, 97.

55. புறநானூறு, 198:9.

56. மேலதே, 56:2.

57. திருமந்திரம் மூவாயிரம், ப. இராமநாதபிள்ளை எழுதிய விளக்கமும், அ. சிதம்பரனார் எழுதிய குறிப்பும், சைசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை - 18, 1996.

சிவகதியே கதி (590), சிவசிவ என்கிலார் (1097), சிவசிவ என்றே (1097), சிவஞானிகட்கும், சிவபெருமானென்று (1231), சிவமல்லதில்லை (589), சிவமாகி ஐவகை (218), சிவமாகி மும்மல (992), சிமவாகிய அருள் (781), சிவமாடச் சத்தியும் (1136), சிவமாம் (30), சிவமாய (1156), சிவமான (1019), சிவமொடு (698), சிவயோக (72), சிவயேகி (736, 726), சிவளருளாய (1095) சிவனருளால் (3), சிவனவன் (599), சிவனே (608) சிவனே (956), சிவனோடு (3) சிவன் சத்தி (1094), சிவன் முதல் (23) சிவன் வந்து (1234), சிவாய (1098, 393) என மேலும் விரியும்.

58. Third month in the Babylonian Calender; The New American Bible, Dictionary Annexure, p. 153.

59. Map in the first page of Lonely planet, Egypt, Melbourne, 1977.

Siwa = An Idylic oasis of mud - brick houses, palms and pools far out in the desert. The south west place, conneceting the north Mediterranean harbour Marsa Matruth.

60. Lothal - the Indus Harbour, S.R. Rao, Picture Pages.

61. Ibid.

62. (An encyclopaedia of Hindu Deities, Demi Gods, Godlings, Demons and Heroes - Fredrick W. Bence Indiana University, D.K. Print world (P) Ltd, New Delhi, 2000).

63. Iran. Paul Greenway and David St. Vincent, Lonely Planet Publications, Australia, 1998. p. 13.

64. History of Religion, Sergei Tokerev, Progress Publishers, Moscow, 1989, p. 221.

650. Ibid,

66. Ibid, p. 222.

67. சதுரகராதி. ப. 66.

68. வின்ஸ்லோ தமிழ் - ஆங்கில அகரமுதலி, ப. 268.

69. Oxford Dictionary of Current English, 1996, p. 610.

70. Ibid.

71. Ibid.

72. தமிழர் வரலாறு, பாவாணர்

83. Iran. Lonely Planet Publications, p. 14.

74. Ibid.

75. ஆதி. 10:22.

76. Aramaic = The Language of Arameans. dictionary of the Bible, p. 50.

77. Iran. p. 14.

78. dictionary of the Bible, p. 225.

79. Ibid. p. 315.

The Hebrew words for the divine being are El, ELOHIM, and ELOAH. The third of there, is relatively rare and appears most frequently in poetry, there is no difference in meaning between ELOAH and the first two words. EL represents the common word for deity in the Semitic languages (Akkadian ILO, Arabic ILAH.

EL-SHADDH : W.F. Albright has interpreted it as" The one of the mountain", the cosmic mountain in ancient mythology was the home of the gods.

80 to 86. Ibid, p. 316.

87. எபிரேயத்தின் தாய்மொழி தமிழே, ம. சோ. விக்டர், 2005, ப. 81.

88. ஆதி. 4:20.

89. ஆதி. 4:1.

90. Dictionary of the Bible, p. 2.

91. சிலப்பதிகாரம், 27:239-240.

92. மேலதே, 12:13.

93. பரிபாடல், 11:31.

94. ஆதி. 5:1-32.

95. ஆதி. 4:14.

96. ஆதி. 4:20.

97. ஆதி. 4:21.

98. ஆதி. 4:22.

99. ஆதி. 5:15.

100. ஆதி. 5:17.

101. ஆதி. 3:24.

102. மேலதே.

103. யாத். 25:10-22; 37:7-9; எண்கள், 7:89.

104. I அரசர், 6:23.

105. The Jerome Biblical Commentary, New Jersey, 1968. Chapter 11:11-12, page.

106. Ibid.

107. தானி. 9:21-27.

108. உலூக்கா, 1:11-20

109. மேலதே, 11:26-28.

110. Dictionary of the Bible, p. 291.

111. Lothel - the Indus Harbour, S.R. Rao. p.

112. History of Religion in Mesopotamia, p. 199.

113. Dictionary of the Bible, p. 212.

114. தானி - எல். 10:21; 12:1 .

115. Dictionary of the Bible, p. 573.

116. தானி - எல், 10:13.

117. தோபி. 6:11.

118. மேலதே. 8:1-3.

119. நடுவர்கள், 18:7.

120. Jerome Biblical Commentary, p. 215.

121. Ibid.

122. Ancient Near Eastern Texts, J.B. Pritchard (Ed.), Princeton, 1955, pp.129-142.

123. குறுந்தொகை, 293:5.

124. Ancient Near Eastern Texts, pp. 142-149.

125. El in the Ugaritic Texts, M.H. Pope, Leiden, 1955.

126. ANET, pp.168, 493.

127. Fixed stars, p. 7.

128. Studies on Rig Vedic Deities, E. Gosh, Cosmo Publications, New Delhi, 1983, op.cit, pp. 23-24.

129. History of Religion, p. 358.

130. பயணம், 3:18; 5:3; 7:16; 9:1.

131. According to Deut. 26:5, Jacob. the father of Israel was said, a wandering Aramean.

132. ஆதி. 11:24-32.

133. ஆதி. 15:7.

134. "ur was inhabited at the end of Neolithic Age 4000-3000". Dictionary of the Bible, p. 909.

135. Ibid, p. 849.

136. Ibid, p. 5.

137. According to the Bible, O.T., Genesis.

138. ஆதி. 22:22.

139. ஆதி. 12:8; 13:3.

140. Dictionary of the Bible, p. 91.

141. மத்தேயு. 21:17.

142. ஆதி. 12:8; 13:3.

143. அருளப்பர், 5:2.

144. ஓசுவா, 10:10.

145. மேலதே, 19:15.

146. மத்தேயு. 21:1.

147. மேலதே, 11:21.

148. ஓசுவா, 17:16.

149. மேலதே, 19:38.

150. மேலதே, 15:28.

151. திருக்குறள், 1034.

152. ஆதி. 16:15. Dictionary of the Bible, p. 403.

153. ஆதி. 21:8-21.

154. ஆதி. 25:9.

155. ஆதி. 25:12-18.

156. ஆதி. 28:9; 36:3.

157. விவிலியச் செய்திகளின் படி.

158. ஆதி. 12:1-3.

158. Dictionary of the Bible, p. 403.

159. Ibid.

160. Ibid.

161. Ibid.

162. ஆதி. 32:28.

163. 935 B.C. panaroma of Biblical History, The Men Message of the Old Testament, Peter F. Ellis, Mount St. Alphonsus Seminary, New york, 1962.

164. Hebrew phrase Book, Justin Ben - Adam, Lonely Planet Publications, 1999, Introduction Pages.

165. Ibid.

166. ஆதி. 31:20.

167. Laban = white. Dictionary of the Bible, p. 490.

168. ஆதி. 31:24

169. ஆதி. 31:33-35.

170. ஆதி. 31:19.

In Hebrew, Teraphim, figurines used in divination (Ez. 21, 26, Zec, 10;2). Leban calls them his gods.

- The Dictionary of the Bible, p. 33.

171. Men and Message of the old Testament.

172. ஆதி. 35:7.

173. ஆதி. 49:25.

174. பாடல்கள், 68:66.

175. மேலதே, 146:5.

176. ஆதி. 21:3.

177. Dictionary of the Bible, p. 316.

178. மழுவாள் நெடியோன் - மதுரைக் காஞ்சி, 445.

காரியுண்டிக் கடவுள் - மலைபடுகடாம், 83.

சடைமுது முதல்வன் - புறநானூறு, 162:12.

179. ஆதி. 14:18.

180. ஆதி. 21:33.

181. ஆதி. 17:1.

182. Jerome Biblical Commentary Chpt 76:16.

183. Dictionary of the Bible, p. 74.

184. ஆதி. 49:25; எண்கள் 24:4; 16.

185. Dictionary of the Bible, p. 316.

186. Ibid. and Is. 14:13; Ps. 48:3.

187. Ibid.

188. பரிபாடல், 11:2.

189. Greece, Fodor's Hodder and stoughton, London, 1987, p. 83.

190. Labanon, Lonely Planet Publications, p. 13.

191. Cambridgge Encylopaedia, p. 485.

192. Ibid.

193. Ibid.

194. Ibid.

195. Ibid. p. 486.

196. Ibid. p. 808.

197. Ibid.

198. Ibid.p. 808.

199. Ibid.p 518 and 519.

200. Ibid.

201. Ibid.

202. Ibid.

203. Ibid.

204. Ibid.

205. Ibid.

206. Ibid.

207. Ibid.

208. Ibid.

209. Ibid.

210. Ibid.

211. Ibid.

212. தொல்காப்பியம் எழுத்து. 43.

213. மேலதே, 44.

214. மேலதே,65.

215. யா!, ப. அருளி, ப. 159.

216. தமிழ் வரலாறு, தேவநேயப் பாவாணர்.

217. தொல்காப்பியம், எழுத்து., 229.

218. பரிபாடல், 5:61.

219. புறநானூறு 6:9.

220. பரிபாடல், 2: 37.

221. காலம் + யாண்டு என்பதே, காலாண்டர் (Calender) என்று திரிபுபட்டிருக்கு வாய்ப்புண்டு - ஆசிரியர்.

222. குறுந்தொகை: பாடல் எண்கள் - 6, 32, 42, 86, 107, 160, 198, 244, 261, 279, 302.

223. மேலதே, 244.

224. மேலதே, 37.

225. மேலதே, 224.

226. மலைபடுகடாம், 429.

227. அகநானூறு, 17: 16 - 17.

228. மேலதே, 335:6.

229. மேலதே, 59: 16 - 18.

230. நற்றிணை, 137: 6 - 7.

231. கலித்தொகை, 11: 9

232. குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ. வே. சா. விளக்கவுரை, ப. 86

233. தொல்காப்பியம், பொருள். 37.

234. அமரி, குமரி, கவுரி, சமரி - சிலப்பதிகாரம், 12: 67 சமரி = போர்கடவுள்

235. The New American Bible, Dictionary and concordance, p. 220.

236. எபிரேயத்தின் தாய்மொழி தமிழே, ம. சோ. விக்டர். ப.

237. Tamil The Mither of Hebrew - Semitic and Western Languages, Ma.So. Victor, p. 336.

238. History of Religion. p. 200

239. Th God Ea was worshipped especially by sea - coast communities and apparently was the guadian of fishermen; ge was portayed as half man, half fish. At thesame time he was a culture hero and in Myths he was dipicted defending people from other gods.

- History of religion. p. 200.

240. தமிழர் வரலாறு, தேவநேயப் பாவாணர்.

241. Indus script Among Dravidian speakers., Dr.R. Mathivanan, Table of letters.

242. "The Instructions of suruppak (to be dated almost 2000 B.C) have not yet been completery published. They contain the advice of a King to his son Ziu - Sudra, the hero of the flood in the Sumerian version - Jerome Biblical Commentary, 28: 26, p. 491.

243. Sabt: The seventh day of a week.

Sabt = to close, to cease to shut.

Dictionary of the Bible, p. 751.

Saathu (Shut) turns "sbt" in Hebrew.

244. Ibid. p. 137

245. 1. Read sea, Yam sup - Essay by Jhon Morris, professor of Historical Science, City College, New York, Taken throngh internet.

2. The sea without qualification in the Bible, almost always means the Mediterramean, but the word Yam is appied to other bodies of water also, i.e., Dead sea, Galilee, Red sea.

- The Dictionary of the Bible, p. 781.

246. பெரிப்ளூஸ், வி.எஸ்.வி இராகவன். மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப. 2.

247. குறுந்தொகை.293:5.

248. வின்ஸ்லோ, தமிழ் ஆங்கில அகராதி, ப. 33.

249. சதுரகராதி, வீரமாமுனிவர்.ப. 8.

250. புறநானூறு, 9:3 - 4.

251. திருக்குறள், 43.

252. Rig veda samhita Ed. H.H. wilson, Vol. 6 (7): 7: 6:1 Sukta 14: 1.

253. திருமந்திரம், கடவுள் வாழ்த்து, 2.

254. சதுரகராதி, ப. 163.

255. வின்ஸ்லோ, ப. 904.

256. An Encylopaedia of Hindu Deities, Demi Gods, Godlings, Demons and Heroes - Fred rick W. Bunce, page 677.

Pet = To be Spacious (Dict - of the Bible, p. 413.)

257. ஆதி. 10.2.

258. The Dictionary of the Bible, p. 865.

259. Ibid. p. 44.

260. The New Amenicam Bible, Bible, Dict. p. 96.

261. மணிமேகலை. 19.108.

262. பெருங்கதை, 1:58.

263. சிலப்பதிகாரம், 1:10.

264. மேலதே, 14:67.

265. மேலதே, 28:141.

266. பதிற்றுப்பத்து, 2ஆம் பத்து, பதிகம், வரி. 8.

267. Dictionary of the Bible. p. 88.

268. The New American Bible, p. 37.

269. Ibid. Dict. 248.

270. Ibid. p. 246.

271. .... வாலறிவ

நற்றாய் தொழார் எனின் - திருக்குறள், 2

272. Dictionary of the Bible, p. 317.

273. பயணம், 18:1.

274. ஆதி. 25: 2-4.

275. Dictionary of the Bible, p. 574.

ooo

திருச்சி புனித வளனார்க் கல்லூரியில்
நூலாசிரியர் **ம. சோ. விக்டர்** அவர்கள்
ஆற்றிய உரையின் சுருக்கம்

ஈப்று மொழியில் தமிழின் வேர்ச் சொற்கள்

*26.9.2006. அன்று, திருச்சிராப்பள்ளி, தூய வளனார் கல்லூரியில், தமிழ்த்துறைத்தலைவர், முனைவர், **பேரா. அ. அந்தோனி குருசு** அவர்கள் தலைமையிலும், **பேரா. இ. சூசை** அவர்கள் முன்னிலையிலும் நிகழ்வுற்ற, தமிழாய்வுச் சொற்பொழிவின் சுருக்கம், இங்கு கட்டுரையாக அளிக்கப்படுகின்றது.*

தமிழ், உலகின் மொழிகளில் மூத்தது என்பதோடு, முதன்மையானது என்பது பற்றியே கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மொழி என்றனர். இப்பழமொழி, தமிழர்களே தங்கள் மொழியாகிய தமிழைப் பெருமைப் படுத்திக் கொள்ளச் சொல்லி வைத்தனர் என்றும், உண்மையில் ஆரியத்தினின்றே தமிழ்பிறந்தது என்ற கொள்கையை, 19ஆம் நூற்றாண்டுகளில் நிலைநிறுத்தினர். இக்கொள்கையை எதிர்த்த பரிதிமாற்கலைஞர், மறைமலை அடிகள் போன்றோர், ஆரியத்தினின்று தமிழ் கிளைக்கவில்லை. யென்பதையும், தமிழ் தனித்தியங்கவல்ல மூப்புடைய மொழியென்றும் சொல்லி, தனித் தமிழில் எழுதுவதையும் பேசுவதையும் ஊக்குவித்தனர். இவ்வெதிர்ப்புகளைக் கண்டதும் ஆரியச் சார்பாளர்கள், சிவனுடைய உடுக்கையினின்றும், பக்கத்துக் கொன்றாகத் தமிழும் ஆரியமும் தோன்றின என்ற புதுக்கருத்தை வெளியிட்டனர். சிவன், தமிழர் தம் கடவுள் என்பதையும் மறந்து, சிவனிடமிருந்தே ஆரியம் தோன்றியது என்ற கருத்தால், தமிழினின்றே ஆரியம் தோன்றியது என்ற கொள்கையை மறைமுகமாக ஏற்றுக் கொண்டனர்.

கி.பி. 1927ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்கள், இந்தியாவின் வடமேற்கு மாநிலமான இன்றைய பாகித்தானில், புகைவண்டித் தடம் அமைக்க முயன்றபோது, எதிர்ப்பட்ட மண்மேடுகளை

இடித்துத் தள்ளினர். அம்மண்மேடுகளுக்கு அடியில் புதையுண்ட நகரங்களின் எச்சங்களைக் கண்டெடுத்தனர். புகைவண்டித் தடப்பணிகள் முடிவுற்றபோது, முறையான அகழ்வாய்வுப் பணிகளை ஆங்கிலேயர் மேற்கொண்டனர். நகரிய நாகரிகத்தில் பொலிவுற்றிருந்த பலநகரங்கள் அகழ்வாய்வுகள் வழியாக வெளிச்சத்திற்கு வந்தன. வழக்கம் போல் எதற்குமே முந்திக் கொள்ளும் ஆரியச் சார்புடைய வரலாற்றாசிரியர்கள், சிந்து வெளியில் காணப்பட்ட நகரிய நாகரிகம், ஆரிய நாகரிகமே என அறிவித்தனர். இதனடிப்படையில், 1924 முதல் 1931ஆம் ஆண்டு வரையிலும், சிந்துவெளி நாகரிகம், ஆரிய நாகரிகமே என ஒரு பக்கம் சார்ந்த முடிவாக அறிவிக்கப்பட்டது.

கி. பி. 1931ஆம் ஆண்டில், மும்பை நகரத்தின் தூய சவேரியார்க் கல்லூரியின் வரலாற்றுப் பேராசிரியர் திருத் தந்தை ஈராஸ் அவர்கள், அகழ்வாய்வுப் பணியிடங்களைப் மார்வையிட்டு, சிந்துவெளி நாகரிகம் தமிழர் (திராவிடர்) நாகரிகமே என அறிவித்து, வரலாற்று ஆய்வாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். இச்செய்தியைத் தாங்கிக் கொள்ள இயலாத பலர், ஈராஸ் அடிகளின் அறிவிப்பு, தவறானதென அண்மைக் காலம் வரை வாதிட்டு, தற்போது ஓய்ந்து போயினர். ஈராஸ் அடிகள், சிந்துவெளி எழுத்துக்கள் தமிழ் வரிவடிவங்களே என அறிவித்ததோடல்லாமல், இவ்வரிவடிவங்கள் சுமேரிய வரிவடிவங்களோடு ஒற்றுமைப்படுவதாகவும், அடுத்ததொரு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார். பன்மொழி அறிஞரான ஈராஸ் அடிகளின் கூற்றுக்கு மறுப்புகளும் எழுந்தன. தென் னிந்தியாவில் மட்டுமே பேசப்பட்டு வந்ததாகக் கூறப்பட்ட தமிழ், வட இந்தியாவிலும் பேசப்பட்டது என்ற தகவலோடு, கடல்கடந்த நாடுகளிலும் பேசப்பட்டது என்ற முதல் தகவல் வெளியானது.

சிந்துவெளி நாகரிகம், கி.மு. 3000 ஆண்டுகளில் பொலி வுற்றிருந்தது என்ற செய்தி மறுக்கப்பட்டு, இன்று கி.மு. 7500 ஆண்டுகள் என இந்தியா அரசே அறிவித்துவிட்டது. கி.பி. 2002ஆம் ஆண்டில் ஆங்கிலேய கடலகழ்வாய்வுக்குழுவினர் இன்றைய பூம் புகாருக்குக் கிழக்கே 5 கல் தொலைவில், கடலில் மூழ்கிப் போயிருந்த நகரமொன்றைக் கண்டுபிடித்து, அந்நகரமே கடல்கொண்ட பூம்புகார் நகரமென அறிவித்தனர். சி. 14 என்ற அறிவியல் முறைப்படியான ஆய்வுகளை மேற் கொண்டு, பூம்புகார் நகரின் அகவை, கி.மு. 12000 ஆண்டுகள்

என்றும் அறிவித்தனர். மூழ்கிப்போன பூம்புகார் நகரினின்றும் கிடைக்கப்பெற்ற பானை ஓடுகள், செப்புக்காசுகள் ஆகிய வற்றில் காணப்படும் எழுத்துக்கள், சிந்து வெளியிலும் காணப் படுகின்றன. இதனடிப்படையில், கி.மு. 12000 ஆண்டுகளிலேயே, சிந்து வெளியிலும் தமிழர் வாழ்ந்திருந்தனர் என அறியலாம்.

சிந்துவெளியில் காணப்பட்ட வரிவடிவங்கள் சுமேரிய மொழியிலும் காணப்படுவதால், சுமேரியரும் தமிழரே என்ற கொள்கை இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சுமேரியர் யார்? அவர்களின் முன் மரபு யாது? என்ற கேள்விகளுக்கு, இதுவரை வரலாற்றாசிரியர்கள் விடையளிக்க வில்லை. ஆனால் சுமேரியரைப் பற்றிய செய்திகளில், அவர்கள் பாபிலோன் நாட்டுக்கு வெளியிலிருந்து வந்தவர்கள் என்றும், பாரசீக வளைகுடா வழியே பாபிலோனில் நுழைந்தவர்கள் என்றும், வலிமையான கப்பற்படையைக் கொண்டிருந்தவர்கள் என்றும், போரிட்டுப் பாபிலோன் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர் என்றும், அவர்களே ஊர் என்ற நகரிய நாகரிகப்பெருநகரை உருவாக்கியவர்கள் என்றும் தெளிவாக்கப்பட்டுள்ளன. போரிட்டு வென்றதனால் அக்குழுவினர் சுமேரியர் என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

மேலை நாட்டு ஆய்வாளர்கள் கொடுக்கும் தகவல்களின் அடிப்படையில் நோக்கும்போது சுமேரியர் சிந்துவெளி யினின்றோ அல்லது தமிழகத்தினின்றும் சென்றவரே என்பது தெளிவாகின்றது. சுமர் என்ற சொல், சமர் என்ற தமிழ்ச் சொல் லின் திரிபே என அறியலாம். சமர் என்பதற்குப் போர் என்பதே தமிழ்ப் பொருளாகும். எனவே, ஈராஸ் அடிகள் கருதியவாறு சுமேரிய மொழி, தமிழ்மொழியே என அறியலாம். சுமேரிய மொழியின் சில குறிப்புகள் களி மண் தட்டுகளில் அறியப் பட்டுள்ளன. அவை, தமிழ்ச் சொற்களே என இன்று அறியப் பட்டுள்ளன.

சுமேரியரின் வரலாறு முறையாக அறியப்படாதது போன்றே, ஈப்று மொழி பேசிய யூத இன மக்களின் வரலாறும் அறியப்படவில்லை. ஆனால், சுமேரியர் பற்றி அறிவித்த செய்தி களைப் போன்றே யூதர்களைப் பற்றியும் பல்வேறு குறிப்புகளை மேலை நாட்டு ஆய்வாளர் அறிவித்தனர். அதன் வழியில் ஈப்று (Hebrew) என்ற சொல், அப்பிறு (appiru) என்ற சொல்லின் நீட்சியே என அறிவித்துள்ளனர். அப்பிறு என்ற சொல்,

சுமேரியச் சொல்லே எனவும் உறுதிபடக் கூறுகின்றனர். ஈப்று மொழியில் அப்பிறு என்ற சொல்லுக்கு "அந்தப்பக்கம்" (that side) என்று பொருள் கூறி, தைகரிஸ் ஆற்றுக்கு அப்புறத் தினின்றும் வந்தவர்கள் என்று விளக்கமும் கொடுத்துள்ளனர். "அப்புற - அப்புறத்து" என்ற தமிழ்ச்சொல்லே, அப்பிறு என எபிரேய மொழியில் திரிந்துள்ளது. தைகிரிஸ் ஆற்றுக்கு அப்புறத்தி லிருந்து வந்தவர்கள் என்ற செய்தியின் அடிப்படையில், யூதர்கள் சிந்து வெளியினின்றும் சென்ற தமிழர்களே என அறியலாம்.

"சின்னாறு" "Shinar" தைகிரிஸ் ஆற்றை அப்புறத்து ஆறு என்றே அழைத்தனர் என்பதால், இப்புறத்திலும் ஓராறு இருக்க வேண்டுமல்லவா! அதுவே யூப்றடிஸ் ஆறாகும். யூப்றடீஸ் - டைகிரிஸ் ஆறுகளை இரட்டை ஆறுகள் என்பர். மெசபத் தோமியாவை வளப்படுத்தியவை இவ்விரு ஆறுகளை, யூப்ரடீஸ் ஆற்றை அக்காலத்தில் இபுரட்டு (E - purattu) என்ற பாபி லோனிய மொழிச் சொல்லால் அழைத்தனர். இவ்வாற்றை, கிரேக்கர்கள் இப்றதோஸ் (Ephratos) எனவும், உரோமானியர்கள் இப்ற தூஸ் (Ep hratus) எனவும் அழைத்தனர். இவையும் திரிபு பட்டு இன்று ஆங்கிலத்தில் யூப்றடிஸ் என்று அழைக்கப் படுகின்றது.

இப்புறத்து (தமிழ்) - இப்புறட்டு (பாபிலோனியம்) - இப்றதோஸ் (கிரேக்கம்) - இப்றதூஸ் (இலத்தீன்) - யூப்றடீஸ் (ஆங்கிலம்)

மேற்கண்ட செய்திகளின்படி, அவ்விரண்டு ஆறுகளையும் இப்புறத்து - அப்புறத்து ஆறுகள் என, தொன்மைக்காலத்து பாபிலோனியர் அழைத்தனர் என்பதாலும், அவ்விரண்டு சொற் களும் தமிழ் சொற்களே என்பதினாலும் அத் தமிழ்ப் பெயர் களை வைத்த பாபிலோனியர் தமிழரே என்பதும் தெளிவு.

அப்புறத்து ஆற்றின் கிழக்குப் பகுதியினின்றும் வந்தவரை அப்புறத்து மக்கள் என்றே அழைத்தனர். அப்புறத்து என்ற சொல்லே அப்பிறு என்று திரிபுபட்டுள்ளதை நோக்கும் போது, அப்புறத்து மக்களாகக் கருதப்படும் யூத இனத்தார், தமிழர் களே எனத் தெளியலாம். அப்புற என்பது, அப்பிறு என்றும், அப்பிறு என்பதே ஈப்று என்றும் திரிபுபட்டுள்ளதை நோக்குக.

பெயரின் வழியினால் மட்டும் ஈப்று இனத்தார் தமிழர் என்பதை உறுதி செய்ய இயலாது என்று சிலர் கருதுவாரே

யானால், அவ்வின மக்களின் தகுதிகள் பற்றிய செய்திகளும் அவர்களைத் தமிழர் என்றே கருத இடமளிக்கின்றன.

1. ஈப்று இனமக்கள் சுமேரியர் இனத்தோடு தொடர்புடையவர்கள்.
2. ஈப்று மொழிக்கும் சுமேரிய மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டு.
3. ஈப்று இன மக்களின் பல பெயர்கள், சுமேரிய மொழியிலும் கணப்படுகின்றன.
4. ஈப்று இனமக்கள் போர் நுணுக்கங்களை அறிந்த மறவர் கூட்டத்தினர் ஆவர்.
5. ஈப்று மக்கள், தங்களுக்குப் பொருளுதவி அளிக்க முன்வந்த எவருக்காகவும் போரிட்டனர். கனான் நாட்டு மன்னர்கள் கூட இவர்களது உதவியைப் பெற்றிருந்தனர்.
6. ஈப்று இனத்தார், பாபிலோனின் தொன்மைக்குடிகள் அல்லர்.
7. ஈப்று மக்கள் நகரிய நாகரிகத்தில் வாழ்ந்திருந்தவர்கள்.
8. என்ன கரணியம் பற்றித் தங்களது தாய்நாட்டைவிட்டு பாபிலோன் பகுதியில் குடியேறினர் என்பதை அறிய இயலவில்லை.
9. எகிப்தில் பின்னர் அடிமைகளாகப் பணியாற்றியவர்கள் இவ்வின மக்களே.

மேற்கண்ட செய்திகள், ஈப்று, இனமக்கள் (யூதர்கள் என்பது பிற்காலப்பெயர்) தமிழர்களே என்பதை உறுதிப்படுத்துகின்றன. இம்மக்கள் பற்றிய குறிப்புகளை அளித்த ஆய்வாளர்களால், அப்புற என்ற அவ்வினத்தின்பெயருக்கான விளக்கத்தை அறிந்து கொள்ள இயலவில்லை. அப்புற என்பது தமிழ்ச் சொல்லே என்பதும் அவர்களுக்கும் புரிந்திருக்க வில்லை.

ஈப்று என்ற மொழி இன்றைக்கு 5000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. சுமேரியம் என்ற தமிழ்மொழியின் கிளை மொழியாக ஈப்று கருதப்படுகின்றது. ஈப்று மொழி பேசியவர்கள் பாபிலோன் பகுதியில் வாழ்ந்திருந்ததாக வரலாறு தெரிவிக்கின்றது. மெசபத்தோமிய நாட்டின் வடபகுதியாகிய படன் அறன் (Padan Aram) என்ற பகுதியிலும் இவ்வின மக்கள்

வாழ்ந்திருந்தனர். அறம் என்ற பகுதி யூப்ரடீஸ் - தைகிரிஸ் ஆறுகளுக்கு இடைப்பட்ட வளம்மிக்கப் பகுதியாகும். படன்அறம் தொடங்கி ஊர் நகரப் பகுதிகள் வரையில் வாழ்ந்தருந்தோர் ஈப்று இனமக்களாக அறியப்படுகின்றனர். படன் அறம் பகுதியில் அறமாயிக் என்ற மொழிபேசப்பட்டதாகக் கூறப்படுகிறது. அறமாயிக் - ஈப்று ஆகிய இரண்டு மொழிகளும் ஒரு மொழியே என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். தமிழ் மொழியின் பேச்சுத் தமிழும் இலக்கியத் தமிழும் போன்றதே, அறமாயிக் - ஈப்று எனப்பட்டவையாகும். எழுத்துவடிவில் இயற்றப் பட்டதை ஈப்று என்றும் பேச்சு வழக்கிலிருந்ததை அறமாயிக் என்றும் விளக்குகின்றனர்.

அறம் என்பான் நோவா என்ற விவிலிய மாந்தனின் பெயரன் ஆவான். அறம் என்பது தமிழ்ச் சொல்லே என்பதால், அவனது பாட்டனான நோவாவும் தமிழனே என்பதை அறியலாம். வெள்ளத்தினின்று தப்பிப்பிழைத்த நோவா என்பான், தைகிரிஸ் ஆற்றின் கிழக்குப் பகுதியினின்றும் வந்து குடியேறியவன் என்று விவிலியம் விளக்குகிறது. நாவாய் என்ற தமிழ்ச்சொல்லுக்கு மரக்கலாம் என்பதே பொருளாகும். அதுநாவி என்றும் சொல்லப்படும் மரக்கலத்தின் உதவியால் தப்பிப்பிழைத்த அம்மாந்தன், நாவாய்க்காரன் என்ற பொருளின் நோவா என அழைக்கப்பட்டான். உண்மையில் நாவாய் என்ற சொல்லே நோவா எனத் திரிந்தது. அவனது மக்களாக அறியப்பட்ட மூவரும் தமிழ்ப் பெயர்களையே கொண்டிருந்தனர் என்பதையும் விவிலியத்தின் வாயிலாக அறியலாம்.

நோவாவின் பெயரனான அறம் (Aram) என்பானின் மரபு வழியினர் வாழ்ந்த இடமே, படன் அறம் (படர்ந்த அறம் பகுதி) எனப்பட்டது. அறம் மக்கள் பேசிய வாய்மொழி, அறம் வாய் மொழி எனப்பட்டது. இச்சொல்லே, அறம்வாய் - அறமாய் - அறமாயிக் எனத் திரிந்தது என்க. இயேசுக்கிறித்து பேசிய மொழியும் அறம் வாய் எனப் பட்ட அறமாயிக் மொழியே.

யூதர்களின் சமய இலக்கியமான விவிலியத்தின் பழைய ஏற்பாடு (old Testament) ஈப்று மொழியில் எழுதப்பட்டதே அந்நூலின் பிற்பகுதிகள் (கி. மு. 200 ஆண்டுகளில்) கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. அறமாயிக் - ஈப்று மொழிகள் எப்போது தோன்றின என்பதை வரையறுக்க இயலாது. எனினும் யூதர்களின் முதுபெரும் தந்தையான ஆபிறகாம் பேசியது

ஈப்று மொழியே என விவிலியம் விளக்குகின்றது. அபிரகாமின் காலம் கி.மு. 2000 என்று தெளிவாக்கப்பட்டுள்ளது. எனவே அபிறகாம் காலத்துக்கு முன்பே, கி.மு. 3000 ஆண்டுகளிலேயே ஈப்று மொழி பேச்சு வழக்கிலிருந்து என அறியலாம். அபிறகாம் என்ற சொல்லும் கூட, தமிழ்ச்சொல்லே என அறியலாம்.

ஈப்று மொழி பேசிய மக்கள், கி.மு. 5000 ஆண்டுகளில் பாபிலோன் பகுதியில் குடியேறியிருக்கலாம் என்று கருதலாம். அவர்கள் அங்கு குடியேறிய காலத்தில் பாபிலோன் பகுதியில் வாழ்ந்திருந்த மக்கள், நோவாவின் முதல் மகனான செம் (Shem) என்பானின் வழிவந்தவர்களே என்று விவிலியம் விளக்குகின்றது. அம்மக்கள் பேசியமொழி செமிட்டிக் என அறியப்படுகின்றது செம் - செம்மிட்டிக் என்றவாறு சொல்லப்பட்டது. செமிட்டிக் என்ற மொழி, நோவாவின் தமிழினின்றும் கிளைத்த மொழியே என அறியலாம். நோவா, பாபிலோனின் குடியேறிய போது, “ஒருமொழி”யே அவர்களால் பேசப்பட்டது என விவிலியம் விளக்குகிறது. அந்த ஒரு மொழி யாதென விவிலியம் விளக்க வில்லையாயினும், அது தமிழே என்பதற்கான -விளக்கங்களும் சான்றுகளும் பெருமளவில் உள்ளன.

இறைவனே அந்த ஒரு மொழியைப் பன்மொழிகளாகக் கிளைக்கச் செய்தார் என்று விவிலியம் கூறுகிறது. பாபெல் (Bable) என்று கோபுரத்தை நோவாவின் வழிவந்த மக்கள் பாபிலோனில் கட்டத்துணிந்தனர் என்றும், அக்கோபுரம் முழுமையாக முடிக்கப்படவில்லையென்றும், அது முடிக்கபடு முன்னரே மக்கள் நாலா திசைகளுக்கும் பிரிந்து போயினர் என்றும் விவிலியம் விளக்குகிறது. எல் என்ற கடவுளின் பெய ரால் கட்டப்பட்ட அக்கோபுரம், கடவுளின் வாயில் என்றே பொருள் கூறப்படுகின்றது. எல் என்பது தமிழ்க்கடவுளே என் பதும், பொதுவாகக் கதிரவனையும், சிறப்பாகச் சிவனையும் குறித்தது எனவும் அறியலாம். வாயில் - எல் என்ற தமிழ்ச் சொல்லே, பாப் - எல் எனத் திரிபுபட்டுள்ளது. இக்கோபுரமும் தமிழ்ப் பெயரைக் கொண்டுள்ளதால் அதனைக் கட்டியவர் களும் தமிழர்களே என அறியலாம்.

நோவா, என்பான், குமரிக் கண்டம் அழிவுற்ற காலத்தில் மேலை நாட்டுக்குத் தப்பித்துச் சென்ற தமிழனே என அறியப் படுவதாலும், குமரிக் கண்ட அழிவு, அண்மையில் ஆய்வு செய்யப் பட்ட பூம்புகார் நகரத்தோடு தொடர்பு படுத்தப்படுவதாலும்,

பூம்புகார் நகரம் கி.மு. 12000 ஆண்டுகளில் அழிந்துபட்டது. என ஆய்வுகள் மெய்பிப்பதாலும் நோவாவின் மேலை நாட்டுக் குடியேற்றமும் கி.மு. 12000 ஆண்டுகளில் நிகழ்வுற்றதே எனக் கருதலாம். அங்கு நோவாவின் மக்கள் பல்கிப் பெருகி வாழ்ந் தனர் என்ற விவிலியச் செய்தியால், கி.மு. 10000 - 8000 ஆண்டுகள் அளவில் பாபேல் கோபுரம் கட்டப்பட்டிருக்கலாம் என கருத இடமுண்டு. கடந்த நூற்றாண்டில், பாபேல் கோபுரத்தின் அடித்தளம் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பகுதிகளை ஆய்வு செய்த ஆய்வாளர்களும் இக்கால அளவு களை உறுதி செய்கின்றனர்.

பாபேல் கோபுரம் கட்டப்பெறும் போது ஒரு மொழியே பேசப்பட்டதாக விவிலியம் கூறும் செய்தியிலிருந்தும், கி.மு. 10000 - 8000 ஆண்டுகளிளல், பாபிலோனில் தமிழே பேசப் பட்டது எனக் கருத இடமுண்டு. கி.மு. 8000 ஆண்டுகளுக்குப் பிறகே, அந்த ஒருமொழியான தமிழினின்றும், பன்மொழிகளான செமிட்டிக், ஆமெட்டிக், இந்தோ - ஐரோப்பியம் என்று மூன்று மொழியினங்களும் கிளைத்தன என்று விவிலியம் கூறுகின்றது. செமிட்டிக் மொழி, பாபிலோன் பகுதியிலும், ஆமெட்டிக் மொழி பாலத்தீனம், அரேபியா, எகிப்து போன்ற நாடுகளிலும், இந்தோ - ஐரோப்பா மொழி கிரேக்கத்தை யொட்டிய கருங் கடல் பகுதிகளிலும் பேசப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கி.மு. 5000 ஆண்டுகளில், ஈப்று இனமக்கள் பாபிலோன் பகுதியில் குடியேறிய போது, தமிழ்மொழி பேசப்படவில்லை யென்றும், தமிழ்மொழியினின்றும் கிளைத்த செமிட்டிக் மொழியே பேசப்பட்டது என்றும் அறியலாம். ஈப்று இன மக்கள் சிந்துவெளியினின்றும் மேற்குநோக்கிச் சென்ற மக்களே என்பதால், ஈப்று, மக்கள் பேசியது தமிழ்மொழியே என்றும், அது தொன்மைக் காலச் சிந்துவெளித் தமிழே என்றும் அறியலாம்.

நோவா காலத்தில் பாபிலோன் மொழியும், தமிழகத்தில் பேசப்பட்ட மொழியும் தமிழே என்பதோடு, சிந்துவெளி மக்களும், தமிழையே பேசினர் என்பது தெளிவு. சிந்துவெளி யும் தமிழகமும் அருகருகே அமைந்திருந்ததால், இவ்விரு இடங்களிலும் பேசப்பட்ட தமிழில் வேறுபாடுகள் குறைந்தே காணப்பட்டன. ஆனால், பாபிலோனின் பேசப்பட்ட தமிழ், தாய்த்தமிழுடன் தொடர்பற்றுப் போனதாலும், பாபிலோனில்

ஏற்பட்ட புதியச் சூழல்களாலும், தொழில் பெருக்கத்தாலும், புதுப்புதுச் சொற்கள் தோன்றின அவ்வாறே தமிழகத்திலும் புதிய சொற்கள் உருவெடுத்தன இப்புதிய சொற்களைப் பரிமாறிக் கொள்ளும் அளவில் இவ்விரு நாடுகளுக்கும் இடையேயிருந்த தொலைவு என்ற காரணியம் இடையூறாய் அமைந்தது. தற்காலத்திய ஆங்கிலம் என்ற மொழியும்கூட தகவல் தொடர்புகள் வளர்ந்திருக்கும் கரணியத்தால், கிளைக்க வில்லையென்றும், இல்லாவிடில் ஆத்திரேலிய ஆங்கிலமும், அமெரிக்க ஆங்கிலமும், இங்கிலாந்தின் ஆங்கிலத்தின் கிளை மொழிகளாக மாறியிருக்கும் என்பர்.

இந்த அளவில், பாபிலோனியத் தமிழின் கிளைகளாக அறியப்பட்ட மொழிகள் பேசப்பட்டு வந்த காலத்தில்தான், தமிழ்மொழியைப் பேசிவந்த ஈப்று மக்கள் பாபிலோன் பகுதி யில் குடியேறினர். வரலாற்றின் அறியப்படும். சுமேரியர்களும், சிந்து வெளி மக்களே என அறியப்படுவதாலும், ஈப்று மக்களும் சிந்துவெளி மக்களே என அறியப்படுவதாலும் இவ்விரு மொழிகளுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாலும், இவ்விருவரும் சிந்துவெளி மக்களே என அறியப்படுவதாலும், இவ்விருவரும் ஒருகாலத்தில் குடியேறியவர்களா அல்லது முன்பின் குடியேறிய வெவ்வேறு குழுக்களா எனத் தெளிவு பெற இயலவில்லை. சுமேரிய மொழியும் ஈப்று மொழியும் சிந்து வெளித்தமிழே என்ற கருத்தின் அடிப்படையில் இம்மூன்று மொழிகளுக்கிடையேயான தொடர்புகள் நெருக்கமாக உள்ளன.

இச்சுழல்களில், தமிழின் கிளை மொழியான பாபிலோனிய செமிட்டிக் மொழியுடன், சுமேரியம், ஈப்று போன்ற மொழியும் கலப்புற்றன. சுமேரியம் ஈப்று ஆகியவற்றைப் பின்னைத் தமிழ் எனவும், செமிட்டிக் மொழியை முன்னைத் தமிழின் கிளை மொழி எனவும் கருதலாம். இக்கலப்பின் அடிப்படையில், பாபிலோனிய மொழி அக்காடியம் என்ற புதுப்பெயரைப் பெற்றது. அக்காடிய மொழியுடன் கலந்த ஈப்று மொழியும் தமிழ் மொழியினின்றும் விலகிச் சென்றது. கி.மு. 2000 ஆண்டு களில் அபிறகாம் பேசிய ஈப்று மொழி, தமிழாக இல்லாமல். தமிழின் திரிபு மொழியாகவே இருந்தது எனலாம். ஏற்கனவே கூறியதைப்போன்று ஈப்று, அறமாயிக் ஆகியவை ஓரினமாகவும், அக்காடியம் என்ற பாபிலோனியம் ஓரினமாகவும் உணரப் பட்டன. கி.மு. 2000 ஆண்டுகளில் கூட, சிந்து வெளியில் தமிழே

பேசப்பட்டது என்ற நிலையில், மேலைநாடுகளில் தமிழ் முற்றிலும் மாறுப்பட்ட திரிபு மொழிகளாகவே பேசப்பட்டது. அடியிற்கண்ட பட்டியல், மூத்த முதன்மொழி தமிழே என்பதை விளக்கும்.

பட்டியல் 1 :



பட்டியல்2:



மேற்கண்ட பட்டியலின்படி, அதில் கூறப்பட்டுள்ள அனைத்து மொழிகளுக்கும் தமிழே தாய் மொழியாகும் மேற்கண்ட அனைத்திலும் தமிழின் வேரும் மூலரும் புதைந்துகிடப்பதை, அம்மொழிகளின் சொற்களைப்பிரித்து இனம் காணும் போது அறியலாம்.

உலக வரலாறும், உலகின் மொழிவரலாறும், குமரிக் கண்டத்தினின்றும் தொடங்கப்படாதவரையில், அவைகள் குழப்பங்களைக்கொண்டதும், விடுவிக்க இயலாத சிக்கல்களை பெற்றதாகவுமே அமையும். உலகின் மொழியியல் ஆய்வாளர் களிடையே, உலகின் மொழிகள் பற்றிய கருத்தொற்றுமை, ஏற்படாததற்கு அடிப்படைக் கரணியம், அம்மொழிக் கொள்கை, குமரிக் கண்டத்தினின்றும் தொடங்கப் பெறாததே எனலாம். குமரிக்கண்டத்தினின்றும் மொழியியல் ஆய்வுகள் தொடங்கப் பெறுமாயின், அது குழப்பங்களும் சிக்கல்களு மின்றிச் சங்கிலித் தொடர்போல் நீண்டு கொண்டே செல்லும், மேற்கண்டபட்டியலில் காணப்பெறும் மொழிக்கொள்கை எதிர்காலத்தில் மேலைநாட்டு ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் காலம் விரைவில் வரும் என்பது தெளிவு.

மேற்கண்ட பட்டியல் ஒன்றில் காணப்பெறும் சுமேரியம், ஈப்று, அறமாயிக் போன்றமொழிகள், சிந்துவெளித் தமிழினின் றும் கிளைத்தவைகளே என்றாலும் அவை மேலைநாட்டு பாபிலோனிய செமிட்டிக் மொழியுடன் கலந்து போனதால், அம்மூன்று மொழிகளையும் தற்கால மொழியியல் ஆய்வாளர் கள், செமிட்டிக் இனக் குடும்பத்துடன் இணைத்துள்ளனர் சுமேரியர் யார் ?, ஈப்று மொழி பேசியவர் யார்?, என இதுவரை யில் வரலாற்றாய்வாளர்களால் அறியப்படாத நிலையில், இம் மொழிகளை செமிட்டிக் மொழியினத்துடன் இணைத்தது. அம்மொழியினம் பேசப்பட்ட மெசப்தோமியாவில் சுமேரியம், ஈப்று, அறமாயிக் மொழிகளும் பேசப்பட்ட என்ற கரணியம் பற்றியே என அறிதல் வேண்டும்.

இந்திய ஐரோப்பிய மொழியிலான மேலை ஆரியமும், தமினினின்றும் கிளைத்த மொழியே என்பது தெளிவு. மேலை ஆரியம் கிரேக்கம், இலத்தீன் மொழிகளால் இணைக்கப் பட்டது. இன்றைய செர்மானியம், ஃபிரெஞ்சு, ஸ்பானியம், போர்ச்சுக்கீசியம், டச்சு, ஸ்காண்டிநேவிய மொழிகள், உருசியம் உள்ளிட்ட மொழிகள் யாவும் மேலை ஆரியம் என்ற குடும்பத்தி

லிருந்து பிறந்தவைகளாகும். செர்மனியின் ஆங்கிலே (Anglay) என்ற பகுதியில் வாழ்ந்திருந்த மக்கள், இங்கிலாந்தில் குடியேறியதால் அம்மக்கள் பேசிய மொழி ஆங்கிலோ - சாக்சன் எனப்பட்டது. இன்றைய ஆங்கிலத்தின் முன்மொழியும் அதுவே. வணிகத் தொடர்பால் உலகெங்கும் சென்ற ஆங்கிலேயர் தாம் சென்ற நாடுகளினின்றும் பல ஆயிரக்கணக்கானப் பிறமொழிச் சொற்களனைத்தும் ஆங்கில மொழியில் இணைத்துக்கொண்டனர். ஆங்கிலச் சொற்களுக்கான வேர்ச்சொற்களையும் மூலச் சொற்களையும் ஆங்கில மொழியில் காண இயலாது என்பதே, ஆங்கிலம், ஒரு கலப்பு மொழி யென்பதையுணர்த்தும். வீரமா முனிவர், ஆங்கிலத்தை ஒரு மொழியாகவே கருதவில்லை. அம்மொழி தனித்தன்மையற்ற பன்மொர்ழிக் கலவையென்றும், கடற்கொள்ளைக் காரார்களின் மொழியென்றும் இழித்துரைப்பார்.

இந்தியாவுக்கு கி.மு. 2000 - 1500 ஆண்டுகளில் வருகை தந்த ஆரியர்களின் தாய்மொழியான மேலை ஆரியமொழியில், தமிழின் தாக்கங்கள் இருந்தனவென்பதை மறுக்க இயலாது. பாபிலோனியத் தமிழினின்றும் பிரிந்த ஒரு நாடோடி மொழியைப் பேசிவந்த இந்திய ஆரியர், இந்தியாவில் குடியேறியதும், தாங்கள் பேசிவந்த மொழியோடு சிந்துவெளித் தமிழையும் இணைத்துக் கொண்டனர். சமற்கிருதம் என்ற கீழை ஆரிய மொழி தமிழும் ஆரியமும் கலந்த புதிய மொழியாகும். அக் கலப்பினால் ஆரிய நாடோடிமொழி செம்மைப்படுத்தப்பட்டது பற்றியே, சமற்கிருதம் மெருகேற்றப்பட்ட மொழி (Refined Language) எனப்பட்டது. ஆரியத்தினின்றே தமிழ் பிறந்ததாகக் கூறிக் கொண்டிருந்த மொழியியலார் பலர், இன்று தமது குரலைத் தாழ்த்திக்கொண்டுள்ளனர் என அறியலாம்.

ஆதாம்

படைக்கப்பட்ட முதல் மாந்தனின் பெயர் ஆதாம் என்று விவிலியம் கூறுகிறது. முதல் மூன்று அதிகாரங்களில் ஆதாம் என்ற பெயர் காணப்படவில்லை. ஆதியாகமத்தின் நான்காவது அதிகாரத்தில்தான் ஆதாம் என்ற பெயர் காணப்படுகின்றது. ஆதாம் என்ற தமிழ்ப் பெயர், ஆடம் (Adam) என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் ஒலிப்பாகும். ஈப்று மொழியில், ஆதாமா (Aadaamah) என்றே சொல்லப்பட்டுள்ளது. அம்மொழியில், ஆதாமா என்பது செம்மண்ணையும், "ஆதாம என்பது மாந்தனை

யும் குறித்த சொற்களாக உள்ளன. இவ்விரு சொற்களுக்கும் சிறிய வேறுபாடே காணப்படுகின்றது. இதனை ஒரு சொல் விளையாட்டு (word game) என்று மேலைநாட்டு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மாந்தன் மண்ணிலிருந்தே உருவாக்கப்பட்டான். என்ற செய்தியை இவ்விரு சொற்களும் விளக்குகின்றன. அதிலும் செம்மண்ணிலிருந்தே மாந்தன் உருவாக்கப்பட்டான் என அறியலாம்.

ஆதாமா - செம்மண், ஆதாம - மாந்தன், என்றும் விளக்கப் பட்டுள்ளன.

ஆ என்னும் தமிழ்ச் சொல்லுக்குத் தொடக்கம் என்பதே பொருளாகும்.

ஆநா ணிறைமதி யலர்தரு பக்கம்போல் – பரிபாடல்

பொருள்: பிறைதோன்றிய நாள்தொடங்கிய நாடோறும் வளரும் நிலவைப் போல்

தாமம் என்ற தமிழ்ச் சொல்லுக்குச் சிவப்பு என்பதே பொருளாகும்.

அலங்கு வெயிற் பொதிந்த தாமரை – குறுந்தொகை

தாமந் தலைமுனை போநீர் வையை – பரிபாடல்

முத்துத் தாம முறையொடு நாற்றுமின் – மணிமேகலை

தாம + அரை = தாமரை. அரையென்பது கொடி, செம்பூவைக் கொண்ட கொடியே தாமரை எனப்படும் வெள்ளைத் தாமரை என்று எழுதுவது தவறானது. வெள்ளரை என்பதே சரியான சொல்லாகும்.

தாமம் + வருணி (வருடை என்ற தமிழ்ச்சொல்லே) = தாமிர வருணி - செந்நீர் ஆறு.

தும் - தும்பு - துப்பு = சிவப்பு, பவழம்.

துப்பு - துப்பம் = அரத்தம், குருதி, செந்நீர்

தும்பு - தோம்பு = சிவப்பு; தோம்பு - தாம்பு - தாம்பரம் = சிவப்பு, செம்பு.

தாம்பரம் - தாம்பரை - தாமரை என்றவாறு சிவப்பை விளக்கும் சொற்கள் நீளும்.

ஆ = தொடக்கம்; தாமம் = சிவப்பு = மண் = செம்புழுதி

ஆ + தாம + மண் என்ற மூன்று தமிழ்ச்சொற்களின் கூட்டே ஆதாமா என்பதாகும்.

ஆதாமா என்ற ஈப்று சொல் செம்மண்ணைக் குறித்தது. அச்செம்மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மாந்தன், ஆதாம என்று சொல்லப்பட்டான். ஆங்கிலத்தில் ஆதாம் எனப்பட்டது.

மண் என்ற தமிழ்ச் சொல்லின் ஈற்று எழுத்தான "ண்" மறைந்து போயிற்று. ஆ + தாம + மண் → ஆ + தாம என்று திரிந்தது.

சமற்கிருதத்தில் சொல்லப்படும் ஆத்மா - ஆத்மி போன்ற சொற்களும், ஆதாமமண் என்ற தமிழ்ச் சொற்களின் திரிபே. மண் என்ற சொல்லே, Man என்று ஆங்கிலத்தில் திரிபுற்றது. அதனை மண் என்று கூறாமல் மேன் என்றனர். மண்தன்னி லிருந்து தோன்றியவனே, மண் - தன்; மாந்தன் எனப்பட்டான்.

ஆதாம், செம்மண், மாந்தன் போன்ற உலக மொழிகளில் காணப்படும் தமிழ்ச்சொற்கள் முதல் மாந்தன் தமிழனே என்ப தையும், முதலினம் தமிழினமே என்பதையும் முதன்மொழி தமிழே என்பதையும் உறுதிப்படுத்தும்.

ஏவாள்

ஈவ் (Eve) என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ்ச் சொல்லாக ஏவாள் என்ற பெயர் மாற்றப்பட்டுள்ளது. ஏவாள் என்றால், ஏவாதவள் - கட்டளையிடாதவள் - வேண்டுகோளை வைக்காதவள் என்றவாறு பொருள் விரியும். தான் உண்ட கனி யைத் தன் தலைவனையும் உண்ணுமாறு ஏவியவளை, ஏவாள் என்ற சொல்லால் அழைப்பது பொருத்தமற்றது. அச்சொல், ஈப்று மொழியின் மூலத்தினின்றும் எடுக்கப்பட்டதல்ல என்ப தால் ஏவாள் என்பது உண்மையான சரியான மொழிபெயர்ப் பன்று என்பதை அறியலாம்.

ஆயா (Ayah), அவ்வா (Hawwah) என்ற இரு சொற்களாலும், முதல் பெண்ணான ஏவாள் அழைக்கப்படுவதாக, ஈப்று மொழி கூறுகிறது. இவ்விரு சொற்களும் தமிழ்ச்சொற்களே என்பதும் தெளிவு.

ஆய் - ஆயா = வயது முதிர்ந்தவள், தாய், பாட்டி,என்றவாறு தமிழில் விரியும்.

ஆய் - ஆய்ச்சி - ஆய்ச்சியர் = முல்லை நிலத்து முதிய பெண்.

ஆய்ச்சியர் குரவையும் தீத்திறம் கேட்ட – சிலப்பதிகாரம்

ஆயமடமகளிர் எல்லீருங் கேட்டீமின் – சிலப்பதிகாரம்

ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள் – சிலப்பதிகாரம்

ஆருந்தா பத்தி ஆய்க்குடி கங்கை – மணிமேகலை

தேவியும் ஆயமும் சித்திரா பதியும் – மணிமேகலை

ஆயா என்ற ஈப்று சொல்லுக்கு, அகவை முதிர்ந்தும் வாழ்கின்ற (Tobe) என்ற பொருள் கூறப்பட்டுள்ளது. அவ்வா என்பது, அவ்வை என்ற தமிழ்ச்சொல்லே அவ்வா என்பது பாட்டியைக் குறித்த தெலுங்குச் சொல்லுமாகும்.

தமிழ்ப் பொருளையே உணர்த்தும் ஈப்று சொற்களான ஆயா, அவ்வா, ஆகியவை, முதல் பெண்ணுக்கு வழங்கப்பட்ட தால், அம்முதல் பெண் தமிழ்ப்பெண்ணே எனத் தெளியலாம். ஏவாளைக் குறித்த இவ்விரு சொற்களும், தமிழ்ச்சொற் களாகவே ஈப்று மொழியில் காணப்படுவதை நோக்குக.

முதல் பெற்றோரான ஆதாமும் ஏவாளும் குடியமர்த்தப் பட்ட இடமே, இடன் (Eden) என்ற சொல்லால், ஈப்று மொழி யில் சொல்லப்பட்டுள்ளது. இதனை ஈடன் என்னு நீட்டிச் சொல்லி, தமிழ்ப் பொருளையே மாற்றி விட்டனர். இடன் என்பது ஒரு தோட்டம் போன்றே உருவகம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தோட்டம் எங்கிருந்தது. என்பது பற்றி விவிலிய ஆய்வாளர்களிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. பாலத் தீனத்தில் இத்தோட்டம் அமைந்திருந்ததில்லை என்பதைப் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். விவிலியச் செய்தியின்படி, இத்தோட்டம் கிழக்குத் திசையில் அமைந்திருந்தது. (in the east) என. பிற்காலத்தில் விவிலியத்தை எழுதிய ஆசிரியர் தெரி விப்பதால், பாலத்தீனத்தில் வாழ்ந்திருந்த விலிலிய ஆசிரியர் பாலத்தீனத்துக்கும் கிழக்கேயிருந்த ஒரு நாட்டைச் சுட்டுகிறார் என்ற அளவில், அது தமிழகமே எனத் தெளியலாம். அக்காலத் தமிழகம் குமரிக்கண்டமே என்றும் கூறலாம். இத்தோட்டம் பற்றிய விளக்கக் குறிப்புகளால், மிகச்செழிப்புடன் காணப் பட்ட அத்தோட்டம் தமிழகத்தின் புவியியல் சூழல்களை ஒத்தே காணப்படுகின்றன. இன்றைக்கும் இலங்கையிலுள்ள ஆதாமின்

மலை என்றழைக்கப்படும் காட்டுப் பகுதியில்தான் அத்தோட்டம் இருந்தது என்பது ஒரு சிலரின் நம்பிக்கையுமாகும்.

இடன் என்பது தமிழ்ச்சொல்லே என்பது தெளிவு. Eden என்ற ஈப்றுச் சொல்லுக்கு விரிவான, பரந்த இடம் (spacious land) என்றே பொருள் கூறப்பட்டுள்ளது. இடன் என்பது ஈப்று மொழிச் சொல் அல்லவென்றும், அது சுமேரிய மொழிச் சொல்லே என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இடு - இடல் - இடம் - இடன் என்றவாறு, விரிந்த பரப்புள்ள பகுதியைக் குறிக்கின்றது. இடம் - இடன் என்றும் கூறப்படும். அது செல்வம், பொருள், பெருமை, உயர்வு என்றவாறும் அறியப்படும்.

ஈத்து அன்று அனா இடன் உடை வளன் – பதிற்றுப்பத்து

இடனின் பருவத்தும் ஒப்புரவிக் கொல்கார் – திக்குறள்

புகழ் இடன் அறியாது தொகுபுடன் குழீஇய – குறுந்தொகை.

தந்திரம் இடனே காலம் கருவியென்று – சிலப்பதிகாரம்

தமிழில் ஈற்றெழுத்துப் போலியாக வரும் சொற்கள் பல உள்ளன. கடம் - கடன் எனவும், புலம் - புலன் எனவும், நடம் - நடன் எனவும் வடம் - வடன் எனவும் சொல்லப்பட்டதைப் போல், இடம் - இடன் என்று சொல்லப்பட்டது. இடன் தமிழ்ச் சொல்லேயாதலால், அத்தோட்டமும் தமிழகத்தில் இருந்ததே எனலாம்.

நோவா (Novah) என்ற ஈப்று மொழிச் சொல்லுக்கான பொருள் யாதென விவிலிய ஆய்வாளர்களால் விளக்கப்படவில்லை. விவிலியத்தில் ஆதாமுக்கு அடுத்ததாகச் சிறப்பித்துக் கூறப்படும். மாந்தன் நோவா என்பவனே. நாவாய் என்ற மரக்கலத்தின் வழியே வெள்ளப் பாழினின்றும் அவன் தப்பித்துச் சென்றதால், நாவாயன் என்றே அழைக்கப்பட்டான். நாவாய் என்ற தமிழ்ச் சொல்லே, ஈப்று மொழியில் நோவா எனத் திரிந்துள்ளது.

நாவாய் என்ற தமிழ்ச்சொல், நால்வாய் என்ற யானையின் பொருள் குறித்துச் சொல்லப்பட்டதே எனலாம். நால்வாய் = தொங்கும் வாயைக் கொண்டயாவை.

நால்வாய், தரையில் அசைந்து செல்வதைப்போல், கடலில் அசைந்து செல்லும் மரக்கலமும் நால்வாய் எனப்பட்டது.

கால்வாய் என்றசொல், காவாய் எனத் திரிந்ததைப்போல், நால்வாய் - நாவாய் எனப்பட்டது. அது நாவி என்றும் கூறப்பட்டது.

வங்கக் கடலில் செல்லும் நாவி, வங்கநாவி எனப்பட்டது. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

வங்க நாவியி தைன்வடக் கிழிந்து – மணிமேகலை

நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் – மதுரைக்காஞ்சி

நாவாய் கேடுற நன்மரம் பற்றி – மணிமேகலை

நாவாய் என்ற தமிழ்ச் சொல், ஐரோப்பிய மொழிகளில் பரவலாக அறியப்பட்டுள்ளது.

நாவி (தமிழ்)→ நாவிஸ்(இலத்தீன்)→நாவியா (உரோமன்) →நேவி (ஆங்கிலம்)

நாவாய் - நோவா என ஈப்று மொழியில் திரிந்தது நோவா என்ற ஈப்று மொழிச் சொல்லை அடிப்படை யாகக் கொண்டு, நாவிஸ் (Navis) என்ற இலத்தீன் சொல் பிறந்தது. Navis - மரக்கலம்.

மரக்கலத்தில் உலகம் சுற்றியவர்கள் கொண்டு வந்த புதுப் புதுச் செய்திகள் Novus என்று இலத்தீன் மொழியில் சொல்லப் பட்டது. Novus = செய்திகள் இதுவே News என ஆங்கிலத்தில் திரிந்தது.

Novus என்பது புதிய என்ற பொருளிலும் சொல்லப் பட்டது. Novella = புதிய.

Novella என்பது கதையெழுதுவதில் புதிய உத்தி (New style) கையாளப்பட்டதைக் குறித்தது.

Novella - Novel என்று ஆங்கிலத்தில், திரிந்தது.

நாவல் (Novel) என்ற ஆங்கிலச்சொல், நாவாய் எனற் தமிழ்ச் சொல்லின் திரிபே. Nave (நேவ்): மரக்கலம் போன்று அமைந்திருக்கும் தேவாலயத்தின் (Church) நடுப்பகுதி.

Naval (நேவல்): மரக்கலம் போன்று உருவகம் செய்யப் பட்ட மாந்த உடலின் நெஞ்சு மற்றும் வயிற்றுப்பகுதி.

Naval chord : தொப்புள் கொடி.

Nova (புதிய) Novis: புதியவர்கள் கல்லூரி அல்லது குருமடத்தில் சேரும் முதலாண்டு மாணவர்கள்.

நாவி என்ற தமிழ்ச்சொல்லே நாவிஸ் என்று கிரேக்க இலத்தீன் மொழிகளில் கூறப்பட்டுள்ளது. நாவி என்ற சொல்லை மூலமாகக் கொண்ட பிற ஐரோப்பிய மொழிச்சொற்களாவன;

Naval, Nave, Navel, Navigable, Navigate, Navigator, Navigation,

Nova - Novice - Novus - New - News.

Novus - Novella - Novel.

Nova - Novus - Novice - Noviciate.

Navis - Navigo Nava - Naus - Navy.

நாவாய் என்ற தமிழ்ச்சொல், நோவா என ஈப்று மொழியில் திரிந்து, கிரேக்க இலத்தீன் மற்றும் ஐரோப்பிய மொழிகளில் மேலும் திரிந்து போனதை மேற்கண்ட சொற்கள் விளக்கு கின்றன.

ஈப்று என்ற சொல், முதன்முதலாக அபிறகாம் குறித்தே விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ளது. அபிறம் (Abiram) என்ற பெயரே தொடக்கத்தில் அறியப்பட்டு, பின்னர் அபிறகாம் (Abraham) என்று மாற்றப்பட்டதாக விவிலியம் கூறுகிறது. அபிறகம் என்ற பெயர், ஆங்கில ஒலிப்பில் அபிறகாம் என்று சொல்லப்பட்டது. அபி + அறம் + அகம் என்ற மூன்று தமிழ்ச் சொற்கள் இப்பெயரில் உள்ளன. இம்மூன்று சொற்களுக்கு மான விளக்கங்களும் விவிலியத்தில் காணப்படுகின்றன.

அப்பா என்ற தமிழ்ச்சொல், அப்பா (Abba) என்றே ஈப்று மொழியிலும் காணப்படுகின்றது. Appa (தமிழ்) - Abba (ஈப்று) பகர ஒலி குறைத்துச் சொல்லப்பட்டதைநோக்குக. இயேசுக் கிறித்துவும் கூட தனது இறைவனை அப்பா (abba) என்றே அழைத்ததாக, விவிலியம் கூறுகிறது. அப்பா என்ற சொல் சுருக்கமாக அப் (Ab) என்றும், அபி (Abi) அழைக்கப்பட்ட தாகவும் விவிலியம் விளக்குகிறது.

அறம் என்ற பகுதியில் (Padan Aram) வாழ்ந்திருந்த மக்களும். அபிறகாமின் மரபினரே என்பதாலும், அறம் பகுதியில் அபிறகாம் வாழ்ந்திருந்ததாலும், அவ்வின மக்களின் தந்தை யென்றே அபிறகாம் அழைக்கப்பட்டான். ஈப்று மக்களின் தந்தை என அபிறகாம் (Father of Hebrews) அழைக்கப்பட்டதால், அப்பா + அறம் என்ற தமிழ்ச் சொற்களின் திரிபான, அபி + அறம் என்றவாறு, அபிறாம் எனப்பட்டான். பிற்காலத்தில்

நாடுகளில் தந்தையாக அபிறகாம் உயர்த்தப்பட்டபோது, அவன் அறம் நாட்டுத் தந்தையாக மட்டுமின்றி, அனைத்து நாடுகளின தந்தை என அறியப்பட்டதனால் (Father of Nations), அகம் என்ற சொல்லும் இணைந்து, அபி + அறம் + அகம் என்றவாறு கூறப்பட்டு அபிறகம் எனப்பட்டான். அச்சொல்லே அபிறகாம் என நீண்டது. அகம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு நாடு என்ற பொருளும் உண்டு என அறியலாம்.

அகம் எனும் பெயர் ஊரும் நாடும்

என வடமலை நிகண்டு கூறுகிறது.

இவைபோன்று பல தமிழ்ச்சொற்களின் வேரும் மூலமும் ஈப்று மொழியில் விரிவின் கிடப்பதைத் தகுந்த சான்றுகளுடன் நிறுவலாம்.

பெருமைமிக்க இக்கல்லூரியில் எனது கருத்துக்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்த அனைவருக்கும் என் நன்றி.

OOO

சொற்பட்டியல் (தமிழ்)

ஞாயிறு
சிவன்
சேய்
பாவாணர்
விண்மீன்
தேவன்
தியோ
தேவ்
கார்த்தீ
சூரியன்
பதங்கன்
சுடரோன்
சோதி
ஆதித்தன்
எல்லை
அரியமா
விகந்தன்
அருக்கன்
திவாகரன்
அலரி
பனிப்பகை
பருக்கன்
தினமணி
பங்கயன்
பகலோன்
சூரன்
நபோமணி
விண்மணி
ஆயிரஞ்சோதி
பகல்
அகிலசாட்சி
கனலி
இனன்
உதயன்
கதிரவன்
பானு
அனலி
தினகரன்
அழலவன்
வெஞ்சுடர்
ஏழ்பரியோன்
ஒளியோன்
மித்திரன்
சவிதா
விரோசனன்
விரிச்சி
கண்ஒளி
சண்டன்
செங்கதிரோன்
தரணி
சான்றோன்
அண்டயோனி

அரிகிறணன்
மாலி
இரவி
வெய்யோன்
இருள்வலி
தபனன்
அருணன்
பரிதி
மார்த்தாண்டன்
ஆதவன்
செங்கதிர்
எல்
வெயில்
சித்திரபானு
உதி
சுவர்த்தீ
சூர்யா
நாண்
ஞாலம்
நாஞ்சில்
உடு
மேழஓரை
யாடு
ஆயன்
பகவன்
ஈதல்
ஈசன்
ஜீசஸ்
அல்
அல்குல்
அல்லம்
அல்லி

அல்லாஹ்
விடை
சிலை
தனுசு
எல்லோன்
அல்லோன்
எற்றோற்றம்
எரிதிரை
செங்கடல்
எல்லி
ஏலி
மணிமேகலை
பதிற்றுப்பத்து
குறுந்தொகை
ஐங்குறு நூறு
சிலப்பதிகாரம்
குறிஞ்சி
செஞ்சடை
ஆலமர்ச்செல்வன்
அல்கெழுகடவுள்
முக்கண் முதல்வன்
சிவசிவ
தொல்காப்பியர்
பாபிலோனியர்
குமரிக்கண்டம்
பசுபதி
பார்த்தியா
பாரோ
பெர்சியா
எகிப்து
சிந்து அவெஸ்தா
மித்ரா

எல்–யா (சொல்லாய்வு நூல்)

ஈழம்	கெரூப்
கொங்கு	ஆழியன் வால்
ஆரியர்.	ஸ்பிங்ஸ்
அறம்	துவாரபாலகர்
எல்ஓகிம்	தானி-எல்
எல்ஓ	படேசி
எல்-சடை	படா
இலு	வானதூதன்
இலா	எகோவா
நோவா	இசுரா - எல்
மொகஞ்ச தாரோ	ஆப்பு எழுத்து
சிந்துவெளி	கனானியர்
ஆதியாகமம்	சேயோன்
அபிறகாம்	சேயுஸ்
ஆதாம்	பிராமண சமயம்
காயன்	தெட்சன்
ஆப்-எல்	தெட்சாயிணி
திருமால்	தெரா
காயாம்பூ	ஹீப்ரு
அப்லு	ஊர்நகரம்
அப்சு	பெத்து-எல்
லிங்கக்குறி	பெத்-எல்
மகலல் -எல்	இசும-எல்
காவரி எல்	ஈசாக்கு
மிக்கா - எல்	ஈசா
இரவா - எல்	கனான் நாடு
ஊரி -எல்	இலவன்
பனு-எல்	தெரபிம்
அசாசு - எல்	சிலைவழிபாடு
ஏஞ் - எல்	பாப்-எல்
இடன்	கிரேக்க நாடு
தீவாள்	ஏரடோட்டஸ்

எல்லாஸ்
எலிகோன்
ஒளிம்பியா
தொல்காப்பியம்
யாமம்
யாமன்
யமன்
யாவன்
யாமின்
யாமீன்
யா-நீர்
யா மரம்
யாத்தெய்வம்
சூத்திரன்
மாளய அமாவாசை
மாளல் தீவு
தென்புலத்தார்
பிதிர்
யாமினி
யாமினியம்
யாமியம்
யா-பெத்
யவனர்
யாவனர்
யாகோவா

○○○

சொற்பட்டியல் (ஆங்கிலம்)

Divine
Yaesua
Al - chiba
A - Nair
Al - Nasl
Al - Rescha
Al - debran
Al - deramin
Al-Firk,
Algedi
Algeiba
Algenib
Algol
Yo Eli
Eloi
Heli
Sind Avesta
Metal
El-am
Urartu
Elohim
Eloah
Elshaddai
Ilu
Ila
Ugjrait

Ab-el
Mahalal - el
Gabri-el
Micha - el
Rapha - el
Uri - el
phanu - el
Azaz - el
Ang - el
Eden
kerub
prajapati
patesi
Memphis
sidon
cunieform
Yam-sup
Mt. Zion
Moses
Zeus
Dan -el
Hebrew
Terraphim
ur
Terranean
Bethu-el

Yisma-el
Isra-el
Laban
Labanon
Ellas
Hellas
Hellenic
Elliniki
Helikon
Olympim
Helheim
Helen
Helema, St
Helene
Helios
Helium
Hellow
Sin Maran

Ptrs
Blus Nile
Auster
Yavan
Ya - pet
Yamin
Yahweh
padan Aram
Yaw
Yah
Hayah
Ayah
Hawah
Bin - Yameen
Yahovah
Jehovah
Aser - Yahweh
Midian
Kethura

OOO

நூற்பட்டியல்

1. தொல்காப்பியம்

2. சிலப்பதிகாரம்

3. குறுந்தொகை

4. பதிற்றுப்பத்து

5. பரிபாடல்

6. மணிமேகலை

7. மதுரைக்காஞ்சி

8. ஐங்குறுநூறு

9. சிறுபாணாற்றுப்படை

10. திருக்குறள்

11. கலித்தொகை

12. மலைபடுகடாம்

13. புறநானூறு

14. அகநானூறு

15. பெருங்கதை

16. **வீரமாமுனிவர்**
சதுரகராதி, பதி, சூ. **இன்னாசி,** *வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம், தூய சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை, 1979.*

17. **வின்ஸ்லோ, எம்.**
தமிழ் - ஆங்கில, ஏசியன் எஜுகேஷனல் சர்வீஸ், புதுடில்லி, 2001.

18. **ஞா. தேவ நேயன் (பாவாணர்),**
தமிழர் வரலாறு நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு, 1972.

19. **ஞா. தேவ நேயன் (பாவாணர்),**
தமிழ்வரலாறு, நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு, 1967

20. **வித்துவான் க. பால சாரநாதன்,**
பதி. அபிதான மணிமாலை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, 1998.

21. **வித்துவான் க. பாலசார நாதன்,**
பதி. வடமலை நிகண்டு,டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1983.

22. **டாக்டர் உ.வே. சாமிநாதையர்,**
மணிமேகலை அரும்பதவுரை மற்றும் ஆராய்ச்சிக் குறிப்புகள், டாக்டர் உ.வே. சா. நூல்நிலையம், சென்னை - 90, 1998.

23. **டாக்டர். உ.வே. சாமிநாதையர்,**
குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே. சா. நூல்நிலையம், சென்னை - 90, 2000

24. **டாக்டர் உ.வே சாமிநாதையர்,**
சிலப்பதிகாரமூலமும், அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரையும், டாக்டர் உ.வே. சா.நூல் நிலையம், சென்னை - 90, 2001

25. **ப. இராம நாத பிள்ளை – அ. சிதம்பரனார்,**
திருமந்திரம் மூவாயிரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், ஆள்வார் பேட்டை, சென்னை - 8. 1996.

26. **ம.சோ விக்டர்,**
எபிரேயத்தின் தாய்மொழி தமிழே, வீரமாமுனிவர் பதிப்பகம், ஏலாக்குறிச்சி, 2005

27. **Ma. So. Victor,**
Tamil and Hebrew, Naller Þthippagam, Chennai, 2007.

28. **Rev. Fr. Heras,**
The Religion of Mohenjo - Daro, Journal of the University of Bombay, 1936.

29. **A.K. Bag,**
Sciene and Civilization in India, Navrang, New Delhi, 1985.

30. **Dr. N. Subramaniyan,**
History of Tamil Nad, New Century Book House, Madras, 1989.

31. **Dr. R. Mathivanan,**
Indus Script Among Dravidiam Speakers, ISIAC, Guindy, Madras, 1995.

32. **Justin Ben Adam,**
Hebrew Phrase Book, Lonely planet publications, Australia, 1999

33. **Ann Jousiffe,**
Labanon, Lonely Planet Publications, Australia, 1998.

34. **Andrew Humphregs,**
Egypt, Lonely Planet Publications,Australia, 1999

35. **Peter F. Ellis,**
The Men and Message of the Old Testament, St. Alphonsus Seminary, New York, 1962.

36. **John Mekenzy, S.J.,**
The Dictionary of the Bible, Asian Trading corporation, Banglore, 1983.

37. **Sergei Tokerev,**
History of Religion, Progess Publishers, Moscow, 1989.

38. **Bernadette Brady,**
Brady's Book of Fixed stars, Good will publishing House, New Delhi, 1963.

39. **S.R. Rao,**
Lothal and The Indus Civilization, Cosmo Publications, New Delhi, 1987.

40. **David Crystal, Editor,**
The Cambridge Encylopaedia, Second Edition, Cambridge University press, England, 1994.

41. The Jerome Biblical Commentary, Vol I and Vol II, Englewood eliffs, New Jersey, 1968.

ooo